


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

## எரிமலை - *ஒரு பார்வை*

**(ஒகஸ்ட் மாத இதழ் 1995)**

**முன்- பின் அட்டைப்படங்கள்**

இதுவரை எம் தேசத்தை எரித்து நாசமாக்கிய எதிரி, இன்று முடிந்த வரை இனத்தையே அழிப்பதன் மூலம் விடுதலை வேட்கையையும் அழித்து விடலாம் என்று எண்ணுகின்றான். சின்னச் சின்ன பூக்களையும் பிஞ்சுகளையும் உதிர்ப்பதன் மூலம், இனத்தின் ஆணிவேரையே அசைத்துவிடலாம் என்றும் தப்புக்கணக்குப் போடுகிறான்.

வீரமும் உறுதியும் செறிந்த ஒரு இனத்தையே ஒரு சில மணிநேரங்களில் ஏதிலிகளாக்குவதன் மூலம், தமிழீழத் தாயகம் என்ற பெருநெருப்பை ஊதியே அணைத்து விடலாம் என்பதும் அவனது அறியாமை.

**அக்கறைப்பூக்கள்**

தாயகநேசம் கொண்ட வாசகர்களை, ஒவ்வொரு இதழும் எப்படி எப்படிப் பேசவைக்கிறது - எத்தகைய தாக்கங்களை ஏற்படுத்துகின்றது என்பதையும் இங்கே அறிய முடிகிறது. கருத்தாழமும், ஆரோக்கியமுமிக்க ஆலோசனைகளையும் ஏற்றுக்கொள்ள எரிமலை ஒருபோதும் பின் நிற்பதில்லை.

**புலிப்பாய்ச்சலும் பின்னோக்கிப் பாய்ந்த இராணுவமும் - *வளவன்***


மிகவும் அநாகரிகமான, ஒரு பேடித்தனமுமான இந்த இராணுவ நடவடிக்கை பற்றியும், புலிகளின் எதிர்த்தாக்குதல் பற்றியும், போதுமான தரவுகளோடு அதன் விளைவுகள் பற்றியும் கட்டுரை பேசுகிறது. பிய்ந்துபோன பிஞ்சு உடல்கள் - சிதைந்து போன தமிழனின் வாழ்விடங்கள் - தேவாலயங்கள் போக்கிடம் எதுவென்று தெரியாத ஏதிலிகள் கூட்டம்.. ஆகிய விளக்கப்படங்களின் துணைகொண்டு கட்டுரை சொல்லும் துயரம் தாங்கக் கூடியதன்று.

**படைப்பு நிலையில் பிரச்சனைகளும்... - *சி.சதாசிவன்***

இன்றைய ஈழத்து இலக்கியம் என்பது போராட்ட வாழ்வுடன் ஒன்றித்ததாகவே இருக்கின்றது. இது தவிர்க்க முடியாத இயல்பு. இக்கட்டுரை ஈழத்து இலக்கியமும், அதன்போக்கும் பற்றி ஒரு குட்டி ஆய்வினை நடத்துகிறது. இது போன்று மேலும் ஆழமான ஆய்வுகளை ஈழத்து இலக்கியப்புலம் எதிர்பார்த்து நிற்கிறது. படைப்பாசிரியருக்குப் பாராட்டுக்கள்.

**புதுவையுடன் சில நிமிடங்கள்**

புலம்பெயர்ந்து வாழும் படைப்பாளிகள் தாம் புலம்பெயர்ந்த காலங்களிலிருந்த தமிழீழத்தின் நிலைமையை வைத்துக்கொண்டு இன்றைய தமிழீழத்தை கற்பனையில் வைத்து படைப்புக்களை உருவாக்கி விடக்கூடாது.




## அக்கறைப் பூக்கள்

மிகவும் ஆபத்தான, ஒரு யதார்த்த நிலைமையை தனக்கே உரிய பாணியில் எச்சரிக்கை செய்கிறார்.

**வெட்டிரும்புச் சுப்பர் விழா - பட்டிமன்றம்**

இம்மண்ணில் போர் நடந்தாலென்ன? புலியிறந்தால் நமக்கென்ன?

வேரறுந்ததாலென்ன? வீடிழந்து மக்களெல்லாம் ஆவிகலங்கி அலைந்தாலும் நமக்கென்ன?

வாழ்வையும், பணத்தையும் வீணே விரயமாக்கும் ஒரு வகை மானிடத்தை நோக்கி கவிஞர் மிக உருகி, உரத்த குரலில் கூவிக்கலங்குகிறார்.

**வெறிபிடித்த மனிதர்களும் தாயகப்பயணிகளும் - *வாசன்***

வாவிகளில் நீர் மொள்ள வந்த
சின்னப்பெண்ணின்
கண்களில் வழியும் நீர்த்துளி
அவளைச் சிலையாய் வடித்து
சிங்கள தேசத்து தெருவெங்கும்
புதிதாய் நடுக!

வாசனின் எதிர்பார்ப்பு நியாயமானதுதான். ஆனால். சின்னப் பெண்ணின் துயரம் சிங்கள தேசத்தை அசைக்குமா?

முடிவாக

'தமிழீழத்தில் எழுச்சி - கரும்புலிகள் நாள்'

புதிய சர்வதேச ஒழுங்கும் தமிழீழமும் - வே. பாலமனோகரன்

இனத்தின் துயரம் - வெளிநாடுகளில் ஆர்ப்பரித்தெழுந்த மக்கள்

வீடு, சிறுகதை - இளையவன்.

ஆகிய படைப்புக்கள் மிக ஆழமான தாக்கங்களையும் சலனங்களையும் ஏற்படுத்துகின்றன. எரிமலையில் நாம் எதிர்பார்ப்பதும் அதுதானே!

செல்விருந்தோம்பி வருவிருந்து பார்த்திருந்த தமிழினம் இன்று ஏதிலிகளாக தெருவினிலே....

தமிழனின் இலக்கு தமிழீழம்தான்!

இந்த நிலைப்பாட்டில் மாற்றமேதும் இருப்பதற்கில்லை.

இந்த இலக்கை நோக்கியே நகர்த்தும் உன் திறன் கண்டு என் நெஞ்சு நிறைகிறது.

மலரட்டும் தமிழீழம்
மகிழட்டும் மக்கள் உள்ளம்
நன்றி உனக்கு

**என்றும் இனிய அன்புடன்**
**துறையூரான்.**

எரிமலை ஆசிரியர் அவர்கட்கு,

எரிமலை இதழில் அறிவியல்சார் கட்டுரைகள் வருவது கண்டு மனம் மகிழ்வடைகிறேன். குறிப்பாக திரு. வெற்றிநிலவனின் 'கணணி' சம்பந்தமான கட்டுரைகள் மிகவும் பயனுள்ளவையாகும்.

அவரது 'தமிழ் விசைப்பலகை எவ்வாறு அமைய வேண்டும்' என்ற கட்டுரையில், கணணியில் தமிழ் விசைப்பலகையானது, தமிழ்த் தட்டச்சு முறையை விட தமிழ் அச்சுமுறையை ஒத்ததாகவே இருக்கவேண்டும் என்னும் கூற்று மிகச் சரியானதே.

மேலும் மேற்புள்ளிக்கும், பக்க, மேல், கீழ் விலங்குகளுக்குமெனத் தனித் தனி விசைகள் வைத்திருந்தாலும் கணணி அச்சிடும்போதோ, திரையில் எழுத்துக்களை எழுதுகின்றபோதோ அவற்றைப் பிரதியீடு செய்து எழுதக்கூடியதாக இருக்கவேண்டும் என்பதும் மிகச் சரியானதே.

ஆனால் தமிழ் விசைப்பலகையில் இவை கையாளப்படுவதில்லை என்னும் கூற்று பிழையானது என்றே கருதுகிறேன்.

கனடா, மற்றும் ஐரோப்பிய நாடுகளில் வாழும் புலம்பெயர்ந்த தமிழர்களால் உருவாக்கப்படும் விசைப்பலகையில் மாத்திரம் வெற்றிநிலவன் குறிப்பிட்ட பிழைகள் இருக்கின்றன.

மேற்குறிப்பிடப்பட்ட பிழைகள் களையப்பட்டு, ஆங்கில எழுத்துக்களுக்கு இணையான - தமிழ் அச்சு (Type set) போன்ற விசைப்பலகை முறைகள் ஏற்கனவே அறிமுகப்படுத்தப்பட்டு பாவனையிலும் உள்ளது. இப்படியான விசைப்பலகை முறையைக்கொண்ட தமிழ் எழுத்துக்களைப் பாவிப்பதன் மூலம் தரமான அச்சு வேலைகளைச் செய்யலாம் என்பது எனது பணிவான கருத்து.

அன்புடன் செல்வராசா
தஞ்சாவூர், தமிழ்நாடு.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

# எரிமலை

கலை பண்பாடு

அரசியல் சமூக ஏடு

★

பதின்நான்காம் ஆண்டு

பெப்ரவரி 1996

★

ஆக்கங்கள்

அபிப்பிராயங்கள்

மற்றும் தொடர்புகட்கு

★



**எரிமலை**

தாய்மண் வெளியீடு

தமிழர் ஒருங்கிணைப்புக் குழு

C/O T.C.C-France,

341, Rue des Pyrénées,

75020 Paris.

Tel: 43 58 11 42


www.tamilarangam.net

# தமிழரின் தன்னாட்சி; ஒரு ஜனநாயக உரிமை

தமிழீழ வடுதலைப் போராட்டத்தின் முன்னோக்கிய நகர்வைத் தீர்மானிப்பவர்களாக தமிழீழ மக்களும், போராடத்தை வழிநடத்தும் விடுதலைப் புலிகளுமே உள்ளனர். இதனைச் சர்வதேச சமூகம் அங்கீகரிக்கும் காலம் கனிந்து வருகிறது. பல்வேறு நாடுகளும், பல்நாட்டு அமைப்புக்களும் இத்தகைய அங்கீகாரத்தை வழங்கத் தயாராக உள்ளன. விடுதலைப் போரின் நியாயத்தை அங்கீகரிக்கவும், விடுதலைப் புலிகளே தமிழ் மக்களின் பிரதிநிதிகள் என்பதை அங்கீகரிக்கவும், தமிழ் மக்களின் தாயக உரிமையையும், தன்னாட்சி உரிமையையும் அங்கீகரிக்கவும் ஆயத்தமாக உள்ளன. அந்த அடிப்படையில், தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும், சிறீலங்கா அரசிற்கும் இடையில் மத்தியஸ்தம் வகித்து, தமிழ் மக்களின் தேசிய இனப்பிரச்சினையைச் சமாதானமாகத் தீர்த்துவைக்கவும் முயற்சிகளில் ஈடுபட்டுள்ளன. இம் முயற்சியில், சிறீலங்கா அரசாங்கத்தின் அரசியல் யாப்புக்கும், அது முன்வைத்துள்ள, சட்ட வடிவில் அமைந்த தீர்வுத் திட்டத்துக்கும் அப்பாலேயே தீர்வு இருக்கின்றது என்பதையும் அவை ஏற்றுக்கொள்கின்றன. இத்தகைய மத்தியஸ்த முன்னெடுப்புக்களை வரவேற்ற விடுதலைப் புலிகள், சிறீலங்கா அரசாங்கத்துடன் இனிமேல் பேச்சுவார்த்தை நடத்துவதானால் அது சர்வதேச மத்தியஸ்தத்தின் கீழேயே சாத்தியமாகும் என்றும் அறிவித்தனர். அதே வேளை, சமாதானப் பேச்சுவார்த்தைக்கு உகந்த சூழ்நிலை உருவாக்கப்படவேண்டும் என்றும், அதன் பொருட்டு, சிறீலங்கா அரச படைகள் தாம் ஆக்கிரமித்த பகுதிகளிலிருந்து நீங்கி, பொதுமக்கள் மீண்டும் தம் இடங்களுக்குச் சென்று சகஜ வாழ்க்கையை ஆரம்பிக்க வழிவகுக்க வேண்டும் என்றும் தெரிவித்தனர்.

ஆயினும், சிறீலங்கா அரசாங்கம் எப்போதும் போல், இராணுவத் தீர்வு முயற்சியிலேயே கண்ணும் கருத்துமாக உள்ளது. இராணுவ ரீதியாக விடுதலைப் புலிகளை நசுக்குவதன் மூலம், விடுதலைப் போராட்டத்தை குழிதோண்டிப் புதைத்து விடலாம் என்று எண்ணுகிறது. இதன் மூலம், தான் விரும்பிய அரைகுறைத் தீர்வொன்றை தமிழ்மக்கள் மீது திணித்துவிடலாம் என்றும் கருதுகிறது. இத்தகைய இராணுவத் தந்திரோபாயத்திற்கு தான் முன்வைத்த தீர்வுத்திட்டத்தை துரும்புச் சீட்டாகப் பயன்படுத்த முனைகிறது. சட்ட நகல் வடிவம் பெற்ற இத்திட்டத்தை அடிப்படையாக வைத்து வாதப் பிரதிவாதங்களை சகல மட்டங்களிலும் நடத்த விரும்புகின்றது. இவ்வாதப் பிரதிவாதங்களில், சிக்கித் தவிக்குமாறு தமிழர் தாயக ஒருமைப்பாடு என்ற விடயம் விடப்பட்டுள்ளது. இதன் பொருட்டே, மட்டக்களப்பு பிரஜைகள் குழுத் தலைவர், வணபிதா ஹறி மில்லர், கிழக்கு மாகாணத்தை மொழி ரீதியில் துண்டாடும் இத் திட்டத்தை தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள் என்று குறிப்பிட்டார். கொழும்பிலுள்ள தமிழ்க் குழுக்கள் சில, அரசாங்கத்தின் நகல் திட்டத்தை முழுமையாக ஏற்காது போயினும், அத்திட்டத்தை அடிப்படையாக வைத்து, அவற்றில் சில திருத்தங்களைச் செய்யவே விரும்புகின்றன. தமிழீழ மக்களின் தன்னாட்சி உரிமையை அங்கீகரிக்காத இத்திட்டத்திற்கு அப்பால் செல்வதற்கு அவற்றிற்குப் பலமோ, அக்கறையோ இல்லை. இன்னும் பலவீனமான நிலையில் இருக்கும் தமிழர் விடுதலைக் கூட்டணி போன்றவை, தந்ததை எடுத்துக்கொண்டாலே போதும் என்ற திருப்தியில் திளைக்கின்றன. பல குறைபாடுகளைக் கொண்டதும், தமிழ் மக்களின் அபிலாசைகளைத் தீர்க்காததுமான இத்திட்டத்தின் அடிப்படையில், கொழும்புத் தமிழ் குழுக்களுடன் சமரசம் செய்யவே அரசாங்கம் விரும்புகின்றது. இந்த முயற்சியின் மூலம் விடுதலைப் புலிகளை அரசியல் ரீதியில் ஓரங்கட்டி, இராணுவ ரீதியில் தோற்கடிக்கலாம் என்று எண்ணுகிறது.

விடுதலைப் புலிகள் தோற்கடிக்கப்பட்டால், சிங்கள மேலாதிக்கத்தை நிலைநிறுத்தும் தீர்வொன்றிற்கு கொழும்புத் தமிழ் குழுக்களிடமிருந்து எவ்வித எதிர்ப்பும் வராது என்பதையும் அரசாங்கம் நன்கு கணித்துள்ளது.

இத்தகைய அரசாங்கத்தின் தந்திரோபாயம் தமிழர்களின் நியாயமான அபிலாசைகளைத் தீர்ப்பதாகவோ, போரை முடிவுக்கு கொண்டு வந்து சமாதானத்தை நிலைநிறுத்துவதாகவோ அமையாது என்பதை சர்வதேச சமூகம் நன்கு உணர்ந்துள்ளது. இத்தகைய நிலைமையை குழப்பும் நோக்கத்துடன் சர்வதேச ரீதியிலும் சதிகார வேலைகளை அரசாங்கம் செய்ய முற்பட்டுள்ளது. தனது தீர்வுத்திட்டத்தை சர்வதேச ரீதியில் பிரபல்யப்படுத்துவதற்கும், அத்திட்டம் குறித்து கொழும்புக் குழுக்களின் கருத்தொற்றுமையைப் பெறுவதற்கும், உலகத் தலைநகரங்களில் மகாநாடுகளை நடத்த முன்வந்துள்ளது. இம்மகாநாடுகளை வெளிநாடுகளில் இருக்கும் தமிழ்ப் பச்சோந்திகள் மூலமே செய்ய முனைகிறது. இதன் வாயிலாக, அரசாங்கத்தின் தீர்வுத்திட்டத்தை அடிப்படையாக, கொழும்புத் தமிழ்க் குழுக்கள் மாத்திரமல்ல, உள்நாட்டு, வெளிநாட்டுத் தமிழர்களும் ஏற்றுக்கொள்கிறார்கள் என்று உலக சமூகத்துக்கு காட்ட விரும்புகிறது.

இச்சதி முறியடிக்கப்படவேண்டும். உலகத் தமிழினம் ஒன்றுபட்டு கடுமையான விடுதலைச் செயற்பாட்டில் ஈடுபடவேண்டும். தமிழ் மக்களால் தீர்மானிக்கப்பட்ட தன்னாட்சி உரிமையே ஜனநாயக உரிமை; அதனை உலக சமூகம் அங்கீகரிக்குமாறு செய்வதாக அவர்களது அரசியல் செயல்பாடுகள் அமைதல் வேண்டும்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

# தலைவன் இருக்குமிடமே சொர்க்கம்

www.tamilarangam.net

வலிகாமத்தில் இருந்து ஒரே இரவில், ஒரு வழிப்பாதை ஊடாக ஐந்து இலட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் இடம்பெயர்ந்த அந்த வரலாற்று நிகழ்வு உலகையே ஒரு கணம் அதிரவைத்துவிட்டது. ஆம்.... சிறீலங்கா அரசு மேற்கொள்ள இருந்த தமிழின அழிப்பை முன்கூட்டியே உணர்த்தி விடுதலைப் புலிகள் மக்களை இடம்பெயருமாறு விடுத்த வேண்டுகோளுக்கா இத்தனை சக்தி.... இந்த வரலாற்று நிகழ்வுக்குச் சில தினங்கள் முன்னர்தான், "பிரபாகரனும் அவருடைய ஆட்களும் யாழ்ப்பாணத்தை விட்டு ஓடி தென்மராட்சி, வன்னிப் பகுதிகளில் ஒழித்துவிட்டார்கள். தமிழ் மக்களின் இரட்சகர்கள் என்று கூறியவர்கள் தங்கத்தையும் பணத்தையும் எடுத்துக் கொண்டு ஓடிவிட்டார்கள்... அவர்களை நம்பாது தமிழ் மக்களே அரசபடைகளுடன் சேர்ந்து ஒத்துழையுங்கள். நீங்கள் அரசு பக்கமா புலிகள் பக்கமா என்று தீர்மானிக்கவேண்டிய நிலையில் இருக்கிறீர்கள்..." எனத் தொடர்ந்து விடுத்த செய்தியும், அதனைத் தொடர்ந்து விடுதலைப் புலிகள் விடுத்த வேண்டுகோளும்தான் இந்தக் குடியொப்பமா?

இராணுவ அட்டூழியத்தால் மாவிட்டபுரத்தில் இருந்த ஆசிரியர் ஒருவர் அங்கிருந்து இடம்பெயர்ந்து தெல்லிப்பளையிலும், பின்னர் இடம்பெயர்ந்து வட்டுக்கோட்டையிலும் இருந்தபொழுது 'சூரியக்கதிர்' இராணுவ நடவடிக்கையினால் அங்கிருந்தும் இடம்பெயர்ந்து தனது குடும்பத்துடன் சாவகச்சேரி கெருடாவிலில் ஒரு பாடசாலையில் அகதியாக இருக்கிறார்.

"என்ன சேர்.... உங்களுக்கும் இந்தக் கஷ்டம் வந்திட்டுதோ?... இந்த இடப்பெயர்வாலை சரியாத்தான் கஷ்டப்பட்டிருப்பியள் போல..." அவரும் அவருடைய குடும்பத்தவரும் இருந்த கோலத்தைப் பார்த்ததும் அப்படிக் கேட்கவேண்டும் போல இருந்தது.

"என்ன சொல்லுறியள்... இது பெரிய கஷ்டமே... நாங்கள் சுதந்திரமாக வாழவேண்டுமானால் இதைவிட இன்னும் எத்தனை கஷ்டத்தையும் அனுபவிக்கலாம் பாருங்கோ...." ஹீ... ஹீ... அவர் ஒரு மாதிரிச் சிரித்ததும் எனக்கு என்னவோ போலாகி விட்டது.

"இஞ்சை பாருங்கோ.... இராமயணத்திலை கைகேயியின் விருப்பத்தை நிறைவேற்ற தந்தையின் கட்டளைப்படி இராமன் காட்டுக்குப் போனான். அவனைத் தொடர்ந்து, அயோத்தியில் இனி இல்லை என்ற செல்வச் செழிப்போடு வாழ்ந்த அத்தனை மக்களும் தமது சொத்து, சுகம், ஆடம்பர வாழ்க்கை எல்லாவற்றையும் விட்டெறிந்துவிட்டு காட்டுக்குப் போய்க்கொண்டிருந்தார்களாம். இந்த மக்களின் இடப்பெயர்வைக் கண்டு வியப்படைந்த முனிவர், 'இவ்வளவு வசதியான வாழ்க்கையை விட்டு விட்டு ஏன் இராமனுக்குப் பின்னால் போகின்றீர்கள்?' என்று கேட்க அந்த மக்கள் என்ன சொன்னார்கள் தெரியுமா?"

அவர் ஒரு ஆசிரியருக்கே உரித்தான பாணியில் என்னைக் கேட்டுவிட்டுச் சிறிதுநேரம் என்னையே பார்த்துக்கொண்டு நின்றார்.

"சுவாமி... இராமர் இருக்கும் இடம்தான் எங்களுக்கு அயோத்தி... அதுதான் எங்களுக்கும் சொர்க்கம் என்றார்களாம்... ஐயா?... எங்களுக்கு ஒரு நல்ல தலைவன் இருக்கிறார்... அந்தத் தலைவர் பிரபாகரன் இருக்கிற இடம்தான் எங்களுக்குச் சொர்க்கம்..." அவர் அந்த அவலத்தின் மத்தியிலும் தனது நெஞ்சை நிமிர்த்தியபடி கண்களில் நீர் ததும்ப உணர்ச்சிவசப்பட்டுக் கூறியதும், என் உடல் ஒருகணம் புல்லரித்தது. இன்னல்களின் மத்தியிலும் இடம்பெயர்ந்த அந்த ஐந்து லட்சம் மக்களின் இதயங்களில் இருந்தும் ஒலிக்கும் அந்தக் குரல் ஐ. நா. வரை எதிரொலிக்கின்றதல்லவா? அது தர்மத்தின் குரல். ★★



ந. அனந்தராஜ்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# இந்து சமுத்திரப் பிராந்தியமும் தமிழீழ விடுதலையும்

தமிழீழ விடுதலைப் போராட்டத்தில், இந்தியாவின் புவயியல் அமைப்பு மிக முக்கிய இடத்தை வகிக்கிறது. புலிசார் அரசியலில், இந்தியாவின் ஆதரவை எவர் பெறுகிறார் என்பது வெற்றியை நிர்ணயம் செய்யும் விடயங்களில் ஒன்றாகிறது. இந்து சமுத்திரப் பிராந்தியத்தில், இந்தியா மேலாதிக்கம் செலுத்த முனையும் போது, அதற்குத் தென்புறமாக, மிக அண்மையில் உள்ள இலங்கைத்தீவின் இராணுவ, அரசியல் நிகழ்வுகள் அதனைப் பெரிதும் பாதிக்கின்றன. எனவே, இந்தியா, இலங்கைப்பிரச்சினையில் எவ்வித தலையீடும் இல்லாது சும்மா பார்த்துக் கொண்டிருக்கிறது என்பது ராஜதந்திரரீதியாக, விஷயத்தை எளிமைப்படுத்திக் காட்டும் வார்த்தைப் பிரயோகமே தவிர, உண்மையல்ல. சிறிலங்கா அரசாங்கத்துக்கு ஆதரவாக, தார்மீக, ஆயுத, உளவுத் தகவல் பரிமாற்றம், பயிற்சி, சதி என்ற அடிப்படையில் இந்திய மத்திய அரசு செயல்படுகின்றது. இவ் ஆதரவு, இந்தியாவுக்கும், இந்தியமக்களுக்கும், நீண்டதூரக் கண்ணோட்டத்தில் எவ்வித பயனும் தராத விடயம் மாத்திரமல்ல; குறுகியகால அடிப்படையிலும் ஆபத்தானது. சிங்கள இனவாதத்துக்குக் கைகொடுப்பதானது இந்தியாவுக்கு எதிரான சக்திகளை இலங்கைத் தீவில் எழுப்பி விடுவதாகவே முடியும். சிங்கள இனவாதம் முறியடிக்கப்பட்டு, தமிழர்களும், சிங்களவர்களும் சமத்துவ அடிப்படையில் நட்புறவை வளர்த்துக்கொள்ளும் நிலையே இந்தியாவின் தேசிய நலனுக்கும், பாதுகாப்புக்கும் உகந்ததாகும். தமிழீழ மக்கள் சுதந்திரமாய் வாழுவது தவறு; அவர்களது சுதந்திரப்போராட்டம் ஒடுக்கப்பட வேண்டும் என்று இந்தியக் கொள்கை வகுப்பாளர்கள் தீர்மானித்துக் செயல்படுவார்களேயானால், தமிழீழ சுதந்திரப் போராட்டத்தை நசுக்கி விடவும் முடியாது; கசப்புத்தான் மிஞ்சும்.

இந்தியா, சிங்கள் இனவாதத்துக்குத் துணைபோகும் போது என்ன நிகழ்கிறது? இச் சமிக்கையைத் தவறாகப் புரிந்துகொண்ட வெளிநாட்டுச் சக்திகள், இந்தியாவின் பிராந்திய அக்கறையை மீறித் தலையிட முற்படுகின்றன. பாகிஸ்த்தானும், சீனாவும் சிறிலங்கா அரசாங்கத்துக்கு ஆயுதங்களைப் பெரிய அளவில் விற்பனை செய்கின்றன. சீனா, நீர்மூழ்கிக் கப்பல்கள் உட்பட கடலடி நடவடிக்கைகளை அவதானிக்கக் கூடிய பாரிய கப்பல் ஒன்றையும், தரை இறங்கு கலம் ஒன்றையும், இரண்டு ஷங்காய் ரக பீரங்கிப் படகுகளையும் அண்மையில் விநியோகம் செய்துள்ளது. இஸ்ரேல், அமெரிக்காவின் ஆசிர்வாதத்துடன் கிவ்விர் (kfir) மிகையொலி விமானங்கள் மூன்றை எற்கனவே கொழும்புக்கு அனுப்பி வைத்துள்ளது. இன்னும் நான்கு அவ்வகை விமானங்கள் வர உள்ளன. ரஷ்யாவும், MI-17 போக்குவரத்து உலங்குவானூர்திகளையும், MI-24 தாக்குதல் உலங்குவானூர்திகளையும் சிறிலங்காவிற்கு விற்பனை செய்துள்ளது. மேலும், பிரித்தானிய அரசாங்கம், தனது ஆயுத நிறுவனங்கள் சிறிலங்காவிற்கு ஆயுதங்களை விற்பனை செய்யக் கூடாது என்றிருந்த தடையை அகற்றி, ஏராளமான வெடிபொருட்கள், எறிகணைகள், சிறுஆயுதங்கள் ஆகியவற்றை விற்று வியாபாரம் நடத்துகின்றது. அது மாத்திரமில்லாமல், 30-க்கு மேற்பட்ட, முன்னாள் SAS கொமாண்டாப் படையினர் பிரிட்டிஸ் அரசாங்கத்தின் அனுமதியுடன் யாழ்ப்பாண மண்ணில் செயல்படுவதாக அறிகிறோம். அதாவது கினி மினி சேவிஸ் (Kini Mini Service) என்ற கூலி இராணுவம் (முகப்பு அமைப்பு - Front organisation) அங்கு இராணுவ நடவடிக்கைகளில் தீவிரமாக ஒத்தாசை புரியும் செய்தி கொழும்பு வட்டாரங்களிலிருந்தே கசியத் தொடங்கியுள்ளது. முன்னாள் இந்தியப் பிரதமர், இந்திராவின் காலத்தில் திருகோணமலைத் துறைமுகத்தில் வெளிநாட்டு எண்ணைக் குதங்கள், நீர்கொழும்பில் VOA - (Voice Of America) வானொலிச் சேவை, கொழும்பில் இஸ்ரேலிய நலன் காக்கும் பிரிவு, கினி மினி சேவிஸின் செயல்பாடு என்பவை இந்தியப் பாதுகாப்பு நலன் என்ற விடயத்தில் மிக ஆபத்தான அம்சங்களாகக் கருதப்பட்டன. இந்திய தேசிய நலன்களைப் பாதுகாக்கும் முதன்மைக் காரணம் கொண்டே பின்னர் இந்திய - இலங்கை ஒப்பந்தம் ஏற்பட்டு "இந்திய அமைதி காக்கும் படையும்" அனுப்பப்பட்டது. ஆனால் இன்றோ நிலைமை வேறாக உள்ளது. முன்பி



இலங்கை - இந்திய ஒப்பந்தத்தையடுத்து விடுதலைப் புலிகள் இந்திய இராணுவத்திடம் ஆயுதங்களை ஒப்படைக்கின்றனர்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ருந்ததை விட மிக மோசமான ஆபத்துக்களை, தென் திசையிலிருந்து இந்தியா எதிர்கொள்கிறது. அதாவது இந்திய நலனுக்கு எதிரான சிங்கள இனவாதம் வெளிநாட்டுச் சக்திகளால் தாராளமாக வளர்க்கப்பட்டு வரும் பயங்கர ஆபத்தை இந்திய மத்திய அரசு உணர்வதாகத் தெரியவில்லை. குறுகிய அரசியல் லாபங்களும், பதவி மோகங்களும், ஊழல்களும் வருகின்ற பேரழிவை, இந்தியக் கொள்கை வகுப்பாளரிடமிருந்து மறைத்து வைத்துள்ளதாகவே கருத முடிகிறது. இந்தியாவுக்கு வருவதான இந்த நெருக்கடியை நீக்க தமிழ்நாடுதான் முன்வரவேண்டும். இந்திய அரசை ஈழத்தமிழரின் விடுதலைப் போராட்டத்துக்கு ஆதரவாக மாற்ற தமிழ்நாட்டு மக்களின் எழுச்சிதான் கை கொடுக்க வேண்டும். இந்த அடிப்படையில் தான், தலைவர் பிரபாகரனின், தமிழ்நாட்டுத் தலைவர்களுக்கும் மக்களுக்கும் எழுதப்பட்ட கடிதம் அமைகிறது. மேலும், இளைஞன் அப்துல் ரஃவூப்பின் மாசு மறுவற்ற உன்னதமான தியாக வேள்வி தமிழ்நாட்டு மக்களை விடுதலைப் போராட்டத்துக்கு ஆதரவாக அணி திரள்வதற்கான அறைகூவலாகவும், முன்னுதாரணமாகவும் அமைந்துள்ளது. சிங்கள இனவாதம் கட்டாய இராணுவ சேவையை மேற்கொண்டு, வெளிநாட்டு நாசகார சக்திகளின் துணையுடன் இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் பெரும் அச்சுறுத்தலாக அமைந்தால் என்ன செய்வது? தமிழீழ விடுதலைப் போராட்டம் நசுக்கப்பட்டால் போதும் என்று இந்தியா குறுகிய சிந்தனையுடன் செயற்படலாம். ஆனால் அத்துடன் விஷயம் முடிந்துவிடப் போவதில்லை. இத்தகைய பேரழிவுகளைக் கருத்தில் கொண்டே, அப்துல் ரவூப் தீக்குளித்தானா என்று எண்ணத் தோன்றுகிறது. தமிழீழ விடுதலைக்கு ஆதரவாக மட்டுமல்ல, இந்தியாவின் பாதுகாப்புக்கும் ஆதாரமாக தமிழ்நாட்டில் பேரணி ஒன்று தன் மரணத்தால் உருவாக வேண்டும் என்ற தீர்க்கதரிசனத்துடன் அப்துல் ரஃவூப் மகத்தான அத்தியாகத்தைப் புரிந்தானா என்பது ஆய்வுக்குரியதே.

தமிழ்நாடு தனது நலனையும் ஒட்டுமொத்தமாக இந்திய நலனையும் ஒருங்குசேரக் கணித்துச் செயல்படத் தொடங்கிவிட்டதாகவே கருத முடிகிறது.


இந்தியப் பாதுகாப்புக்கு ஏற்படவுள்ள ஆபத்தை இந்திய மத்திய அரசுக்கு முன்னின்று வலியுறுத்த வேண்டிய பொறுப்பை தமிழ்நாடு உணர்ந்து விட்டதாகவே தோன்றுகின்றது. தமிழீழ விடுதலைப் போராட்டத்துக்கு தமிழக மக்களும், கட்சிகளும், இயக்கங்களும் வழங்கி வரும் ஆதரவு இதற்குச் சாட்சியங்களாக அமைகின்றன. தமிழீழ விடுதலைப் போராட்டத்துக்கும், தமிழீழ மக்களுக்கும் ஆதரவாக சகல கட்சிகளும் இணைந்து நடத்திய முழுக்கடையடைப்பு, கண்டன மகாநாடு என்பன இவ்வுணர்வை வெளிப்படுத்தி நிற்கின்றன. சிங்கள இனவாதத்தின் அழிவும், தமிழீழ மக்களின் விடுதலையும் அதனடியாகப் பிறக்கின்ற, சிங்கள, தமிழ், இந்திய நட்புறவுதான் இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் அமைதியையும், பாதுகாப்பையும் கொண்டு வரும். தற்போது இந்திய அரசியலாளர்கள் கடைப்பிடிக்கும் கொள்கை, இந்து சமுத்திரத்தில் கூடுதலான வெளிநாட்டுத் தலையீட்டையும், பெரும் குழப்ப நிலையையுமே தோற்றுவிக்கும்.

**- வளவன்**

# இன்னும் விழும், இனியும் விழும்

**- புதுவை இரத்தினதுரை**

எழுக! எம்மக்காள்
அழுத விழிதுடைத்துச் சிரியுங்கள்.
ஆர்ப்பரித்துத் தெருவில் இறங்குங்கள்.
சந்திரிகாவின் இந்திரவிமானத்தை
எம் இளவல்கள் எரிந்து வீழ்த்தினர்.
பகை சுமந்து வரும் இயந்திரப்பறவையில்
இன்னொன்று உயிர் துறந்தது.
புலிகள் தோற்றுப் போனதாய்!
நேற்றுப் பிரசங்கம் செய்தவனே!
காற்றும் உனக்கில்லை என்பதை
எம் மண் காட்டிற்று.
ஊர்புகுந்து எம் உறவுகளைக் கலைத்தவர்களே!
பார்; உம்பறவைக்கு வயிறு பிளந்தது.
பிரபாரகனைப் பிடித்துத் தருபவர்களுக்கு
இரண்டரைக் கோடியா?
இறந்துபோன இந்தப்பறவை எத்தனைகோடி?
எம்மண்ணைப் பிடிக்கவா எழுந்தாய்?
சும்மா இருக்காதெம் சுடுநிலம்.
இன்னும் விழும்.
இனியும் விழும்
பகையெதிர் பார்க்காத மூலையெங்கும்
அடிவிழும்.
எழுக எம்மக்காள்!
அழுத விழிதுடைத்துச் சிரியுங்கள்
ஆர்ப்பரித்துத் தெருவில் இறங்குங்கள்.



www.tamilarangam.net

# தப்பான அர்த்தமும் தேவையற்ற அர்த்தமும்

இலங்கை தமிழ் மக்கள் இந்தியாவின் விரோதிகள் அல்ல. தமிழீழ விடுதலைப் போராட்டம் இந்திய தேசிய நலனுக்கு விரோதமானது அல்ல. இது குறித்து பல தடவை இலங்கைத் தமிழ் மக்கள் சார்பாக வெளிப்படுத்தப்பட்டும் விட்டது. ஆனால் இந்திய ஆளும் கட்சியினர் விளங்கி கொண்டார்களோ அல்ல விளங்கிக் கொள்ளவில்லையோ தெரியாது. ஆனால் இதனை இன்றும் அவர்கள் ஏற்றுக்கொண்டதாக இல்லை. தற்பொழுது வெளியாகிக் கொண்டிருக்கும் தகவல்களின்படி இந்திய ஆளும்வர்க்கம் சிங்கள பேரினவாத அரசிற்கு தனது தார்மீக ஆதரவை, ஒத்துழைப்பை வழங்கி வருகின்றது. யாழ்ப்பாணத்தில் சிங்கள இராணுவம் மேற்கொண்ட மிகப்பெரும் படை எடுப்பில் இராணுவத் தளபாட உதவிகள் - குறிப்பாக பெருமளவு எறிகணைகளை வழங்கியதாகவும் சில உத்தியோக பூர்வமற்ற தகவல்கள் தெரிவிக்கின்றன. ஆனால் இத்தனைக்கும் தமிழ் மக்களின் தமிழீழ விடுதலைப் போராட்டம் குறித்து இந்தியா கொண்ட அச்சமானது அர்த்தமற்றதும், ஆதாரமற்றதும் ஆகும். மறுவழமாக இந்திய மத்திய அரசின் செயல்பாடானது முற்றிலுமாக வஞ்சம் தீர்க்கும் நோக்கினைக் கொண்டதாக உள்ளது. 1987 இந்தியா, சிறிலங்கா சமாதான உடன்பாடு இலங்கை தமிழ் மக்கள் நலனைப் பேணாது விடினும் அது இலங்கைத் தமிழ் மக்களினால் முதலில் ஏற்றுக் கொள்ளப்பட்டது. ஏனெனில் இந்தியாவில் இருந்த நல்லெண்ணத்தின் அடிப்படையிலும், நல்லுறவின் அடிப்படையிலும்தான். ஆனால் அவ் உடன்பாடு நிறைவேறாமல் போனதும், தோல்வியுற வேண்டி வந்ததும் சிறீலங்கா அரசு உடன்பாட்டிற்குத் துரோகமாக நடக்க முற்பட்டமையும், இந்திய அரசு உடன்பாடு நிறைவேற்றம் தொடர்பாக ஒருதலைப்பட்சமாக நடக்க முனைந்தமையினாலும் ஆகும். அதாவது தமிழ் மக்களின் நலனை இந்திய அரசு பாதிப்புக்குள்ளாக்க முற்பட்ட போதே தமிழ் மக்கள் இந்தியாவுடன் விரோதம் பாராட்டவேண்டி வந்தது. அதாவது தமது பாதுகாவலர்கள் என தமிழ் மக்கள் நம்பி இருந்த இந்தியா தமக்கு துரோகம் இழைத்தபோதே பகைமை உணர்வு ஏற்பட்டது. இதனை வேறு விதமாகக் கூறுவதானால் இந்தியா, இலங்கைத் தமிழர்களின் நலன்கள் என்பதை விட தனது நலன்களிற்கு முதன்மை அளிக்க முனைந்ததும், தமிழ் மக்களின் போராட்டத்தை தனது உள்நாட்டு வெளிநாட்டு அரசியலிற்கு பயன்படுத்த முற்பட்டமையுமே தமிழ் மக்களிற்கும் இந்தியாவிற்கும் இடையில் ஏற்பட்ட முரண்பாட்டின் காரணமாகும். ஆனால் இது தமிழ் மக்களின் தவறினால் ஏற்பட்டதல்ல. தமிழ் மக்களின் உணர்வுகளை மதியாது இந்தியா மேற்கொண்ட நடவடிக்கையால் எழுந்ததாகும். இல்லாது போனால் மாலை போட்டு வரவேற்ற மக்கள் "வெளியே போ" எனக் குரல் எழுப்ப வேண்டி வந்திருக்காது. இதே சமயம் தமிழீழ விடுதலைப் போராட்டமானது இந்திய நலனிற்கு விரோதமானது, இந்திய தேசிய ஐக்கியத்திற்கு பாதகமானது என்பது போன்ற வாதங்களும் சிறுபிள்ளைத்தனமானவை. அந்நிய நாடு ஒன்றில் இருந்து சிறுபான்மை இனம் விடுதலை பெறும் போது தனது நாட்டிலும் இருக்கும் சிறுபான்மை இனம் விடுதலைப் போராட்டத்தில் இறங்கும் என்பது தவறான சித்தாந்தம் ஆகும். ஒவ்வொரு நாட்டிலும் உள்ள சிறுபான்மை இனங்களும் தம்மீது அடக்குமுறைகள் கட்டவிழ்த்து விடப்படும்போது போராட்டத்தில் இறங்குகின்றன. அவ்வாறு இல்லாது அண்டை நாட்டிலோ அன்றி உலகத்தின் வேறோரு பகுதியிலோ உள்ள தமதினம் விடுதலை பெற்றுவிட்டது என்றதும் அவை போராட்டத்தில் இறங்குவதில்லை.

இன்று உலகநாடுகளின் எண்ணிக்கை இன்றுள்ளதைப் போல் இரண்டு மடங்கிற்கு மேல் இருந்திருக்க வேண்டும். அல்லது உலகின் முழுப்பகுதியிலுமே இன்று விடுதலைப் போராட்டம் நடந்து கொண்டிருக்க வேண்டும். இது போன்றதே அகன்ற தமிழரது ஒன்றமைவிற்கான முயற்சி என்பதுமாகும். தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கு எதிரான ஒரு கற்பனைவாத கருத்துருவமாகும். தமிழகத்துக்கும் இலங்கைத் தமிழருக்குமான இணைப்பு வரலாற்றுக் காலகட்டத்திற்கும் முற்பட்டதாகும். இந்த நிலையில் ஒரு பகுதியில் அவ்வினம் ஒடுக்கப்படும் போது அண்டையில் உள்ள தனது இனத்திடம் உதவி நாடுவது, அங்கிருந்து ஆதரவுக்குரல் எழுப்பப்படுவது அபூர்வமானது ஒன்றல்ல. அதை வைத்துக்கொண்டு இருபகுதியும் இணைந்து ஒரு அகன்ற சாம்ராச்சியத்தை நிறுவ முனைகின்றன என்பது யதார்த்திற்கு புறம்பான கற்பனையாகும்.

இதனைப் பிரச்சாரப்படுத்துபவர்கள் கூறுவது போல் அந்த நாட்டில் உள்ள தமது இனங்களுடன் சேர்ந்து உலகில் உள்ள இனங்கள் எல்லாம் தனியரசையோ அன்றி சாம்ராச்சியங்களையோ நிறுவுவதானால் இன்று உலகில் 170-க்கும் மேற்பட்ட அரசுகள் இருந்திருக்க மாட்டாது. மிகக் குறுகிய எண்ணிக்கையிலான அரசுகளே இருந்திருக்க முடியும். இவ்விடயத்தில் இந்தியாவுக்கு நேரடி அநுபவமே உண்டு. அதாவது பங்காளதேசம் என்ற அரசு உருவானபோது இந்தியாவின் ஒரு பகுதியான இந்த மேற்கு வங்காள மாநிலம் பிரிந்து போகவில்லை. அதற்காக முயற்சிக்கவும் இல்லை. வங்காளதேசமும் மேற்கு வங்காளமும் சேர்ந்து ஒரு சாம்ராச்சியத்தை உருவாக்க முனையவும் இல்லை.

இத்தனைக்கும் வங்காளதேச மக்களும் மேற்கு வங்காள மக்களும் தமிழக மக்களையும் இலங்கைத் தமிழ் மக்களையும் விட நெருக்கமான பிணைப்பைக் கொண்டிருந்தவர்கள். குறிப்பாகக் கூறுவதானால், ஒன்றாகவே இருந்து பின் பிரிட்டிஸ் ஆட்சியாளர்களால் பிரிக்கப்பட்டவர்கள். ஒரே தொடர் நிலப்பரப்பு கொண்டவர்கள். ஆனால் இவற்றையெல்லாம் இந்தியாவில் ஆட்சியிலுள்ளவர்கள் இதுவரை புரியாது விட்டாலும் அன்றிப் புரிந்து கொண்டு அதற்கு முரண்பாடாக நடந்தாலும் இந்தியாவில் ஒரு தரப்பினரால் இவ்விடயம் தற்போது புரியப்பட்டுள்ளது மட்டுமல்ல வெளிப்படுத்தப்பட்டும் வருகின்றது. இந்த நிலையில் அங்குள்ள ஆட்சியாளர்கள் தமது நிலைப்பாட்டை மாற்றிக்கொள்ள வேண்டும். இல்லாவிடில் இவர்கள் ஈழத்தமிழருக்கு விரோதமானவர்கள் என்ற அவர்கள் மீதான கணிப்பு என்றுமே மாறாது போய்விடும். ★★

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# வரலாறு மீண்டும் திரும்பும் வடக்கில் மீண்டும் புலிக்கொடி பறக்கும்!

- ஆதிரையன்

**பௌ**த்த வருடம் 2539-ம் ஆண்டு துதுரு பௌர்ணமி நாளில் "யாப்பா படுன" எம்வசமானது.

சிறிலங்காவின் சிங்கள இனவாதிகளும் சிறிலங்கா அரசின் அமைச்சர்களும் இராணுவ உயரதிகாரிகளும் சூழ நடுநாயகமாக வீற்றிருந்த சிறிலங்கா ஜனாதிபதி சந்திரிகாவிடம் அரச முப்படைகளின் அமைச்சர் அநுருத்த ரத்வத்த ஒரு பேழையினுள் இருந்து பட்டோலை ஒன்றை எடுத்துக் கொடுக்கின்றார். அந்தப் பட்டோலையில் எழுதப்பட்ட வாசகமே மேற்குறிப்பிடப்பட்டுள்ளது. ஒரு வெற்றிப் பெருமிதத்துடன் அதனைப் பெற்றுக் கொண்ட சந்திரிகா "யாப்பா படுனவில் இன்று இடம் பெயர்ந்த மக்கள் மீண்டும் தமது இடங்களுக்குத் திரும்ப வேண்டும்" என அறிவிப்பொன்றையும் விடுகின்றார். இது 06-12-95 அன்று ஜனாதிபதி செயலகத்தில் நிகழ்ந்தது.



வடக்கில் சிங்கை நகரைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி செய்து வந்த தமிழ்மன்னனான கனக சூரிய சிங்கை ஆரியன் கோட்டை இராசதானிக்கு பணிய மறுக்கிறான்; பெரும்படைபலத்துடன் சென்றும் அதனைக் கைப்பற்றுவது இயலாத விடயமாகவிருக்கிறது; 6-ம் பராக்கிரமபாகுவின் வளர்ப்பு மகனான 'சபுமல்குமரய' என்னும் தளபதியின் கீழ் பெரும்படையொன்று தமிழர் பிரதேசத்தை நோக்கி வருகிறது. தமிழர்களின் உயிர்கள் பறிக்கப்பட்டும், உடமைகள் அழிக்கப்பட்டும் யாழ்ப்பாண இராச்சியம் கைப்பற்றப்படுகிறது. 'யாப்பா படுன எம் வசமானது. சிங்கைநகர் அழிக்கப்பட்டது' என அவனும் கோட்டை ராசதானிக்கு ஓலையொன்று அனுப்பினான். இது நடந்தது 1475-ம் ஆண்டு.

தமிழர்களை அடக்கி ஒடுக்கி தமது அடிமைகளாக மாற்றக் கருதி சிறிலங்கா அரசுகள் செயற்படுவது இன்று மட்டும் நிகழ்கின்ற ஒன்றல்ல. தமிழர்களின் தேசியத்தை அழித்தொழிப்பதிலும் அதன் தனித்துவங்களைச் சிதைப்பதிலும் பௌத்த இனவெறி அரசுகள் அன்றிலிருந்து இன்றுவரை தொடர்முயற்சிகளில் ஈடுபட்டுக் கொண்டே வருகின்றன.

தமிழ் மக்களுக்கெதிராக 'சூரியக் கதிர்' இராணுவ நடவடிக்கை என்ற இராணுவத் தாக்குதலொன்றை சிறிலங்கா அரச படைகள் ஆரம்பித்த போது, அது விடுதலைப்புலிகள் மீதான ஒரு மட்டுப்படுத்தப்பட்ட தாக்குதலாகத்தானிருக்கும் என அரசு கூறிவந்தது. ஆனால் பலாலி, மாதகல் போன்ற இராணுவத் தளங்களில் குவிக்கப்பட்டிருந்த 45 ஆயிரத்துக்கு மேற்பட்ட இராணுவத்தினருடனும், பெருந்தொகையான கவச வாகனங்கள், கனரக பீரங்கிகள், உலங்குவானூர்திகள், குண்டு வீச்சு விமானங்கள், கடற்படையினரின் போர்க் கப்பல்கள் போன்ற அனைத்து இராணுவ வளங்களையும் ஒன்றிணைத்து தாக்குதல்களை மேற்கொண்ட போதிலும் எளிதில் முன்னேறி விடமுடியவில்லை. இரவு பகலாக இடையறாத எறிகணை வீச்சுக்கள், துப்பாக்கி வேட்டுக்கள், விமானக்குண்டுகள் போன்றவற்றால் ஒரு குண்டு மழையை உருவாக்கியிருந்தும் எதிர்பார்த்த அளவுக்கு யாழ் நகரை நோக்கி முன்னேறுவதென்பது அரச படைகளைப் பொறுத்த வரை சுலபமானதாக இருக்கவில்லை. ஏறத்தாழ 50 நாட்களின் பின்னரே யாழ் நகரத்தைச் சென்றடைந்தனர். முன்னேற முயன்ற இராணுவத்தினரை விடுதலைப்புலிகள் ஆங்காங்கு இடைமறித்து தொடர்ச்சியாக மேற்கொண்ட தாக்குதல்களே இராணுவத்தினரின் இந் நகர்வை மந்தப் படுத்தியது.

எதிரியின் மிகப்பெரும் படை பலத்தை எதிர்கொள்ள வேண்டிய அதே நேரம் வலிகாமம் பகுதிக்குள் இருந்த மக்களையும் பாதுகாப்பாக வெளியேற்ற வேண்டிய பணியும் விடுதலைப்புலிகளுக்கு இருந்தது. ஒரே இரவில் 5 இலட்சத்துக்கு மேற்பட்ட மக்கள் இடம்பெயர்ந்து அரசின் ஆக்கிரமிப்பு முயற்சியை முறியடித்தனர். மக்கள் பாதுகாப்பாக வெளியேறிய பின்னரே இராணுவம் படிப்படியாக யாழ் நோக்கி முன்னேற முடிந்தது. யாழ்ப்பாணம் தமது பூரண கட்டுப்பாட்டுக்குள் வந்து விட்டது என இராணுவமும் அரசும் வெளி உலகுக்கு இன்று வரை கூறிக்கொண்டாலும், உண்மையில் யாழ்ப்பாணப் பகுதி முழுவதும் இராணுவத்தினரின் கட்டுப்பாட்டுக்குள் இல்லை என்பது கடந்தகால நிலைமைகளை ஊன்றி அவதானிப்பதன் மூலம் புரிந்து கொள்ளமுடியும்.

www.tamilarangam.net



யாழ்ப்பாணத்தில் இராணுவத்தினர் புடைசூழ கேணல் அனுருத்த ரத்வத்தை சிறிலங்காவின் தேசியக் கொடியை ஏற்றிவைத்தாலும் அண்மையில் அவர் கொழும்பிலிருந்து பலாலி முகாமுக்கு வந்து இராணுவம் கைப்பற்றிய பகுதிகளின் தரை வழிப்பாதைகளால் யாழ் நகருக்குள் வரவில்லை. மாறாக, மண்டைதீவு முகாமிற்குச் சென்று அங்கிருந்தே யாழ்நகருக்கு வந்து சேர்ந்தார். தமது கட்டுப்பாட்டுக்குள் உள்ள பகுதிக்குள் நடமாடவே அவர் துணியவில்லை. ஆனால் சிங்கள மக்கள் மத்தியில் நடந்த பிரச்சாரங்கள் அநுருத்த ரத்வத்தயை ஒரு 'சபுமல் குமரய' ஆக்கியுள்ளது. புலிகள் எனக் கூறிக்கொண்டு மக்களைக்கொன்றும் அவர்களின் அசையும் அசையாச் சொத்துக்களை திருடி நாசம் செய்த இராணுவமும், தளபதிகளும் இன்னும் கதாநாயகர்களாகவே தம்மை சிங்கள மக்கள் மத்தியில் காட்டிக் கொள்கின்றனர்.

யாழ்ப்பாணத்தில் விடுதலைப் புலிகளை முற்றாக துடைத்துவிட்டோம் என அரசு கூறிக் கொண்டி




www.tamilarangam.net

# நாற்பதினாயிரம் புதைகுழிகள்

பதைபதைத்து துடிதுடித்து எம் மக்கள் இறப்பது; சந்ததி சந்ததியாக அவர் தேடிய தேட்டங்கள் சூறையாடப்படுவது; அவர்கள் வாழ்விடங்கள் இடித்து தரைமட்டமாக்கப்படுவது இவை எல்லாமே இன்று சிங்களப் படைகள் புரியும் வீரசாதனைகள்; சிங்களவர்க்கு பெருமைக்கும் மகிழ்ச்சிக்குமுரிய செய்திகள். தமிழர் படும் துயரம் குறித்து ஒரு வரி தன்னும் ஒருவரும் எழுத அங்கு முன்வரவில்லை. தமிழின அழிப்பிற்காக சிங்களம் போர்க்கோலம் பூணவைக்கப்படுகின்றது. வாயைக்கட்டி வயிற்றைக் கட்டியாவது போரைத் தொடர வேண்டும் என போதிக்கப்படுகின்றது. புதிய துட்டகைமுனுவின் அவதாரம் ரத்வத்த எனவும், ஆங்கிலேயரை எதிர்த்த முன்னைய சிங்கள மன்னர் மரபுகள் பற்றியுமே அங்கு பேசப்படுகின்றது. இது ஒரு புதிய வகை இனவாதம் என்பதை உலகம் விரைவில் அறியத்தான் போகின்றது. முன்னைய காலங்களில் தானுண்டு தன்பாடுண்டு என்றிருந்த தமிழரை இனக்கலவரக் காலங்களில் வதைத்து வேடிக்கை பார்த்த குரூர மனநிலை அங்கு தோன்றுகின்றது. எனவே நோயைத் தீர்க்க வக்கற்றவர்கள் நோயின் விளைவை அழிப்பதன் மூலம் நோயிருப்பதை மூடி மறைத்து விட முடியும் என நம்புகின்றனர். எனவேதான் எந்த அரசும் மேற்கொள்ளாத பாரிய இராணுவ நடவடிக்கையை தாம் மேற்கொண்டிருப்பதாக பீற்றிக் கொள்கின்றனர்.

ஆனால் உண்மை நிலை இவ்வாறுதான் ஆகப்போகின்றது. மிக விரைவிலே சிங்கள இராணுவம் ஒரு ஆக்கிரமிப்பு இராணுவம் என்கிற பழியை உலகளாவிய ரீதியில் சுமப்பதும், காலம் காலமாக சுமக்க வேண்டிய வரலாற்றுப் பழியை சிங்கள இனமும் தாங்கி தலைகுனிவதும், என்றுமே நிரவிடமுடியாத பிளவு இரு இனங்களிடையேயும் ஏற்படுவதுமே கண்ட பயனாகப் போகின்றது. புரிந்துணர்வையும் இணக்கத்தையும் ஏற்படுத்துவதற்கு பதிலாக கொழுந்து விட்டெரியும் கோபத்தையும் என்றுமே அணைக்க முடியாத வெறுப்புத் தீயையுமே இப்போது சிங்களம் உருவாக்குகின்றது. ஏனென்றால் வரலாற்றிலிருந்து எதுவுமே கற்றுக்கொள்ளாத மூடர்களாக மட்டுமன்றி வரலாற்றை பல நூற்றாண்டு காலம் பின் தள்ளவும் சிங்களம் எடுக்கும் அபத்தமான ஆபத்தான முயற்சியின் விளைவுகள் முன் சொன்னவாறுதான் இருக்கும். இது வரலாற்று விதி.

சிங்களத்தின் நிலை இவ்வாறாக மாறப் போகையில் தமிழீழ மக்கள் நிலையோ இதற்கு முற்றிலும் எதிர்மாறானதாக மாறுகின்றது. ஏனென்றால் குறுகிய குடும்ப வட்டத்திற்குள்ளே செயற்படுபவர்கள், மாற்றங்களை, புதுமைகளை வரவேற்க தயக்கம் காட்டுபவர்கள் அச்சவுணர்வும், கீழ்படிவும் கொண்டவர்கள் என பட்டம் சூட்டப்பட்டவர்கள் எம்மக்கள். பல அடி ஆழத்திற்கு அத்திவாரமிட்டு, பல அங்குல தடிப்பில் சுவர் எழுப்பி, உயரே வேலி எழுப்பி தனது சுய இருப்பை பூரணமாக உறுதிப்படுத்தியவர்கள் இன்று என்னவாக மாறிவிட்டார்கள்? தமது சுய இருப்பை, பாதுகாப்பை கருவறுக்கவே சிங்கள அரசு கடந்த ஒக்டோபரிலிருந்து இராணுவ நடவடிக்கையை ஆரம்பித்தது என்பதில் அவர்கட்கு எள்ளளவும் ஐயம் கிடையாது. 'சூரியக்கதிர்' இராணுவ நடவடிக்கை ஆரம்பித்த காலம் தொட்டே இராணுவ நகர்வினை வெகு




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

கவனமாக அவர்கள் அவதானித்தனர். தேவையேற்பட்டால் சிங்களத்தின் கொடுங் கரத்திலிருந்து தப்புவதற்கு இடம்பெயர வேண்டி வரும் என்பதை முற்கூட்டியே மனப்பதிவு செய்து கொண்டார்கள். புலிகள் இராணுவ யதார்த்தம் குறித்து குறிப்பாலுணர்த்திய போது மறு பேச்சின்றி வரலாற்றுப் பிரளயமொன்றையே நடத்திக் காட்டினர். அதன் பயனாக அணிலேற விட்ட நாயின் நிலைக்கு சிங்கள இராணுவத்தை தள்ளிவிட்டனர். இடிந்த கட்டிடங்களும் மக்கள் இல்லா பாழ் நிலமும் இறந்து கிடக்கும் நாய், பூனைகளுமே சிங்கள இராணுவத்தை வரவேற்கின்றன. மக்கள் இல்லா வெறும் நிலத்தை கைப்பற்ற சிங்களம் எடுக்கும் முயற்சி விபரீத கேலிக்கூத்தாக விசித்திர வினையாகி விட்டது இன்று.

எனவே தமிழர் எப்போதும் ஆளுவோர்க்கு அரச விசுவாசம் காட்டுவோர்; அரசு என்கிற ஒடுக்குமுறை நிறுவனத்தை மதிப்போர் என்கிற எண்ணங்களை உடைத்து, அடிமை வாழ்வு தொடர்வதை தவிர்த்து வரலாறு இதுவரை தம் மீது சுமத்திய பழியை துடைத்தெறிந்து விட்டனர். அடிமை வாழ்வின் தொடர் சங்கிலியை உடைத்ததன் மூலம் தாம் விடுதலைக்கு தயாரான மக்கள் கூட்டம் என்பதை உலகிற்கு அறிவித்து விட்டனர் என்று எம்மக்கள் கட்டிய துணியோடு கைதடிப் பாலம் தாண்டினரோ அன்றே விடுதலையின் முதல் படியில் காலடி எடுத்து வைத்து விட்டனர். நுனிக்கொம்பிலேறிய சிங்களம் பாதாளத்தில் வீழ்வதும், வள்ளுவர் கூறுயது போல "சிறு படையான் செய்யிடம் சேரின் உறுபடையான் ஊக்கமிழந்துவிடும்." என்கிற கூற்றினை உணர்த்துவதுமே நடக்கவேண்டியவை. மீண்டும் புலிகள் முன்னை விட தீவிரமாக இயங்கப் போவது கண்டும் நாற்பதினாயிரம் புதைகுழிகள் தமிழ் மக்களால் தோண்டப்படுவது கண்டும் சிங்களம் பேரதிர்ச்சியாலும், பெரும் அச்சத்தாலும் நிலைகுலையப் போவது திண்ணம்.

★★★

ருக்கும் அதேவேளை யாழ் நகருக்குள் பரவலாக விடுதலைப்புலிகள் தமது தாக்குதல் நடவடிக்கைகளை மேற்கொண்டவாறே உள்ளனர். அண்மையில் யாழ் நகருக்குள் முகாமிட்டிருந்த அரசின் 52-வது விசேட படைப்பிரிவின் காவலரண்களை புலிகள் தகர்த்தெறிந்தது அவர்களுக்கு அதிர்ச்சியுடன் அச்சமூட்டியுள்ளது. சிறிலங்கா இராணுவம் தனது கட்டுப்பாட்டுக்குள் இருப்பதாகக் கூறும் நிலப்பரப்புக்குள் விடுதலைப்புலிகள் இன்றும் இருந்து கொண்டுதானிருக்கின்றனர். சிறிய அளவிலேனும் தொடர்ச்சியாக அங்கு மேற்கொள்ளப்படும் தாக்குதல்களினால் இராணுவத்தினரின் நிம்மதியைக் குலைத்துவருகின்றனர். அண்மையில் நெடுந்தீவில் ஈ.பி.டி.பி. முகாம் மீது மேற்கொண்ட தாக்குதல்களில் விடுதலைப்புலிகள் பெருமளவு சேதத்தை ஏற்படுத்தியதாக அரசு அறிவித்துள்ளது. அதனைவிட மூவாயிரம் புலிவீரர்கள் யாழ்ப்பாணத்துக்குள் ஊடுருவியுள்ளனர் என சிறிலங்கா இராணுவ உளவுத்துறையும் அறிவித்துள்ளது. தமது பூரண கட்டுப்பாட்டுக்குள் உள்ள பிரதேசத்தில் ஓரேநாளில் பல இடங்களில் விடுதலைப் புலிகள் தாக்குதலை மேற்கொண்டதாகக் கூறும் இராணுவம், உறக்கத்தைத் தொலைத்துவிட்டு, உயிரைக் கையில் பிடித்தபடி உள்ளது. 22-01-96-ல் உலங்குவானூர்தியொன்று வடமராட்சிக் கடற்பரப்பில் பருத்தித்துறைக்கு அண்மையில் 39 பேருடன் காணாமல் போனதாக அல்லது சுட்டு வீழ்த்தப்பட்டதாக அரசு அறிவித்ததும், 26-01-96-ல் இணுவிலில் இராணுவத்துடன் மோதி இராணுவத்துக்கு பலத்த சேதத்தை ஏற்படுத்தியதும், வாரந்தோறும் தொடர்ச்சியான கண்ணிவெடித் தாக்குதல்களை நிகழ்த்தி படையினரை திகிலடைய வைப்பதும் அண்மைய நிகழ்வுகளாகும். எப்படியும் விடுதலைப் புலிகள் தம்மை ஏதோ ஒரு நாளில் கொன்றொழிப்பர் என்பதை இராணுவம் நன்கு உணர்ந்துள்ளது. தற்போது உணவு, மற்றும் அத்தியாவசிய இராணுவ விநியோகங்கள் என்பனவற்றை வடக்குக்கு எடுத்துச் செல்வதில் அரசு சிக்கல்களை எதிர்நோக்க வேண்டியுள்ளது.



விமானங்கள் வடக்கிற்குப் பறக்க அஞ்சுகின்றன. கப்பல்கள் செல்ல மறுக்கின்றன. அரசு எவ்வளவுதான் பெருந்தொகையான ஆயுதங்களை வாங்கிக் குவித்தாலும் விடுதலைப் புலிகளின் துணிகரமான ஊடுருவல்களால் யாழ்ப்பாணத்தில் நிலை கொண்டிருக்கும் படையினரின் மனோவலிமை குறைவடைந்து கொண்டே செல்கின்றது. மக்களே இல்லாத வெட்ட வெளிப்பிரதேசத்தில் தனிமையும் பயமுமாக படையினர் மனநோயாளிகளாக மாறும் நிலை உருவாகிவருகின்றது.

சபுமல்குமரய யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றியபின் அங்கு சிலகாலம் நிலைகொண்டிருந்தான். சிறிது காலத்தின் பின் ஒரு நாள் அதிகாலைப் பொழுதில் விண் நோக்கி எழுந்த புழுதிப்படலங்களினூடே குதிரைகளின் குளம்பொலி யாழ்நகரை அண்மித்துக் கொண்டிருந்தது. சபுல்குமரவினால் துரத்தப்பட்ட கனகசூரிய சிங்கை ஆரியனின் மகன் சிங்கை பரராஜசேகரன் மீண்டும் தன் தாய் பூமியை அன்னியன் கையிலிருந்து விடுவிக்க படையோடு வந்தான். போரில் வென்றான். தமிழ்த்தேசம் மீண்டும் தலைநிமிர்ந்து கொண்டது.

சமாதான வேடம் தரித்த சந்திரிகா அரசின் படைகள் இன்று எம் அன்னை பூமியில் நிலைகொண்டிருந்தாலும் எங்கள் சொத்துக்களையும் சுகங்களையும் சேதப்படுத்தியிருந்தாலும் இந்த இனவெறிப்படைகள் இன்னும் எத்தனை நாட்களுக்கு அங்கு நிலைகொள்ளமுடியும்? மீண்டும் எம் தாய் நிலத்து வீரர்கள் எழுவர்! உலகின் நான்காவது இராணுவத்தையே வெற்றிகொண்ட பிரபாகரனின் பிள்ளைகள் உள்ளனர். வருவர். வெல்வர்! விடியும் நாள் தூரமில்லை. இருள் விலக அம்மண்ணில் புதிதாய் ஒரு சூரியன் எழும். அந்த இனிய செய்தி விரைவில் வரும். ★

www.tamilarangam.net
தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# வீழ்வதும் எழுவதுமாக

யாழ்ப்பாணம் வீழ்வதும் எழுவதுமான வரலாறு ஒரு தொடர்கதை. இது பல நூற்றாண்டு காலமாக நடந்துகொண்டு வருகின்றது. வெளி உலக, மேற்குலக காலனித்துவத்திற்கு முன்பிருந்த காலத்திலிருந்தே இந்த யாழ்ப்பாணத்தைப் பெறுவதும், வீழ்வதுமான வரலாற்று நிகழ்வுகள் நடந்து கொண்டே இருக்கின்றன. சிங்களவர் யாழ்ப்பாணத்தில் படையெடுப்பை நிகழ்த்தியிருக்கின்றார்கள்; யாழ்ப்பாண இராச்சியத்தைக் கைப்பற்றியிருக்கின்றார்கள். போர்த்துக்கீசர்கள் வந்து யாழ்ப்பாணத்தைப் பிடித்தார்கள். அதற்குப் பிறகு டச்சுக்காரர்கள், ஆங்கிலேயர்கள் என்று யாழ்ப்பாணம் மாறி மாறி அந்நிய ஆட்சியின் கீழ் வீழ்ந்தது. இந்த 500 ஆண்டு அந்நிய ஆட்சி வரலாற்றிற்குப் பிறகு, 48-ம் ஆண்டு இலங்கை சுதந்திரம் அடைந்த பின்னர் சிங்களவர்களின் ஆட்சியின் கீழ் யாழ்ப்பாணம் வந்தது.

48-ம் ஆண்டின் பின் படிப்படியாக நாம் ஒடுக்குமுறைகளைச் சந்தித்து வந்துள்ளோம். இவைக்கு எதிராக அகிம்சை முறையில் போராடினோம். கடைசியாக ஆயுதப் போராட்டம் தொடங்கி புலிகள் இயக்கம் வளர்ந்து வந்தது.

1985-ம் ஆண்டு, முதலில் யாழ்ப்பாணம் மீண்டும் தமிழ் மக்களின் கையில், புலிகளின் ஆயுதப் போராட்டத்தால் மீளப்பெறப்பட்டது. ஆனால், மீண்டும் இரண்டு ஆண்டுகளிற்குப் பிறகு இந்தியா வந்து யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றியது. 1990-ம் ஆண்டில் மீண்டும் புலிகள் வசம் யாழ்ப்பாணம் வந்தது. புலிகளின் ஆட்சி நடந்தது. இப்போது சிங்கள இராணுவம் வந்து யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றி இருக்கிறது.

## இராணுவ அரசியல் வெற்றியல்ல

ஒரு முக்கியமான விடயம் என்னவென்று சொன்னால், முன்பு இந்த யுத்த வரலாற்றுக் காலத்தில் நிகழாத ஒரு சம்பவம், இந்த சிங்கள இராணுவ ஆக்கிரமிப்பின் போது நிகழ்ந்திருக்கின்றது. அதாவது இப்போது தான் இந்த 2000 ஆண்டு கால வரலாற்றில் முதல் தடவையாக ஜன சஞ்சாரமற்று சுடுகாடாக காட்சியளிக்கும் ஒரு யாழ்ப்பாணத்தை சிங்களவர் பிடித்திருக்கின்றனர். ஒரு பிரதேசத்தை கைப்பற்றும் போது மக்கள் இல்லாமல் அந்தப் பிரதேசத்தை கைப்பற்றுவதனால் அதனை எந்த வகையிலேனும் ஒரு இராணுவ வெற்றியாகவோ, அரசியல் வெற்றியாகவோ கருதமுடியாது. யாழ்ப்பாணம் கைப்பற்றப்படுவதற்கு முன்னர் சிங்கள அரசாங்கம் உலகை ஏமாற்றும் வகையில் யாழ்ப்பாண மக்களை விடுதலை செய்யப் போகின்றோம், யாழ்ப்பாண மக்கள், புலிகளின் பயங்கரவாதத்தில் கஸ்ரப்பட்டுக் கொண்டிருக்கின்றார்கள்; இனி அவர்களிற்கு ஒரு விமோசனம் அளிக்கப் போகின்றோம், அவர்களிற்கு வாழ்வளிக்கப் போகின்றோம் என்று கூறிக்கொண்டு யாழ்ப்பாணத்தின் மீது படை எடுத்தார்கள். அவ்வளவும் உலகம் பார்த்துக்கொண்டிருந்தது. என்ன நடக்கப்போகின்றது என்பதைப் பார்த்துக்கொண்டிருந்தன நாடுகள். ஆனால் யாழ்ப்பாணத்திலிருந்தும், வலிகாமத்திலிருந்தும் ஒட்டுமொத்தமாக 5 1/2 லட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் இடம்பெயர்ந்த நிகழ்வானது சிங்கள அரசின் அரசியல் தந்திரோபாயத்திற்கும், நோக்கத்திற்கும் கிடைத்த தோல்வி என்பதை இன்று உலகமே ஒப்புக்கொண்டுள்ளது. பெரிய அளவில் படைகளைக் குவித்து யாழ்ப்பாணத்தைக் கைப்பற்ற முனைந்த சிங்கள இராணுவத்தை யாழ்ப்பாண மக்கள் ஒருபோதும் வரவேற்கவில்லை. யாழ்ப்பாணத்திற்குள் படையினர் காலடி எடுத்து வைப்பதை மக்கள் முழுமையாக எதிர்த்தார்கள் என்பது உலகறிந்த உண்மை.

## இது சாதாரண இடம்பெயர்வல்ல

யாழ்ப்பாணம் தமிழீழ மக்களின் ஒரு சமூக உறவுகொண்ட பொருளாதார மையம். தமிழீழ மக்களின் நாகரிக மையம். அப்படியானதொரு இடத்தைப் பிடித்துக்கொள்ளும் போது, அங்கிருந்த மக்கள் இடம்பெயர்ந்து, அதாவது காலம் காலமாக வாழ்ந்த மண்ணிலிருந்து, சொத்துக்களை விட்டு, தங்கள் சமூக பொருளாதார வாழ்வை விட்டு, கலாச்சார வாழ்வை விட்டு, யாவற்றையும் துறந்து வந்துள்ளனர். அப்படிப்பட்ட ஒரு இடம்பெயர்வு ஒரு சாதாரண இடம் பெயர்வல்ல.

## மக்களின் உயர்ந்த பங்களிப்பு

மக்கள் கஷ்டப்பட்டு, உடுத்த உடுப்போடு பெரிய அவலப்பட்டு வந்த நிகழ்வு ஒரு பெரிய சோகமான நிகழ்வு. தலைவரது அழைப்பை ஏற்றுக்கொண்டு எமது மக்கள் அளித்த ஒரு உயர்ந்த பெரிய பங்களிப்பு. ஆயிரக்கணக்கான மக்கள் உயிரிழக்க வேண்டியிருந்த ஒரு அவலநிலை இந்த இடம்பெயர்வால் தவிர்க்கப்பட்டுள்ளது. இதில் குறிப்பிட வேண்டிய முக்கிய விடயம், மக்கள் பட்ட கஷ்டங்கள். இது எமக்குத் தெரியும். ஆனால் யாழ்ப்பாணத்திற்குள் மக்களை நாங்கள் விட்டிருந்தால் அவர்களைப் போக வேண்டாம் என்றதொரு அறிக்கையை விட்டிருந்தால், இன்று ஆயிரக்கணக்கில் மக்கள் உயிரிழக்க வேண்டி இருந்திருக்கும். சிங்களவர் தமிழ்மக்கள் அழிவை பெரிதாக நினைக்கவில்லை. மக்களோடு சேர்த்து யாழ்ப்பாணத்தைப் பிடிக்க வேண்டும்; அதுதான் அவர்களது தந்திரோபாயம். ஆனால் நாங்கள் சொன்ன அறிவிப்பை ஏற்று மக்கள் இடம்பெயர்ந்து வந்தார்கள். இந்த இடம்பெயர்வு இராணுவ அரசியலில் பெரிய தோல்வியை சிங்கள அரசிற்குக் கொடுத்துள்ளது. அடுத்ததாக மக்கள், உடைமைகளை இழந்தாலும் அவர்கள் இடம்பெயர்ந்தமையானது புலிகளையும் மக்களையும் பிரிக்க முடியாது என்பதைக் காட்டுகின்றது. தமிழீழ மக்கள் புலிகள் இயக்கத்தோடுதான் இணைந்து நிற்கின்றார்கள். புலிகளை ஓரம்கட்டி, அந்நியப்படுத்தி, புலிகளை அழிக்க முடியும் என்ற தந்திரோபாயமும், மக்கள் இடம்பெயர்வோடு அழிக்கப்பட்டு, அடிபட்டுப்போனது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

# பெயர்வு

**சத்துருக்கன்**

அந்தத் தெருக்கள் குறுக்கும் மறுக்கும் வெட்டி வெட்டிப் பிரிந்து செல்வனவாகவே இருக்கின்றன. அதில் வாகனங்களினதும் மனிதரதும் நடமாட்டம் முன்பெல்லாம் அரிதாகவே இருக்கும். எப்போதாவது ஓரிரு தடவைகள் கரிப்புகையைக் கக்கியபடி வாகனங்கள் பாரங்களைச் சுமந்து செல்லும். இப்போது அவை மிகவும் அதிகம். அவற்றினை மிஞ்சினாற் போல் எருதுகளைப் பூட்டிய வண்டில்களும் சைக்கிள்களுமே கூடுதல். கால்நடையாக செல்வோர் தொடர்ந்து நடந்தபடியே.

தெருக்களின் அரைவாசிப் பகுதி புதிய குடியிருப்புக்களாக மாறிக் கொண்டிருந்தது.

தென்னை மரங்களின் நிரைகளின் நடுவில், அவற்றை உராய்ந்தாற் போல் அந்தத் தெரு நீண்டு செல்கின்றது. மக்கிக்கல் கொண்டு சிறிது காலத்துக்கு முன்னர்தான் அது அமைக்கப்பட்டிருக்க வேண்டும்

தெருவின் முனையில் நின்று முடிவின் எல்லையைக் கண்கள் தேடிக் கொண்டால் மனிதத் தலைகளே முடிவற்றுத் தெரியும்.

குடிசைகள் அமைக்கும் முயற்சியில் மக்கள் முனைப்புடன் செயற்பட்டுக் கொண்டிருந்தனர்.

மரங்களிலும் பற்றைகளிலும் உப்பு நீரில் புளித்துப் போன கலர் கலரான வர்ண வஸ்திரங்கள் காய்வதற்காக தவங்கிடந்தன.

அந்த இடத்தின் அடையாளமாகத் தென்படும் ஆலமரத்தின் கிளைகள் வளைந்து பரந்தோடி விசாலமாய் நின்றன. பறவைகள் சத்தமிட்டபடி எதையோ சப்பித் தொலைத்துக் கொண்டிருந்தன.

அந்த மரத்தின் நிழற் பிரதேசத்தை மக்கள் கூட்டம் நிறைத்திருந்தது. கூட்டம் நிரையின்றி அடிபட்டு முண்டியடித்துக் கொண்டிருந்தது. அவற்றினூடே உயர்ந்து தெரியும் சிகப்பு நிற மின்குமிழ் தனித்து தெரிந்தது. அண்மித்த பார்வையில் மட்டும் ஒரு 'அம்புலன்ஸ்' வண்டி என்பதை அறிய முடிந்தது.

www.tamilarangam.net

'ட்ரைவர்' மட்டும் வண்டியின் சீற்றில் அமர்ந்தபடி... வெண்ணிற ஆடையணிந்த ஓரிரு ஆண்பெண் மருத்துவர்கள். ஒவ்வொருவராய் அழைத்து எதையோ அவர்களிடம் விசாரித்து நோய் தீர்க்கும் மருந்தை கொடுப்பதாய் தெரிகிறது.

சனநெரிசல் நிறைந்த கூட்டத்தில் அவளும் கூடவே காணப்பட்டாள். அவள் நிறைமாதக் கர்ப்பிணியாக இருக்க வேண்டும். அவளைச் சூழ்ந்து இரண்டோ மூன்று பிள்ளைகள் சேலைத் தலைப்பைப் பிடித்த படி. அந்த நெரிசலிலும் அவள் பெருவிரலில் எட்டி எட்டிப் பார்த்தபடியே நின்றாள்.

சுட்டெரிக்கின்ற வெய்யிலும் வெகுநேரம் நிற்க இயலாமையும் அவளை சினத்துக்குள்ளாக்கியது. அருகில் நின்ற பெண்ணொருத்தியிடம் எதையோ கூறிவிட்டு, நிலத்தில் கால்களை நீட்டி அமர்ந்து கொண்டாள்.

இரண்டு அல்லது மூன்று நிமிடத்துக்கு ஒரு முறை பெண் தாதியின் உரத்த குரலிலான அழைப்பொலி கேட்கும். அது ஏற்கனவே பதிவு செய்யப்பட்ட பெயர்களாகத்தான் இருக்கும். ஒவ்வொரு அழைப்பிலும் ஒருவரையொருவர் முண்டியடித்துக் கொண்டு சென்றனர்.

நீண்ட நேரக் காத்திருப்பில் மனம் சலிப்புத் தட்டுவதாய் அவளுக்குத் தோன்றியது. காத்திருப்பதென்பது எத்தனைக்கு? அவளிடம் பிள்ளைகள் எதையோ வேண்டிக் கெஞ்சிக் கொண்டிருப்பதாய்...

"செல்வம் சுமதி.... செல்வம் சுமதி"

"ஓமோம் நான் தான் .. நான் தான்"

தாதியின் அழைப்புக்குப் பின் அந்தரப்பட்டு எழுந்து கொண்டாள். அவளின் பின்னே பிள்ளைகள் பின் தொடர்ந்தனர்..

எல்லோர் கண்களும் சனத்திரளின் நடுவே நின்ற அவளையே உற்றுப்பார்த்தபடி..

'டொக்டரரி'ன் ஆங்கிலம் கலந்த சில வரிகள் மட்டும் தெளிவாகக் கேட்டது. அடுக்கடுக்கான கேள்விகளை அவர் ஒவ்வொரு மனிதரிடமும் கேட்கத் தவறவில்லை. அவர்களிடம் அறிந்து கொள்ள வேண்டிய தேவைகள் அவசியமானதொன்றாகவே இருந்தது.

அவளது சேலைத்தலைப்பில் பிள்ளைகள் வடம் பிடித்து போது அது வழுக, ஒரு கையால் சேலையை செருகியபடியே 'டொக்ரரி'ன் போதனைகளையும், கேள்விகளையும், அறிவுறுத்தல்களையும் கேட்டுக் கொண்டிருந்தாள்.

"உங்கடை அவருக்கு எத்தினை வயது? என்ன வேலை செய்யிறார்?" டொக்டரரின் கேள்விக்கு பதில்கூற உன்னிக் கொண்டவள் இயலாமையால் விக்கி முனகிக் கொண்டாள்.

***

மழை லேசாகத் தூறத் தொடங்கிய போதே இராணுவ எல்லையில் வெடிச் சத்தங்கள் சரமாரியாகத் கேட்கத் தொடங்கி விட்டன. எப்போதும் இது வழமையான நிலைமை.

தொடர்ச்சியான ஷெல் வீச்சினால் அந்தப்பகுதி அதிர்ந்தபடியே நீண்டு கொண்டிருந்தது.

எங்கு வந்து மோதுமோ? எவ்விடத்தில் வந்து வீழ்ந்து, வெடித்துச் சிதறி, எவருடலை சிதறடிக்கச் செய்யுமோ என்ற பீதி எல்லோர் மனத்திலும் நிறைந்தே இருந்தது.

மழை தூறிக்கொண்டே இருந்தது. காற்றும் சற்றுப் பலமாக... இடி வானத்திலிருந்து தரையை உதைத்துக் கொண்டது. இவற்றோடு சேர்ந்தபடி இராணுவ வாகனங்களின் உறுமலொலிகள் நிலத்தை அதிரவைத்தன.

சற்றுத் தூரத்தில்தான் ஓர் இரண்டு குண்டுகள் வெடித்துச் சிதறியிருக்க வேண்டும். குண்டுச்சத்தங்களுக்கு அவர்கள் பழக்கப்பட்டவர்கள். ஆனாலும் குடிசைகள் எல்லாம் ஆரவாரப்பட்டன. அடுக்கடுக்காக ஒழுங்குபடுத்தி அமைக்கப்பட்ட அந்தக் குடிசைகள் ஒவ்வொன்றின் முன்னாலும் கூடி நின்று தூரத்தில் ஒலிபரப்பியின் அறிவித்தலை செவிமடுத்துக்கொண்டார்கள். பதட்டப்பட்டபடி அவர்களின் செயற்பாடுகள் தொடர்ந்தன.


நொடிப்பொழுதில் எல்லாக் குடிசைகளும் வெறிச்சோடிப் போயிற்று. மனிதர்கள் ஒவ்வொரு திசையாய் நடக்கத் தொடங்கினர். ஊரோடு சேர்ந்து அவனும் தன்னை இணைத்துக் கொள்ளத் தவற

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

வில்லை. பிள்ளைகள் ஒவ்வொருவரும் வெவ்வேறு திசையில்... மூத்தவன் எங்கேயோ சொல்லாமல் கொள்ளாமல் போய்விட்டான். சின்னவள் சின்னம்மா வீட்டில் - அவனால் முடிவெடுக்க இயலாது மனம் தவித்தது.

"ஊர்ப்பிள்ளையள் எல்லாம் இப்பிடித்தானே" மனைவி சமாதானம் சொல்ல, எடுத்தவற்றை கையில் கொண்டு கால்கள் நடக்கத் தொடங்கின.

ஊரோடு சேர்ந்த இந்த இடப்பெயர்வு அவர்களுக்கு மூன்றாவது தடவை. ஒவ்வொரு தடவையும் குடிபெயரும் போது எங்கே செல்வது? எங்கு தங்குவது? என்ன செய்வது எதைத் தின்று வாழ்வது? என்ற கேள்விகள் மனதில் நீண்டு விரிந்து எழும். இவற்றுக்கு விடை



காணப்படாமலே அவர்களது பயணம் தொடர்கிறது. இவ்வளவு நாளும் எப்படியோ காலத்தின் உயிர்ப்பில் சரிப்பட்டுப் போய்விடுகிறது, இவை யாவுக்குமான தீர்ப்புக்கள்.

அப்போதும் இவற்றிற்கு விடை காணாதபடியே பயணத்தை தொடர்ந்தான். மனைவி பிள்ளைகளுடன் இடையில் சின்னவளையும் அழைத்துக் கொண்டான். இடையிடையே மனைவி மூத்தவனை ஞாபகப்படுத்த அவன் அவளை சமாதானப்படுத்திக் கொண்டான்.

மழை சிணுங்கியபடியே இருந்தது. அந்தச் சன நெரிசலில் ஆளுக்காள் மாறுண்டு போவதும் ஒருவாறு தேடிப்பிடித்து ஒருவரையொருவர் நீண்ட நேரத்தின்பின் சந்திப்பதும் பிரிவதுமாய் நடைப்பயணம் தொடர்ந்தது.

வாசலில் வைச்ச உரப்பையைக் காணேல்ல. எங்கையப்பா?" அவசர அவசரமாய் பையில் போட்டுச் சுற்றியதை அப்போதுதான் அவள் அவனுக்கு ஞாபகப்படுத்தினாள். நீண்ட தூரத்தைக் கடந்த களைப்பு. திரும்பிப்போக முடியாத நிலமை. கோயில் மண்டபத்தில் களைப்பாறி, மனைவியையும் பிள்ளைகளையும் இருத்திவிட்டு, முற்றத்தில் எடுத்து வருவதாய் கூறிச் சென்றவன் இன்னும் திரும்பவில்லை.

www.tamilarangam.net

மூத்தவனுக்கு வயது இப்போது பதின்நான்கை எட்டியிருந்தது. நீண்டகாலமாக ஓடி ஓடித்திரிவது, இடம் விட்டு இடம் மாறி நாயாய் அலையும் வாழ்வு, இவையெல்லாம் அவனை புதுமனிதனாக்கும் என்ற நினைப்பு ஏற்கனவே தாய் தந்தையரிடம் இருந்தே வந்தது. "ஊரோடு சேர்ந்து தானும் ஓடுவதில் பயனில்லை" என்று இதற்கு முதல் குடிபெயர்ந்தபோது தாயிடம் கூறியிருந்தான்.

இரண்டோ மூன்றோ தினங்களுக்கு முன்னர்தான் அவனது நண்பர்கள் அவனை தனித்து விட்டு எங்கோ காணாமல் போய்விட்டனர். இது கூட அவனிடம் திருப்பத்தை ஏற்படுத்தியிருக்கக் கூடுமென்று எல்லோரும் எண்ணிக் கொண்டனர். அவனது வழி இப்போது தாய்க்கு நன்றாகவே புரிந்திருந்தது.

பறவையின் எச்சம் மேலிருந்துதான் தாதியின் சட்டையில் விழுந்திருக்க வேண்டும். அவளால் அதைத் பொறுத்துக்கொள்ள முடியவில்லை.

"சனிப்பிடிச்சதுகள்" அவளது திட்டல் பறவையின் மீதுதான். சுற்றி நின்ற மக்கள் கூட்டத்தில் இப்போது தாதி முக்கிய பாத்திரம் பெற்றிருந்தாள். எல்லோரது பார்வைகளும் அவளிலும் அவள் சட்டையிலும் தான். அருவெருத்தபடி மெல்ல நகர்ந்து நீரில் கழுவிட்டு திரும்பி வந்து, தன் வரவுக்காய் காத்து நின்ற அவளுக்கு ஏதோ குளிசைகளை கொடுத்தாள் தாதி.

"இந்தக் குளிசைகளை நீங்கள் நல்லாச் சாப்பிட்ட பிறகுதான் பாவிக்கவேணும்"

அவள் இரு கைகளையும் நீட்டி வேண்டிக் கொண்டாள்.

"அம்மா பசிக்குது" சின்னவள் சட்டையை சப்பியபடி தாயை நிமிர்ந்து பார்த்தாள். ★★

# விடுதலைச்

வலிகாமம் எதிரியிடம் பறிபோனாலும் புலிகள் இயக்கத்தின் போரிடும் வலுவும் அதற்குக் காரணமான அதன் இராணுவக் கட்டமைப்பும் எவ்வகையிலும் குறைவு அடையவோ, சிதைவு அடையவோ இல்லை என்பதே இன்று எம்மக்களுக்கு பெருத்த ஆறுதலான செய்தியாகும். சமர் ஒன்றில் பின்னடைவு ஏற்பட்டாலும் இன்னும் வெல்லப்படவேண்டிய பல சமர்கட்கு முகம் கொடுக்கும் ஆற்றல் இன்று புலிகளுக்கு வாய்த்துள்ள வரலாற்று வளர்ச்சியையும் எம் மக்கள் மனம் கொள்ளவேண்டும். புலிகள் போரிடும் ஆற்றலும், மக்களின் போராட்ட உணர்வும் ஒன்றிணையும் போதே அதன் சமன்பாடாக விடுதலை வெல்லப்படும் என்பதே இயங்கியல் விதி. இவற்றிலொன்று குறைவடைந்தாலும் விடுதலைப் போர் அதன் இலக்கை அடையாது போகும் அபாயமிருப்பதை எம்மக்கட்கு பாலத்தீனிய மக்களின் போராட்ட வரலாறு மிகத் தெளிவாக உணர்த்தி நிற்கிறது. ஏனெனில் எத்தகைய இடர்கள் வந்த போதும் போராடும் உணர்வை எப்போதுமே தம்மோடு தக்க வைத்துக்கொள்பவர்கள்; இடம்பெயர்ந்தாலும் போராடும் உணர்வை மனம் பெயர விடாத மக்கள் எனக் கூறப்படுபவர்கள் பாலத்தீனியர். 1948-ம் ஆண்டு தொட்டே தமது மண்ணிலிருந்து விரட்டப்பட்டு இடைவிடாத, தொடர்ந்த இடப்பெயர்வுகளைச் சந்தித்தவர்கள்; இன்று அவர்கள் பலவாறாக சிதறி அகதிகளாக அரபுலக நாடுகளிலும், இன்னும் பலர் ஆக்கிரமிக்கப்பட்ட பகுதிகளிலும் வாழ்கின்றனர். ஆனாலும், இன்று வரை யூதர்க்கு எதிரான தமது வெறுப்புணர்வையோ தமது விடுதலை உணர்வையோ அம்மக்கள் இழக்கவில்லை. ஆயுதம் இல்லாத நிலையிலும் கையிலகப்பட்ட கல்லை எடுத்து இஸ்ரேலிய இராணுவத்தின் மீது எறிந்து போராடும் 10 வயது பாலத்தீனிய சிறுவர் கதை உலகறிந்தது. ஆனாலும் இவற்றால் என்ன பயன்? விடுதலை உணர்விருந்தும் விடுதலை அவர்கட்கு சித்திக்கவில்லை; விடு

**- வே. பாலகுமாரன் -**


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# சமன்பாடு

தலைத் தாய் அவர்களை அரவணைக்கவில்லை. இது ஏன்? பாலத்தீனிய மக்களது போராடும் உணர்வை வழிப்படுத்தி செம்மையான வலுவான விடுதலைப் போராட்ட அமைப்பாக மாற்றவேண்டிய பணியை செய்ய அங்கு இதுவரை தகுந்த அரசியல் இராணுவ தலைமை உருவாகாமையே காரணமாகும். அதனாலேதான் இன்று அம்மக்கள் மீது அரைவேக்காட்டு அரைகுறைத் திட்டமொன்றை திணிக்க இஸ்ரவேலாலும் அமெரிக்காவாலும் முடிந்தது.

ஆனால் எமது கதையோ இதற்கு முற்றிலும் வேறானது. இவ் வேறுபாட்டைப் பூரணமாகப் புரிந்து இப்போதுள்ள வெற்றிடத்தை இடைவெளியை நிரப்ப எம்மக்கள் முன்வரும் போதே புதிய வரலாறு இம் மண்ணில் எழுதப்படும்.



வேறு வார்த்தைகளில் சொல்வதானால் நாற்பதினாயிரம் புதைகுழிகள் தோண்டும் பொறுப்பை எம் மக்களும் பங்கிட வேண்டும். இதையுணர்வதற்கு ஒருமுறை பாலத்தீனிய மக்கள் அடுக்கடுக்காக சந்தித்த அவலங்களை, அகதியாக பிறந்து வாழ்ந்து இறக்கும் துயர வரலாற்றைப் புரட்டிப் பார்த்தல் அவசியமாகின்றது. அதன்மூலமே தக்கதொரு பாடத்தை நாம் படிக்க முடியும்.

1948-ம் ஆண்டு இஸ்ரவேல் உருவாக்கப்பட்டபோதே பாலத்தீனிய மண்ணிலிருந்த சரி அரைவாசிப் பேர், அதாவது, 7 1/2 இலட்சம் பேர் அகதிகளாக ஓடத்தொடங்கினர். 1967-ம் ஆண்டுப் போரில் இஸ்ரவேல் மேற்கு யோர்தான் கரை, காசாப் பகுதி போன்றவற்றை ஆக்கிரமித்த போது மற்ற ஓட்டம் தொடங்கியது. உடனடியாகவே 5 இலட்சம் மக்கள் இடம்பெயர்ந்து அகதிகளாயினர். 1967-க்குப் பின்னர் ஒட்டுமொத்தமாகக் கணக்குப் பார்த்தபோது 15 இலட்சம் பேர் தமது மண்ணிலிருந்து வெளியேறிவிட்டமையும் 12 இலட்சம் பேர் ஆக்கிரமிக்கப்பட்ட பகுதிகளில் அடிமைகளாக வாழ நேரிட்டமையும் புலப்பட்டது. இன்றோ ஏறத்தாழ 40 இலட்சம் பேர் இவ்வாறாக அகதிகளாக பல்வேறு நிலைகளில் பல நாடுகளில் வாழ்கின்றனர். அதேவேளை 20 இலட்சம் பேர் இஸ்ரவேலிய இராணுவப் பிடியில் சிக்கிய பகுதிகளில் வாழ்கின்றனர். இவ்வாறாக முழு இனமுமே சிதைவடைந்த நிலையில் இவர்களிடம் என்ன போராடும் உணர்வு இருக்கமுடியும் என எவரும் கேட்கலாம். பாலத்தீனிய விடுதலைக்காக புறப்பட்ட பல இயக்கங்கள் தமக்குள்ளேயும் வெளியேயும் முரண்பட்டு போராட்டத்தை பாதி வழியில் நிறுத்திய பின்னரும் பாலத்தீனிய மக்கள் தமது விடுதலையுணர்வினை வெளிப்படுத்திய வண்ணமேயிருந்தனர். 1987-ம் ஆண்டு ஆக்கிரமிக்கப்பட்ட பகுதிகளில் இஸ்ரவேலிய எதிர்ப்பு கொழுந்து விட்டெரியத் தொடங்கிற்று. போராடும் தலைமை இல்லாத நிலையிலும் மக்கள் வீதிக்கு தாமாகவே இறங்கி போராடத் தொடங்கினர். "இன்ரி பாதா" அல்லது "மக்கள் எழுச்சி" என அழைக்கப்படும் இக் கிளர்ச்சி உலகமெங்கும் அவர்கள் பால் அனுதாபத்தைத் தேடித்தந்தது. ஆனால், விடுதலையை இன்னமும் தேடித் தரவில்லை. இருந்த போதும் 1967-க்குப் பின் இஸ்ரவேலியர் இவர்களது வெளியுலகத் தொடர்புகளைத் துண்டித்து தனிமைப்படுத்திய போதும், திட்டமிட்ட இராணுவ மயப்படுத்தப்பட்ட யூத குடியேற்றங்களை இம் மக்களுக்கிடையில் ஏற்படுத்திய போதும் இஸ்ரவேல் எதிர்பார்த்தது போல் பாலத்தீனிய மக்களின் விடுதலை உணர்வை மழுங்கடிக்க முடியவில்லை. 1987-ம் ஆண்டிலிருந்து அடக்குமுறை தாளாத மக்கள் இயல்பாகவே கிளர்ச்சியொன்றைத் தொடங்கினர். கையிலகப்படும் கற்கள், இரும்புத் துண்டங்கள், பெற்றோல் குண்டுகள், நாட்டுப்புறத் தயாரிப்புக் கைக்குண்டுகள் இவர்களது பிரதான ஆயுதங்களாகின. மக்கள் குழுமி கல்லால் அடித்தே பல இஸ்ரவேலிய இராணுவத்தினரைக் கொன்றனர். துரோகிகளை, உளவாளிகளை பகிரங்கமாகச் சந்திகளில் கட்டிவைத்து தாமே தாக்கிக் கொன்றனர். முழுமையாக 5 ஆண்டுகளுக்கு மேலாக இக் கிளர்ச்சியை அவர்கள் மேற்கொண்டனர். இதன் விளைவாக அங்கு கமாஸ், ஜிகாத் போன்ற இசுலாமிய மத அடிப்படைவாத, தீவிரப்போக்குள்ள அமைப்புக்கள் தோன்றின. அது வேறு கதை.

இப்போது எம்மக்களுக்கு நிலைமைகள் தெளிவாகியிருக்கும். பாலத்தீனிய மக்களின் விடுதலையுணர்வினை, எந்த நெருக்கடியின் போதும் தன்மான, இனமான உணர்வினைக் கைவிடாத இயல்பினை நாம் மனம் கொள்ளல் வேண்டும். அதேவேளை வரலாறு பிரசவித்த வரலாறு பல சோதனைகள் வைத்து தேர்ந்தெடுத்த அற்புதமான தலைமை தமிழினத்திற்கு வாய்த்திருக்கிற வாய்ப்பையும் எண்ணிப்பார்க்க வேண்டும். எது இருந்தும் அது இல்லாமையால் பாலத்தீனியர் படும் துயரையும் கருத்திற்கொள்ள வேண்டும். எனவே வரலாறு வெற்றிடமாக விட்டிருக்கும் சமன்பாட்டில் தம்மைப் பொருத்த வேண்டும். இதுவரை எம்மக்கள் செய்த பங்களிப்புகள் யாவும் பலனளிக்க வேண்டுமானால் "ஆற்றல் மிகு கரங்களிலே ஆயுதங்கள் ஏந்தி போராடுவதற்கு" தமது பிள்ளைகளை மனமுவந்து அனுப்ப வேண்டும். அப்போது விடுதலைச் சமன்பாடு பூரணமாகிவிடும்.

மக்கள் + புலிகள் = விடுதலை

என்றாகிவிடும். வள்ளுவன் கூறிய வாய் மொழியே இன்று எமக்கு விதி.

"செய்தக்க அல்ல செயக் கெடும் செய்தக்க செய்யாமையாலும் கெடும்" செய்யவேண்டியவற்றை செய்ய வேண்டிய நேரத்திலே செய்யவேண்டும் என்பதே எமக்கான கதி என்கிறான் வள்ளுவன்.

★★

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

# வாங்க மட்டுமல்ல வழங்கவும் தகமை தேவை

www.tamilarangam.net



சில விடயங்களை சொல்லித் தான் தெரியவேண்டும் என்பதல்ல. அதேபோன்று சிலர் சொல்லாததி னால் சிலவிடயங்கள் அங்கீகாரம் பெறாமல் போய்விடும் என்பதும் அல்ல.

இவ்வாறே சிறீலங்கா வெளிவிவ கார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்கா மர் தமிழீழத் தேசியத் தலைவர் ஆற் றல் பற்றியும் வரலாற்றில் அவரின் பங்கு பற்றியும் தெரிவித்த கருத்து மாகும்.

“பிரபாகரன் தமிழ் மக்களுக்குச் செய்துள்ளவை பற்றி தமிழர்கள் பெருமைப்படுகின்றார்கள். தமிழர்க ளால் வெற்றிகரமாகப் போரிடமுடி யும் என அவர் காட்டியுள்ளார். இன்று அவர் தனது இலக்கை அடைகின்றார். அவர் இதுவரை செய்ததிற்காக, தமிழ் மக்களின் வர லாற்றில் அவருக்கு இடம் ஒதுக்கப் பட்டுள்ளது” இதுவே, கதிர்காமர் தலைவர் பிரபாகரனின் ஆற்றல், திறன் குறித்து வெளியிட்ட கருத்துக ளாகும்.

ஆனால், இதனை தமிழ் இனத் தின் கோடாரிக் காம்புகள் போன்று செயற்பட்டு வரும் கதிர்காமர் போன்றவர்கள் கூறவேண்டும் என இங்கு எவரும் எதிர்பார்த்திருக்க வில்லை. இதனை உலகிலுள்ள பலர் ஏற்கனவே ஏற்றுள்ளதோடு, அது குறித்து தமது கருத்துக்களை யும் தெரிவித்தும் உள்ளனர்.

சர்வதேச ரீதியாக தமிழீழ விடு தலைப் போராட்டத்தை ஆதரிப் பவர்களும் சரி, எதிர்ப்பவர்களும் சரி, இன்று உலகில் உள்ள கெரில் லாத் தலைவர்களில் பிரபாகரனே ஆற்றலும், செயற்பாடும் மிக்க தலை வர் என ஏற்றுக்கொண்டுள்ளனர். இதனைப் பல அரசுகள், பத்திரிகை யாளர்கள், இராணுவ விமர்சகர்கள் எனப் பல தரப்பும் குறிப்பிடாம லும் இருக்கவில்லை. சேகுவராவிற் கும், மாவோ சேதுங்கிற்கும் நிகராக தலைவர் பிரபாக ரனை ஒப்பிட்டுக் கூறப்படு வதுண்டு.

இதேசமயம், விடுதலைப் புலிகளுடன் போரிட்ட இரு நாட்டு இராணுவத்திலுமுள்ள அதிகாரிகள் கூட தலைவர் பிரபாகரனின் ஆற்றல் குறித் தும், அவர் பின்னால் அணி திரண்டுள்ள போராளிகளின் திறன் குறித்தும் தமது உயர் வான மதிப்பீட்டை வெளிப்படுத் தாமல் இருக்கவில்லை. சில சமயங் களில், இராணுவ தரப்பினருக்கு விடுதலைப் புலிகளின் ஆற்றல் உதாரணத்திற்குச் சுட்டிக்காட்டப் படுவதும் உண்டு. இதற்கும் மேலாக சிங்களப் பேரினவாதப் பத்திரிகை யாளர்கள், விமர்சகர்கள் கூட விரும் பியோ அன்றி விரும்பாமலோ, தலைவர் பிரபாகரனின் ஆற்றல்கள் குறித்து ஒப்புக்கொண்டுள்ளனர். இதேசமயம், மேவின்டிசில்வா தனது ‘லங்கா காடியன்’ சஞ்சிகையில் கடந்த தசாப்தத்தின் நாயகனாகத் தலைவர் பிரபாகரனை தெரிவுசெய் தும் இருந்தார்.



இதேவேளை, தமிழீழ மக்கள்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

மட்டுமல்ல, உலகத்திலுள்ள தமிழ் மக்கள் அனைவருமே தலைவர் பிரபாகரனின் ஆற்றல், தலைமைத்துவம் குறித்தும், அவர் தமிழர்களை உலகில் தலை நிமிர்ந்து நடக்க வைத்துள்ளமை குறித்தும் தலைவர் பிரபாகரன் காலத்திலேயே தமிழருக்கென ஒரு தனிநாடு உருவாக வேண்டும் என்று ஆவலாகவுமுள்ளனர்.

அதிலும் விசேடமாகக் கூறுவதானால், சங்கிலியன், பண்டாரவன்னியன் போன்ற மன்னர்களின் பின்னர் தமிழருக்கென இராணுவ வரலாற்றை தலைவர் பிரபாகரனே உருவாக்கினார். இதுவே தமிழர்களின் வரலாற்றில் சோழப் பேரரசின் பின்னர் வலிமை பொருந்தியதும் சீரமைக்கப்பட்டதுமான ஒரு இராணுவ அணியாகவும் வரலாற்றில் பதியப்பட்டும் விட்டது. அத்தோடு, நவீன உலகில் தமிழருக்கென ஒரு படையணியை நவீன போர்க்கலங்களுடன் உருவாக்கிய பெருமையையும் தலைவர் பிரபாகரனுக்கு உண்டு.

இந்த நிலையில், தமிழர்களின் வரலாற்றில் தலைவர் பிரபாகரனுக்கு இடம் ஒதுக்கப்படுவதென்பது யாரும் சொல்லித்தான் தெரிய வேண்டும் என்பதல்ல. தமிழர் வரலாற்றில் தலைவர் பிரபாகரனின் இடம் நிரந்தரமானது. இன்றைய நிலையில்கூட இரு தசாப்தங்களின் வரலாற்றை தலைவர் பிரபாகரனின் பங்கின்றி குறிப்பிட்டுவிட முடியாது. அதைவிட, முக்கியமானது தலைவர் பிரபாகரனின் காலத்தை எல்லைகளாகக் கொண்டே தமிழரின் வரலாற்றை இனிப்பகுத்தாய முடியும்.

இதற்கு மேலாக, சிறீலங்காவின் வரலாறே தலைவர் பிரபாகரனின் வரலாறின்றி பகுப்பாய்வு செய்ய முடியாதென்பதாகும். தலைவர் பிரபாகரன் தலைமையில் இடம்பெற்று வரும் தமிழீழ விடுதலைப் போராட்டமானது, அந்தளவிற்கு சிறீலங்காவில் அரசியல், இராணுவ வரலாற்றில், மிகவும் முக்கியமானதும், எதிர்பார்க்காத திருப்பங்களையும் ஏற்படுத்தியுள்ளது எனலாம்.

இதற்கு அப்பால், தென்னாசியாவின் அரசியல் இராணுவ வரலாற்றிலேயே தலைவர் பிரபாகரன் தாக்கத்தை விளைவிக்காமல் இல்லை. தென்னாசியாவில் தன்னை வல்லரசாக நிலைநிறுத்த முனைந்த இந்தியா தலைவர் பிரபாகரனின் இராணுவ - அரசியல் - இராஜதந்திர அணுகுமுறை காரணமாக பெரும் தோல்வியை சந்திக்க வேண்டிய நெருக்கடியான கட்டத்தை அடைந்தது. இது தென்னாசியாவில் இந்தியாவின் வெளியுறவுக்கொள்கையில் குறிப்பிடத்தக்க அளவில் பாதிப்பையும், மாற்றத்தை யும் ஏற்படுத்தியிருந்தது.



இந்த நிலையில் தலைவர் பிரபாகரன் பற்றியும், அவரின் வரலாறு தமிழர் வரலாற்றில் இடம்பெறுவது பற்றியும் லக்ஷ்மன் கதிர்காமர் பேசுவது வேடிக்கைகளாகவே இருக்கின்றது. ஏனெனில், தலைவர் பிரபாகரனின் வரலாற்றிற்கு சான்றிதழ் வழங்க லக்ஷ்மன் கதிர்காமர் போன்று வரலாற்றில் எங்கோ கிடந்துவிட்டு சந்தர்ப்பவசத்தால் மேடைக்கு கொண்டுவரப்பட்டவர்களுக்கு என்ன அருகாதை உண்டு?

அதிலும் தமிழ் இனத்தை அழித்தொழிக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள ஒரு பேரினவாத அரசிற்குத் துணைபோய்க்கொண்டும் - அவர்களின் எடுபிடிகளாகச் செயற்பட்டுக்கொண்டும் - தமிழ் மண்ணின் வாசனையை அறியாமலும், தமிழ் மொழியே வாயில் புகாமலும் இருக்கும் லக்ஷமன் கதிர்காமர் போன்றவர்களுக்கு தமிழ் இனத்தைப் பற்றியும் அதன் தேசிய தலைமை குறித்தும், வரலாற்றில் அவற்றின் பங்கு பற்றியும் குறிப்பிடுவதற்கு என்ன தகமை உண்டு. காக்கை வன்னியர்களும், எட்டப்பர்களுக்கும் வரலாறுகளில் இடம் உண்டுதான், ஆனால், அது எப்பொழுதும் துரோகத்தின் வரலாறாகவே பதியப்பட்டிருக்கும். ★★

www.tamilarangam.net

**இன்றைய யுத்தத்தின் தீச்சுவாலைகள் எல்லோரையும் தீண்டி வருகிறது. ஆண் பெண் என்ற வேறுபாடின்றி, சாதி, வர்க்க வேறுபாடின்றி, சிறியோர் முதியோர் என்ற வேறுபாடின்றி எல்லோரையும் தீண்டியிருக்கிறது. இது எமது இனத்திற்கு எதிராக, எமது இனத்தை அழிக்கும் நோக்கத்துடன் நடத்தப்படும் யுத்தம். இந்த யுத்தத்தை நாம் அசட்டை செய்ய முடியாது. இந்த யுத்தத்தை நாம் துணிவுடன் எதிர் கொள்வதைத் தவிர எமக்கு வேறு வழியில்லை.**

**நாம் ஒன்றுபட்ட மக்களாக, ஒரே தேசிய சக்தியாக அணிதிரண்டு எமது எதிரியின் சவாலை எதிர் கொள்ள வேண்டும். மலைபோல உறுதியுடன் நாம் ஒன்று குவிந்து நின்றால் எம்மை எத்தகைய சக்தியாலும் அழித்துவிட முடியாது.**



**தமிழீழத் தேசியத் தலைவர் திரு. வே. பிரபாகரன் அவர்கள்.**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றுவதாகக் கூறிக் கொண்டு பெருமெடுப்பில் இன அழிப்பை மேற்கொள்வதற்கு சிறிலங்கா அரசு மிகப்பெரிய இராணுவ நடவடிக்கையை வலிகாமம் பகுதியில் மேற்கொண்டது. அரசின் இந்தத் திட்டத்தை எமது மக்கள் முறியடித்து சிறிலங்கா இராணுவத்தின் நடவடிக் கையை கேலிக்கூத்தாக்கினர். இந்த இராணுவ நடவடிக்கை பற்றியும் அதை எமது மக்கள் எதிர்கொண்ட விதம் பற்றியும் இந்த இடம் பெயர்வில் பங்கு கொண்ட கலை, இலக்கியப் படைப்பாளிகள் சிலரிடம் கேட்டபோது.....**

1. மிகப் பெரிய இராணுவ நடவடிக்கையை மேற்கொண்டபடி வலிகாமத் தீவுள் தமிழ் மக்களைச் சிறைப்பிடிக்க சிறிலங்கா இராணுவம் நினைத்தது. இதை எமது மக்கள் முறியடித்த விதம் குறித்து என்ன கூறுகிறீர்கள்?
2. யாழ்ப்பாண சமூகம் தனது வாழ் முறைமைகளையும் கட்டுக்கோப்புக் களையும் விட்டுவிட்டு இன்னல்களையும் நெருக்கடிகளையும் சந்திக் கும் இந்த வாழ்வுக்குத் தயாரானது எப்படி?
3. இழந்து போன பிரதேசங்களையும் வாழ்வையும் மீளவும் பெற என்ன செய்யவேண்டுமென்று கருதுகிறீர்கள்?

## செம்பியன் செல்வன்

*1)* இராணுவ நடவடிக்கையின் வெற்றியின் தோல்வியும் நிலப்பரப் பின் மீது கொள்ளும் ஆக்கிரமிப்புச் சார்ந்தவையல்ல; எந்த நோக்கில் அந்த நடவடிக்கைகள் மேற்கொள் ளப்பட்டனவோ; அந்த நோக்கில் பெற்ற வெற்றி தோல்வியளவினதா கவே அமையும். யாழ் நகரை - பிரதேசத்தை - வெற்றிகொள்வது என்பது அந்தப் பிரதேச மண் - மக்கள் - அவர்தம் மனங்களை வெற்றிகொள்வதாக இருக்க வேண் டும். அந்த நிலையில் பார்க்கும் போது மக்கள் வாழ்ந்த வாழி டங்களை பாழிடங்களாக மாற்றி வரும் அவர்களின் வருகையை அரக்கனின் வருகையாக கருதி, நரமாமிச பட்யணியைக் கண்ட மனித குலமக்கள் அருண்டு, வெருண்டு புகலிடம் தேடி ஓடிய போது, அடைக்கலம் கொடுத்த நிலையில் 'புலிகள்' உலகப்போராட்ட வரலாற்றின் புதியதொரு பக்கத்தை திறந்த வேளையில், சிங்கள இரா ணுவம் தனது கறைபடிந்த கரங்க ளால் வரலாற்றுப் பக்கங்களுக்கு மாறாத அவமானக்கறையை ஏற் படுத்தி விட்டது. வெளிப்பார் வைக்கு 'தோற்றது போல் தோற்று' மக்களின் மனங்களையும் உயிர்க ளையும் வென்றெடுத்த யுக்தியால் இராணுவத் தந்திரத்தில் புதிய தொரு விதியை புலிகள் படைத்துள் ளனர். உணர்ச்சிமயமான சூழலில் இந்த உண்மைகளைப் புரிந்து கொண்டு மக்கள் அமைதியாக வாழ்வது சிங்கள இராணுவத்தை முறியடித்து வெற்றி கொண்ட மைக்கு நிகராகும்.

*2)* தயாராகும் நிகழ்ச்சி ஆரம்ப மானது நேற்றோ இன்றோ அல்ல, 1956-ம் ஆண்டில் ஆரம்பமான மன மாற்றம் 1995-ல் பூரணத்துவம் எய்தி யுள்ளது. இந்தப் பூரண வியாப்திக் கான சூழலை (climate) உருவாக்கிய ளித்த பெருமை 1956-இலிருந்து ஆட் சிக்கு மாறி மாறி வந்த பெரும் பான்மை அராஜக கட்சிகளுக்கும் எம்மிடையே இருந்த மிதவாதிகள் என்று கூறிக் கொண்ட பிற்போக்கு கட்சிகளுக்குமுரியது.

*3)* யாழ்பாடி பெற்ற பூர்விக நில மாக மணற்றிடராக யாழ்ப்பாணம் மாறிவரும் பொழுது, வன்னி நிலம் வீரம் விளைவிக்கும் நிலமாக பரிமா ணம் கொள்கையில் ஆளும் பெரும் பான்மைக்கு பெரும் பிரச்சினை நில மாக - எரிதழல் பூமியாக யாழ்ப்பா ணம் காட்சிதரத் தொடங்கும். அப் போது தமிழீழம் என்னும் உலகம் மிகப்பாரிய அர்த்தத்துடன், தமிழ ரின் பூர்விகம் என்னும் வீறுடன் உலகளாவி நின்று அறைகூவும். தமி ழீழம் பிறக்கும்.

## சு. மகேந்திரன்

*1)* தென் தமிழீழத்தில் பல இரா ணுவ முகாம்களை மூடிவிட்டு அங் கிருந்த இராணுவத்தினரை பலாலி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

யில் குவித்தபோது ஒரு இனப்படு கொலை யாழ்ப்பாணத்தில் நடை பெறும் என்பது நன்கு தெரிந்த விஷயமாக இருந்தது. இராணுவம் முன்னேறி மக்களை சிறைப்பிடித்து விடுவார்கள் என்று உணர்ந்தவர்கள் உடனே செயற்பட்டனர்; வெளியே றினார்கள்; போராட்டத்துக்கு ஒரு புதுப்பரிமாணத்தையும் கொடுத் தார்கள். வேறொரு இனத்தினது இராணுவம் வரும்போது அது இம் சைப்படுத்தாது விட்டாலும் கூட எமது இனத்தைச் சேர்ந்தவர்கள் நிர்வகிக்கும் பிரதேசத்திற்கு மக்கள் போய் விடவேண்டும்.

*2)* உயிரின் விலையுடன் ஒப்பி டும் பொழுது எல்லா வாழ் முறை மையையும் மக்கள் மீறிவிடுவார்கள். கந்தசஸ்டி பாறணையின்போது இர வில் பலகாரம் சாப்பிட வேண்டிய விரதகாரர்கள் குழைத்த சோறு சாப் பிட்டனர். வாழ்வு அப்படி மாறி விட்டது. ஏற்கத் தயாராகியும் விட் டனர்.

*3)* இராணுவ ரீதியாக சிறிலங்கா அரசாங்கத்தை வெல்வதன் மூலமே இழந்த பிரதேசத்தைப் பெறமுடியும். போராட்டத்தில் பல்லாயிரக் கணக் கானோர் இணைவதன் மூலமே இதனைச் சாதிக்க முடியும். நேரடி யாக இணையாதோர் வேறுவகைக ளில் உதவலாம்.

## ஓவியர் தயா

*1)* இராணுவத்தின் கையில் சிக் கக்கூடாது; அதன் இராணுவ, அரசி யல் நோக்கங்களுக்கு துணைபோகக் கூடாது என்பதற்காக, ஆண்டாண்டு காலமாக வேர்விட்டு நிலைத்திருந்த வாழ்வையும், ஆண்டாண்டு கால மாக சேர்த்துப் பேணிய தமிழர் சொத்துக்களையும், துறந்து சோகங் களையும், கஸ்டங்களையும் தாங்கிய வண்ணம், பல லட்சம் மக்கள் ஒரே இரவில் யாழ்ப்பாண வரலாற்றில் நிகழ்ந்திராத மிகப்பெரிய ஒரு இடப் பெயர்வை நிகழ்த்தினார்கள். இந் நிகழ்வு நிச்சயமாக வலிகாமத்தினுள் புகும் ஆக்கிரமிப்பு இராணுவத்திற்கு மிகப் பெரிய ஏமாற்றத்தையும், அர சியல் தோல்வியையும் கொடுத்தது.

*2)* மிகப்பெரிய உயிர் அழிவுக ளையும், வாழ்வுக்கான சகல வழி களிலும் மோசமான சீரழிவுகளை யும், தடைகளையும் ஏற்படுத்தும் ஒரு ஆக்கிரமிப்பு இராணுவத்துடன் சேர்ந்து இருக்க முடியாது என்ற



தீர்க்கமான முடிவுதான் இந்த வாழ் வுக்குத் தயார்படுத்தியது.

*3)* இழந்துபோன பிரதேசங்க ளையும், வாழ்வையும் மீளப்பெறுவ தன் மூலம்தான் எமது ஒவ்வொரு வரதும் எதிர்காலமும் ஒளிமயமான தாக இருக்கும் என்பது தெளிவான ஒரு விடயம். இதற்காக எமது தாயக மீட்புப் போரை துரிதப்படுத்த எமது தேசிய விடுதலை இயக்க மான விடுதலைப்புலிகளை சகல வழிகளிலும் பலப்படுத்த வேண்டும். அதற்கு எமது ஆற்றல்களையும், வளங்களையும் அர்ப்பணிக்க தயா ராக இருப்பதே எந்த விதத்திலும் மிகச்சிறப்பான ஒரு வழியாகவும், பங்களிப்பாகவும் இருக்கும்.

## கவிஞர் சோ. பத்மநாதன்

*1)* தீவகம், வலிகாமம் வடக்குப் பகுதிகளை இராணுவம் கைப்பற் றிய போதெல்லாம் மக்கள் இடம் பெயர்ந்து, யாழ்நகர் மற்றும் புற நகர்ப் பகுதிகளுக்கு வந்து விட் டார்கள். உண்மையில் புறநகர் பகுதிகளில் பெரும் நெருக்கடி ஏற் பட்டிருந்தது. இந்த நிலையில் யாழ் நகரைப் பிடிப்பதென்பது, வடம ராட்சி தென்மராட்சி நீங்கலாக குடாநாட்டை பிடிப்பதற்கு சமனா கும். இதைச் செய்திருந்தால், குடி மக்கள் பெரும் எண்ணிக்கையில் இறக்க நேரிட்டிருக்கும். இது தவிர்க் கப்பட்டு விட்டது. இரண்டாவதாக, குடிமக்களோடு யாழ்நகரைப் பிடித் திருந்தால் சிவில் நிர்வாகம் தொடங் கியிருக்கும். இது நிறைவேறவில்லை. 1977-ன் பின் சிறிலங்கா இராணுவம் தமிழ் மக்களை நடத்திய விதத்தை மறப்பதற்கில்லை. ஓர் அன்னியப் படை ஒரு மக்கட்கூட்டத்தை எப்படி நடத்துமோ, அப்படியே நடத்தி வந்துள்ளது. இந்த இடப்பெயர்ச்சி, நம் மக்கள் சிறிலங்கா இராணு வத்தை நம்பவில்லை என்பதைத் தெளிவாகக் காட்டியுள்ளது. இது மூன்றாவது.

*2)* கடும் உழைப்பு, சிக்கனம், சேமிப்பு என்பன நம் சமூகத்தின் குணாம்சங்கள். பிள்ளைகளின் நல் வாழ்வுக்காக தம்மை ஒறுத்துக்கொள் ளும் வழக்கம். 'கிடைதலைக்கென்று' பொன்னாக - பொருளாக சேமிக் கும் பழக்கம் இவைதாம் இச்சமூகத் தைக் காத்து வருகின்றன. பன்னி ரண்டு வருடப்போர், பொருளாதா ரத்தடை, சொத்துக்கள் அழிப்பு, இடப்பெயர்ச்சி வேறெந்தச் சமூக மும் இந்த நெருக்கடிகளுக்கு ஈடு கொடுக்க முடியாது வீழ்ந்திருக்கும். கட்டிய வீடுகளை, தேடிய பொருட் களை, கால்நடைகளை, உபகரணங் களைத் துறந்து திடீரென்று புறப் பட்டு வருவது என்பது நினைத்துக் கூடப் பார்க்கமுடியாத ஒன்று. பல ருக்கு தொழிலுக்கான மூலதனமே இல்லை. யாழ் போதனா வைத்திய சாலை கிளினிக்குகளுக்குப் போகும் பல்லாயிரம் முதியோர்களை, பெண் களை நினைத்துப்பாருங்கள். இவர்க ளும் கால்நடையில் தென்மராட் சிக்கு வந்ததை நினைக்கையில்...! இன்று தாவரங்களில், மரங்களுக்குக் கீழ் சமைத்து உண்ணும் மக்களைக் காண்கையில்...! காலையும் மாலை யும் பாணுக்கு நிற்கும் நீண்ட கியூ

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வைப் பார்க்கையில்...! வரப்போகும் பருவமழையால் ஏற்படக்கூடிய சுகக் கேடுகளை எண்ணுகையில்...! இந்தச் சமூகம் செய்யும் தியாகம் அதிக பட்சம் என்பதை உணர்கிறேன்.

**3)** நாம் ஒன்றாக நின்றால் இந் தப் பின்னடைவுகளில் இருந்து மீளு வது நிச்சயம்.

## கவிஞர் இ. முருகையன்

**1)** அரச தரப்பால் இந்த இரா ணுவ நடவடிக்கை குறித்து கூறப்பட் டது என்ன? "தமிழ் மக்கள் பயங் கரவாதிகளின் பிடியில் அகப்பட்டி ருக்கிறார்கள். நாம், அவர்களை மீட்டு சமாதானத்தையும், சுமூக வாழ்வையும் கொடுப்போம்" என் றார்கள். இந்த நிலைப்பாட்டை தமி ழீழ மக்கள் எந்த ஒரு கட்டத்திலும் ஏற்கவோ நம்பவோ தயாராக இருக்க வில்லை. இராணுவம் எமது பிரதே சத்தில் இருக்குமாயின் எமக்கு சுமுக மான நிலை இருக்காது என்பதே உண்மை. இதனால் இராணுவ ஆக் கிரமிப்புக்குள் அகப்படும் பிரதேசத் துக்குள், மக்கள் வசிக்கும் வழக்கம் ஒருபோதுமே இருக்கவில்லை. வழ மையான இச்செயற்பாட்டுக்கு ஒரு புதுவித வடிவைக் கொடுக்கிறது இந்த முழுமையான வெளியேற்றம். இது "தமிழர்களை இராணுவம் விடு விக்கும்" என்ற அரசின் கருத்தை ஏற்கத் தமிழர்கள் தயாரில்லை என் பதை பிரமாண்டமாக, வெளி வெளி யாக வெளியுலகிற்கு எடுத்துக்காட் டியுள்ளது. ஆனால் அரச தரப்பு, சிங்கள பேரினவாதத்தை ஏந்திப் பிடிக்கும் பிரச்சார சாதனங்கள் இதை மூடிமறைக்கவும் கொச்சைப் படுத்தவும் முயன்றாலும், இவ் வெளியேற்றம் தமிழர் வரலாற்றில் ஒரு முக்கிய இடம் பிடித்து விட் டது என்பது உண்மையாகும்.

**2)** இந்த நெருக்கடியான நேரத் தில் அவற்றை - எமது சமூகத்தின் வாழ்முறைகள், கட்டுக்கோப்புக்கள் கைக்கொள்வதனை விடவும் எமது இருப்பினை நிலைப்படுத்திக் கொள் வதே பிரதானமாகும். இதனுடன் ஒப்பிடும்போது ஏனையவை இரண் டாம் பட்சமே ஆகும்.

**3)** எம்மை வலிமைப்படுத்திக் கொண்டு, அதன் வழி முழுமை யான விடுதலையை நோக்கிப் பய ணிக்க வேண்டும்.

## சாந்தன்

**1)** இது ஒரு மிகப்பெரும் அரசி யல் தந்திரோபாய வெற்றி.

**2)** மக்கள் அரசியல் மயப்படும் போது இது மிக இயல்பானதே.

**3)** வாழ்வையும் வாழ்நிலத்தை யும் பாதுகாப்பது தமது கைகளிலே தானுள்ளது என்பதை மக்கள் அனைவரும் தெளிவாக உணர்ந்தி ருக்கும் போது, இது மிக மிக இலகு வானதாகிவிடும்.

## ந. சத்தியபாலன்

**1)** சிறிலங்கா இராணுவத்தைப் பொறுத்தவரை எமது மக்களின் இடப்பெயர்ச்சி என்பது சற்றேனும் எதிர்பாரத்திராத ஒரு நிகழ்வாகும். சிறிலங்கா அரசாங்கம் "யாழ் நகரை மீண்டும் கைப்பற்றுதல்" என்ற மகு டத்தின் கீழ் நிகழ்த்த நினைத்திருந் தவை என்னென்னவோ... ஆனால் அதையெல்லாம் வெறுங்கனவாய் மாற்றியது எமது மக்களின் வெளி யேற்றம். வெறித்தனமாய் ஷெல் மழை பொழிந்தபடி முன்னேறி நக ரைக் கைப்பற்றி அதனை ஒரு மகத் தான வெற்றியென சர்வதேசத்துக்கு முழங்கவும், கைப்பற்றிய பின் மக்க ளின் வெளியேற்றத்தைத் தடுத்து அவர்களைக் குடாநாட்டுக்குள் ளேயே முடக்கி வைத்து இத்தனை காலத் தோல்விகளுக்கும் ஒட்டு மொத்தமாக பழிவாங்குவதும்தான் அரசின் நோக்கமாக இருந்தது. இந்த நோக்கம் நிறைவேறியிருந்தால் நிகழ்ந்திருக்கக்கூடிய உயிரழிவு மிகப் பெரியதாக இருந்திருக்கும். எதிர்ப் படும் ஒவ்வொரு தமிழ் இளைஞ னையும் யுவதியையும் இராணுவம் எந்தக் கண் கொண்டு பார்த்திருக் கும், என்னென்ன நடவடிக்கை மேற்கொண்டிருக்கும் என் ஒவ் வொரு தமிழ் நெஞ்சமும் எண்ணிப் பார்க்க வேண்டும். இது ஒன்றை யுமே நிகழ்த்த முடியாமற் போனது இராணுவத்துக்கு ஒரு பேரிழப்புத் தான்.




**2)** உயிரிழப்பு, சித்திரவதைகள் என்பன பற்றிய அச்சம் - எதிரி மீதுள்ள வெறுப்பு என்பன அவர் களின் வெளியேற்றத்தை தவிர்க்க இயலாததாகிற்று - இதுவரை கால மும் காணநேர்ந்த போர்க்கால அழி வுகளையும் இராணுவத்தின் பிடிக் குள் வாழ்தலில் இருக்கும் அவலத் தையும் எண்ணிப்பார்க்கும் போது கட்டுக்கோப்புகளும் வாழ்முறைமை களும் பெரிதெனப்பட்டிருக்க முடி யாது. போர் நிகழும் ஒரு தேசத்தில் இத்தகைய நிகழ்வுகள் தவிர்க்க இயலாதவை என்பதை வரலாறு பல தடவை மெய்ப்பித்திருக்கிறது. யாழ் மண்ணில் இன்று நிகழ்ந்த இந்த சம்பவம் திருகோணமலை, மட்டக்களப்புப் பிரதேசங்களில் முன்னர் பல தடவை நிகழ்ந்திருக்கி றது. எமது தேசம் எமக்கே என ஆகும் வரை இது போலும் சம்ப வங்கள் நிகழத்தான் செய்யும்.

**03)** இழந்ததை பெறுதல் அதற் கான முயற்சியில்தானே தங்கியிருக் கிறது. பறிக்கப்பட்டது எமது தேசம் - எமக்கு உரித்தான மண் - அடித் துப்பறித்தார்கள் -அடித்துத்தானே மீட்க வேண்டும் - அதிக பலத்தோடு நிற்கிற எதிரியை எதிர்கொள்ளும் பலத்தை நாம் பெறவேண்டும். ★

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# வாழ்வுக்கான பயணம்

ஒரே ஷெல்லடி, புக்காராவும் அடிக்கடி வந்து குண்டு போட்டது. காலையில் போட்ட குண்டில் சந்தியில் இருந்த மூன்று வீடும் தரைமட்டமாய்ப் போனது.

இனி உரும்பிராயிலை இருக்கேலாது. வெளியேறத்தான் வேண்டுமென்று தீர்மானித்தோம்.

ரூபன் ஒரு பையில் உடுப்புக்களை அந்தரப்பட்டு கூதல் குப்பையாய், அடுக்கிக் கொண்டிருந்தான். சர்வா அமைதியாகவே பொருட்களை அடுக்கிக் கட்டினான்.

திடீரென ஷெல்லொன்று கிட்ட விழுந்து வெடித்தது. வீடெல்லாம் குலுங்கி அதிர அப்பிடியே நிலத்தில் விழுந்து படுத்தோம்.

"வா! அடுத்தடுத்து வாறதுக்குள்ளை போய்ச் சேருவம்" ரூபன் அவசரப்பட்டு, சைக்கிளடிக்கு ஓடினான். எனக்கும் உள்ளூரப் பயமாயிருந்தது. சர்வாவை அவசரப்படுத்தி அழைத்துவந்தேன்.

மீண்டும் ஒரு ஷெல் கிட்டவாய் வெடித்தது. கதவைப் பூட்டிவிட்டு சைக்கிளை எடுத்துக்கொண்டு வெளியே வந்தோம்.

வாசலில் இளம் போராளியொருவன் நின்றான். பதினைந்து வயதுதான் இருக்கும்.

"என்ன தம்பி?" ரூபன் கேட்டான்.

"கொஞ்சம் சுடுதண்ணி தேவையண்ணே. நீங்கள் வெளிக்கிட்டிட்டியள். பறவாயில்லை" அவன் திரும்பினான்.

சர்வா அவனை மறித்தான். அவனையும் கூட்டிக்கொண்டு உள்ளே மீண்டும் போனான். அடுப்பை மூட்டித் தேநீர் தயாரித்தான். நாங்கள் பொறுமையிழந்து வாசற் குந்தில் குந்தியிருந்தோம். ஒவ்வொரு ஷெல் விழும்போதும் உயிர் போய் வந்து கொண்டிருந்தது.

உள்ளே சர்வாவும் இளம் போராளியும் சிரித்துக் கதைப்பது கேட்டது. கொஞ்ச நேரம் கழிய, சர்வா இரண்டு சில்வர் தேநீர் கொண்டு வந்து தந்தான். ஒரு செம்பு நிறைய தேநீருடன் நன்றி தெரிவித்தபடி இளம் போராளி போனான்.

அந்த நேரத்துக்கு தேநீர் இதமாக இருந்தது.

தேநீர் குடித்து முடிய எல்லோரும் புறப்பட்டோம்.

வீதிகள் நிறைய வேறும் பலர் சைக்கிள்களிலும், நடையிலும் போய்க் கொண்டிருந்தனர். இடைக்கிடை வண்டில்களும் 'லான்ட் மாஸ்ரர்'களும், கார்களும் போய்க்கொண்டிருந்தன.

திருநெல்வேலி போய் ஆடிய பாதம் வீதியூடாக கல்வியங்காடு தாண்டி வீதியில் ஏறும் வரை ஓரளவுக்கு சைக்கிள் ஓட முடிந்தது. செம்மணித் தொடக்கத்தில் 'அடிச்சு விலத்த முடியாத' அளவுக்கு சனங்கள். அரைமணி நேரமாகக் கூட்டம் நகராமல் அப்படியே நின்றது. மெல்லமெல்ல இருள் சூழ்ந்தது.

இருள்... களை... பசி... தாகம்...

சகிப்பின் எல்லையைத் தொடும் பயணம். வழியெங்கும் பலர் மயங்கி வீழ்ந்தனர்.

"யாராவது தண்ணி இருந்தாக் கொஞ்சம் குடுங்கோ. பச்சைப் பாலகன் அழுகுது. யாராவது உதவுங்களேன்" குழந்தையின் தாயோ வேறு யாரோ உரத்து இரப்பது கேட்டது.

"எங்கையாச்சும் பாத்து வாங்கியருவமே" என்று சர்வா கேட்டான். ரூபன் ஏசினான். எனக்கும் தாகமாயிருந்தது, தலை சுற்றியது. அடிக்கடி காலில் செருப்புக்கள் இடறின. செருப்புடன் செல்ல முடியாதவர்கள் கழற்றி விட்டுச் சென்றனர்.

வீதியிலிருந்து சைக்கிளை இறக்கி, சாய்வான புற்தரையில் அமர்ந்தோம். மழையால் உடைகளும் நிலமும் ஈரமடைந்திருந்தன.

இரண்டு மணி நேரத்தின் பின் சர்வா போத்தலொன்றில் தேநீர் வாங்கி வந்து தந்தான். ஒன்றரை மைல் நடந்து சென்று நாவற்குழியில் இதை வாங்கி வந்ததாக அவன் சொன்னான்.

"றோட்டாலை போனாச் சரி வராது. வாங்கோ தண்ணிக்குள்ளை இறங்குவம்" சர்வா தான்சொன்னான். ரூபன் "உந்தச் சேத்துக்குள்ளையோ" என்று தயங்கினான். நானும் இறங்கத் தயாராக இருந்ததால் ரூபனும் உடன்பட்டான். நாங்கள் இறங்கும் வேளை ஒரு வயோதிபர் உயிரிழந்து போக, அவரது மகள் பலத்த குரலில் அழுது புலம்பினாள்.

நாங்கள் கரை இறங்கினோம். அடிக்கடி சைக்கிள் சேற்றில் புதைந்தது. செருப்பும் புதைந்தது. நான் செருப்பை கழற்றி விட்டு வந்தேன். சர்வா ஏற்கனவே செருப்பைக் கழற்றிச் சைக்கிளில் கொழுவியிருந்தான். நாவற்குழிப் பிரதேசத்தில் இடுப்பளவு நீர் நின்றது.

புதைந்து தவழ்ந்து ஒருவாறு அதிகாலை நான்கரை மணிக்கு வலிகாமத்தைக் கடந்து வந்து விட்டோம்.

"எங்கை போறது?"

மூவரும் ஒருவரையொருவர் பார்த்தோம்.

"மீசாலையில் எங்கட சொந்தக்காரர் இருக்கினை. போய்ப் பார்ப்பம்" ரூபன் சொன்னான்.

"எனக்கு ஒரு இடமிருக்கு. அங்கை போவதைத் தவிர்ப்பது வரலாற்றுக்கு இழைச்ச தவறாயிடும்" சர்வா சொன்னான்.

"நானும் வாறன் சர்வா" என்றேன் நான்.

இனி ரூபனும் வரக் கூடும் எங்களுடன்.

**- வளநாடன்**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# உயிர்க்கும் தருணமொன்று

ஒரு நகரம்
உலகத்தின் இந்தக் கணங்களில்
அழியுண்டுபோமோ என்ற அச்சத்தில் கிடக்கிறது.

யாரும் அறிவீரோ
அது எங்கள் நகரென்று!

இலட்சோப லட்சம் மனிதர்களின் பிரிவிலிருந்து
கிளரும் மாறாத துயரத்தை
நகரத்தின் எல்லா வீதிகளும்
தாங்கமுடியாமல் தவிக்கின்றன
எல்லா வீடுகளும் தனிமையில் அழுகின்றன.



அழிவின் ஒலியில்
நகரத்தின் இசை அமுங்கிப் போகிறது.

முன்னொரு போது
இந்த நகரத்தில்
சிலைகள் உடைந்தன
படமாளிகையும் நூலகமும்
கடைவரிசையும் கூடத் தீயிடப்பட்டன.
தெருவோரம் மனிதர்கள் சுடப்பட்டு இறந்தனர்.
புழுதி கிளம்பப் பறக்கும் 'ட்றக்' குகளுடன்
பீதியும் திரிவதாய் ஒரு சரித்திரம் இருந்தது.



மீண்டும் இப்போது
தூங்காத இரவுகளும்
பயங்கரக் கனவுகளுமாக ஒரு காலம்
வந்திறங்குமோ என்ற அச்சத்தில்
நகரம் துயரப்படுகிறது.

எங்கள் நகரம்
கண்ணீரிற் கரைவதை
நாம் அனுமதிப்போமா?



விண்ணெழுந்த மாடங்களும்
வீதியெல்லாம் ஒளிசிந்தும் காலமும்
அழிந்தபின்னும்
அது நகரமாய் இருந்ததே!

இடியுண்ட கோட்டைச் சுவர்கள்..
பாழடைந்த அகழிகள்..
சிதைவுண்ட கட்டிடங்கள்..

- கருணாகரன்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மெருகிழந்த வீதிகள்...
என்ற போதும் அது எங்கள் நகரே!

கடலோடு அருகமர்ந்து
காற்றிசைக்கும் சிறுவெளியில்
உடல்முழுதும் சிலிர்த்திருக்க
உலகை வியந்துரைக்கும்
கனவை வளர்த்த
எங்கள் பெருநகர் இன்று எதிரிக்கஞ்சுவதோ?
விம்மும் குரலொலியில்
வியப்பெல்லாம் அழிவதுவோ?

யாரும் அறிவீரோ
ஒரு நகரம்
ஆட்களே இல்லாமல் தனித்திருப்பதை
கனவுகள் ஆயிரம் தந்த
எங்கள் நகரம்
கண்ணீரில் மிதப்பதைக் கண்டு இனியும்
பொறுப்போமா!
அலையாடும் கடலே
அழகிழந்த நகரின் புற ஊர்களே
விளக்கொளியேறாத வீடுகளைக்கண்டு
விம்மும் பறவைகளே
தெருக்களெல்லாம் தனித்திருந்து
தேம்பியழும் காட்சியுடன்
எங்கள் நகர் இன்று தனித்துக் கிடக்குதய்யோ.
பன்னெடுங்காலமாய் நம் மனிதர்
பாதம் பட்ட நிலம்
அந்தரமாய் கிடந்து அலையுதே;
துயரம் பொறுக்குதில்லை.

ஆட்களில்லாத நகரத்தின்
அத்தனை தெருக்களிலும்
எங்கள் புலிவீரர்
வெல்லும் தீரத்தோடும்
வீரத்தின் உறுதியோடும்
கண்ணில் ஒளிவீச களமாட நிற்கின்றார்.

வெல்வோம் நாம்
வீரத்தின் விளைநிலமாய்
எங்கள் பூமி இரத்ததில் குளித்தெழும்

புத்தம்புது எழிலுடன்
எங்கள் பொன்னகரம் எழுந்துவரும்.

# மண்ணின் குரல்

இடம்பெயர்ந்து வந்து ஒரு வாரமாகிவிட்டது. சனசமூக நிலையக் கொட்டிலை வாழ்விடமாக்கியது. வாழ்வும் ஓட்டுக்குள் ஒடுங்கிய ஆமையாகிவிட்டது.

அவலத்தையும் துயரத்தையும் ஜீரணிக்கும் மனம் சூழலுக்கு இசைவாக்கம் பெற ஆரம்பித்துவிட்டது.

நேற்று வரை விட்டு விட்டுப் பெய்த மழை, காலையிலிருந்து மூட்டம் போட்டு கொட்ட ஆரம்பித்தது. வேய்ந்து வருடங்களாகிய சனசமூக நிலைய கொட்டில் ஆங்காங்கே கண்ணீர் சொரிய ஆரம்பித்தது.

மூலையில் ஒடுங்கியபடி இருந்த அம்மா சொன்னாள்...

"எத்தனை நாளுக்கு இப்படி அலையப் போறமோ, எப்பதான் ஊருக்குப் போறதோ....?"

வார்த்தைகளைத் தொடரும் மெல்லிய விசும்பல்.

"இப்ப என்னத்துக்குப் புலம்புறாய்.... உனக்கு மட்டுமே.... எல்லாருக்கும்தான் இந்த நிலை..." அப்பா சொன்னார். "என்ரை குஞ்சன் இந்த மழையிலை எங்கை நிற்கிறானோ.... எப்படி இருக்கிறானோ...? அம்மாவுக்கு கடந்த மாதம் போராளிகளுடன் - புலிகளுடன் இணைந்த இளைய மகனின் ஞாபகம் பீறிட்டது.

அப்பா, அம்மாவின் சோகத்தில் கரைந்து நெடுமூச்செறிந்தார். போர்வைக்குள் முடங்கிக் கிடந்த தாத்தாவின் குரல் சுருட்டுப் புகையுடன் கலந்து வந்தது.


"சும்மா ஏன் பெருமூச்சு விடுகிறியள்... அவனென்ன எங்களைப் போல அகதியாகவே இருக்கிறான்... நாங்க உயிரைக் காக்க ஊரை விட்டோடி வந்தனாங்கள்.... அவன் அப்பிடியே... ஊரைக்காக்க உயிரைக் கொடுக்க நினைப்பவன்..... அவனைப் போல் அவனோடு எத்தனை பேர் இருக்கிறாங்கள் தெரியுமோ?" வெளியே இடிமுழக்கத்துடன் மின்னல் கோடிட்டு வெளிச்சம் பாய்ச்சி மறைந்தது.

இன்னமும் தங்களின் வேரின் ஒரு மூலம் ஊரில் நிலைகொண்டிருக்கும் நினைவு சிலிர்க்க தங்கள் நிலத்தை முற்றாக இழக்கவில்லை என்ற உணர்வு அவர்களைச் சூழ ஒரு இயல்பான அமைதி நிலவியதில் நம்பிக்கையின் ஒளிக்கீற்று தென்படுவது போன்றிருந்தது.

**- செந்தூரன்**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# அதிர்வலைகள்

**- ஆதவன்**

அந்த மண்டபம் முழுவதும் இசையில் குளித்துக் கொண்டிருந்தது.

செவிகளூடே புகுந்த ஒலி அலைகள்.. இதையத்தினுள் சென்று, உடம்பு பூராவும் அதிர்வை ஏற்படுத்தியது. 'கானடா' இராகம், தனக்கே உரிய இன்பத்தையும் உத்வேகத்தையும் வழங்கிக் கொண்டிருந்தது. பாடிக்கொண்டிருப்பவர் தன்னை மறந்து அதிலேயே லயித்திருந்தார். ஆம்! புகழ் பெற்ற இசை மேதை பாலமுரளிகிருஷ்ணாதான்! சொல்லவாவேண்டும்?

நாங்கள் இரண்டாவது வரிசையில் அமர்ந்திருந்தோம். ஆத்மாமீது ஒரு உத்வேகத்தை.... உரத்தை... உறுதியை... வழங்கிக்கொண்டிருந்த அந்த உச்சஸ்தாயி அலைகள்.. எங்கோ ஒரு அதியுயர் மலையுச்சியில் - வெற்றி வாகை சூடிய வீரனைப்போல்.... சுதந்திரக் கொடியை நாட்டிய பெருமிதத்தின் எக்காளிப்பில் மிதப்பது போன்ற ஒரு உணர்வை ஏற்படுத்தியது.

திடீரென என் கையை இறுகப் பற்றினான் பாலன். நான் திரும்பிப் பார்த்தேன். அவன் கண்கள் மூடியிருந்தன. ஆனால் கண்களின் அருகில் கன்னம் வழியாக நீர் வழிந்து கொண்டிருந்தது.

மிக மிக மென்மையுள்ளம் கொண்டவன் பாலன் என்பது எனக்கு நன்கு தெரியும். அந்த இசையலைகள் அவனது ஆத்மீக பலத்தைச் சோதித்திருக்க வேண்டும். இசை அலைகளுக்குக் கருத்துருவம் கொடுத்து தன் உணர்ச்சிகளை இலட்சியத்தின் மீதேற்றி - அந்த இலட்சியம் வெறும் கனவாய்ப் போய்விடுமோ என்ற ஆதங்கத்தில் வந்த கண்ணீர்தான் அது என்பதைப் புரிந்து கொண்டேன்.

"பாலன், எழும்பு இனிக்காணும், வா போவம்"

என்று சொல்லி அவனையும் இழுத்துக் கொண்டு மெதுவாக மண்டபத்தை விட்டு வெளியேறினேன்.

நியாந்தர் விளக்குகள் தெருவை மஞ்சளாக மாற்றியிருந்தன. சைக்கிளில் வந்தகொண்டிருந்தோம். நான் பின்னுக்கு 'கரியரில்' இருந்தேன். பாலன் மிதித்துக் கொண்டிருந்தான். மண்ணையும் மக்களையும் 7 கோடி தமிழ் மக்களையும் சீரழிக்கும் கோடம்பாக்கம் கனவுத்தொழிற்சாலையைக் கடந்து கொண்டிருந்தோம்.

"மாஸ், வயித்துக்கை குத்துது" என்றான் பாலன்.

'மாஸ்ரர்', என்று என்னை ஏனையோர் அழைப்பர். பாலன் மட்டும் அதனை மேலும் குறுக்கிச் செல்லமாக 'மாஸ்' என்று கூப்பிடுவான்.

அருகில் - பெரிய 'கட்அவுட்டில்' - மரக்கட்டையால் AK 47 செய்து, அதற்குக் கறுப்புப் 'பெயின்ற்' அடித்து, அதனைத்தன் கையில் பிடித்தபடி, அசடு வழியும் ஒரு தமிழ்நாட்டுக் கதாநாயகனின் படம் இருந்தது. அதைப் பார்த்துத்தான் நக்கலாக வயித்துக்கை குத்துது என்று சொல்கிறான் என நினைத்துச் சிரித்தேன்.

சிறிது நேரம் மௌனத்தில் கழிய... திடீரென்று சைக்கிளை நிறுத்தினான் பாலன்.

"மாஸ், நல்லாக் குத்துது" என்று சொல்லிவிட்டு, வயித்தைப் பொத்திப் பிடிச்சுக்கொண்டு தெருக்கரையில் அப்பிடியே குந்திவிட்டான் பாலன்.

நான் நன்றாகப் பயந்துவிட்டேன். உடனே, ஆட்டோவில் அவனை ஏற்றி அருகிலுள்ள மருத்துவமனையில் அவனைச் சேர்த்துவிட்டு ஏனையோருக்குத் தகவல் கொடுத்தேன்.

***

அவனுக்கு APPENDICITIS! உடனடியாக ஒப்பரேஷன் செய்யவேண்டும். அவனைப் பார்க்கும் பொறுப்பு என்னிடம் தரப்பட்டது.

நாங்களிருவரும் ஒரு தனி அறையில் விடப்பட்டோம்.

இன்னும் 10 நிமிஷத்தில் அவனுக்கு மயக்க ஊசி போடப்போகிறார்கள். அவனது வயிற்றைக் கிழிக்கப்போகிறார்கள்.

பாலன் விக்கி.. விக்கி... கேவிக் கேவி அழுது கொண்டிருந்தான்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

அவனுக்கு ஊசிகள், கத்திகள் போன்றவற்றைப் பற்றிய பயம் சிறு வயதிலிருந்தே இருந்திருக்கிறது என் பதை நண்பர்கள் மூலம் நான் அறிந்திருந்தேன்.

"ஏன்ரா இப்ப அழுறாய்? இது சின்ன ஒப்பிரேஷன். இதுக்குப் போய்...?" என்றேன்.

"மாஸ், நான் நாட்டுக்குப் போக வேணும். எனக்குப் பிடிச்ச G3-ஐ தூக்கவேணும். என்ரை ஊரை ஆக் கிரமிச்ச பண்டியளைச் சல்லடை போடவேணும். அதுக்கிடையிலை இந்தச் சனியன்..... (வயித்தைக் காட் டினான்) தற்செயலாய் எனக்கேதன் ஒண்டு நடந்தா....

நான் இவ்வளவு நாளும் வளத்து வந்த இந்த உடம்பு ....

ஈழத்துக்குப் பிரயோசனப்படா மல் போடும்...."

மேலும் கேவினான்.

அறைவாசலில் - வெள்ளைத் தாதி ஊசியுடன் வந்து நின்றாள். நான் அவளிடம் 2 நிமிடம் கடன் கேட்டேன்.

"பாலா, நீ கட்டாயம் நாட்டுக் குப் போவாய். உன்ரை லட்சியம் மட்டுமில்லை, எங்கடை எல்லாற்றை லட்சியமும் நிறைவேறத்தான் போகுது. பயப்பிடாதை. இப்ப உனக்குத்தேவை உன்ரை உடல் இல்லை. உன்ரை ஆத்ம பலந்தான்."

என்று சொல்லிவிட்டு அவன் கையை இறுக ஒரு தரம் அழுத்தி விட்டு வெளியேறினேன்.

அவனது கண்கள் நேரே என் னைப் பார்த்தன. எத்தனை லட்சி யங்களையும் கனவுகளையும் அந்தப் பிஞ்சுக்கண்கள் உள்ளே வைத்திருக் கின்றன.

***

ஒப்பிரேஷன் நல்லபடியாய் முடிந்தது. அவன் செவியருகே பால முரளி கிருஷ்ணாவின் இசையலை களை அவ்வப்போது 'கசெற்றில்' பரப்பிக் கொண்டிருந்தேன்.

அவனது பழைய நக்கலும் சிரிப்பும் வருவதற்கு இரு வாரங்கள் ஆயிற்று.

பழையபடி அவன் போராளி யாய் வந்துவிட்டான்.

***

வெய்யில் கொதித்துக் கொண்டி ருந்த ஒரு நடுப்பகலில், வியர்க்க விறுவிறுக்க சைக்கிளில் வந்து நின்று 'பெல்' அடித்தபடி....

www.tamilarangam.net

"மாஸ், மாஸ்"

என்று கத்தினான் பாலன்.

நான் பதறிப் போனேன்,

"என்னடா நடந்தது".

சிரி சிரியென்று சிரித்தான். ஒரு பைத்தியக்காரனைப் போல் சிரித்தான்.

நான் அவனுக்குப் பின்னால் திரிந்தேன். அவன் வீடு முழுக்க நடந்தான். சிரித்தான், நடிகர்களைப் போல் 'போஸ்' கொடுத்தான், திரும் பினான், சிரித்தான், கடைசியில் சொன்னான்.

"மாஸ், நான் நாளைக்கு நாட் டுக்குப் போறனே, காலமதான் ஓடர் வந்தது" என்றான். மகிழ்ச்சிக் கடலில் துள்ளினான்.

"சரி, அப்ப இரவுக்கு வீட்டை வந்து சாப்பிடன்" என்றேன்.

சரி, என்றுகூடச் சொல்லாமல் ஒரு குழந்தையைப்போல் ஓடிச் சென்று சைக்கிளில் ஏறித்தாவி சுட் டெரிக்கும் அந்த வெய்யிலில் மறைந்து போனான்.

***

இரவு வந்தான்.

சாப்பிட்டான்.

அதிகம் பேசவில்லை.

போகும் போது மட்டும் - ஆரத் தழுவினான். தான் போட்டிருந்த 'சோட்' ஐக் கழற்றி எனக்குத் தந்தான். அங்கே கிடந்த எனது 'சேர்ட்' ஐ எடுத்துப் போட்டான்.

போய்விட்டான்.

***

சில நாட்களின் பின்னர், நான் வாழ்வில் கேட்க விரும்பாத சேதி வருகிறது.

பண்டாரிக்குளத்தில் 29-07-85 சிறி லங்கா படையினர் சுற்றிவளைத்த னர்.

பாரதநாட்டின் - காந்திதேசத்தின் சூதாட்டத்தில், மாற்று இயக்கத் தினருடைய கூட்டுச் சதியில்,

பாலனைப் பின்புறமிருந்து சுட் டுத் தள்ளிச் சல்லடை போட்டா யிற்றாம்.

அவன் பிறந்தது வவுனியாவில்- அவனது கனவு G3 யால் தன்கிரா மத்தை ஆக்கிரமித்த ஆக்கிரமிப்பா ளரைச் சல்லைடை போட வேண் டுமென்பது.

'கானடா' இராகத்தின் உச்சஸ் தாயி இசையலைகள் அதிர்வுகளாய் வவுனியா எங்கும் பரவுகிறது. அந்த அலைகள் பாலனைப் போல் பல பாலகர்களை பாதிக்கிறது.

பாலனின் கனவலைகளும்... பால கர்களின் உணர்வலைகளும்.... மலை யுச்சியொன்றில் சுதந்திரக் கொடியை நாட்டும் மாவீரனின் எக்காளம் போல் வவுனியா எங்கும் அதிர்ந்து கொண்டிருக்கின்றன. ★

## வெண்தாமரைக் காலம்

**- ந. சத்தியபாலன்**

நீலவான் ஆடைக்குள்
முகம் மறைத்து
நிலவென்று ஒளிமுகம்
காட்டுவது
தண்மதியென நம்பியோர்
மூடராயினர்
காலங்காலமாய் இம்மண்ணில்
தமிழர் உயிரும்
உடமைகளும்
விழுங்கிச் சுவாலித்ததீயே
இன்று
நிலவென்று
வானேறிக்கொண்டது.
இன அழிப்பு யாகத்துக்கு
கொள்ளிகொழுத்த இன்று
உதவுவது
இந்த நெருப்புக்
கோளம்தான்!
அறிவுத் தெய்வம்
குடியிருக்கும் கோயிலென
என்னம்மா கற்பித்த
வெள்ளைத் தாமரையை
இன்று ஒரு
துர்த்தேவதை
கையிற் கிள்ளி வைத்துக்
கூத்தாடுகிறாள்.
விரிந்த அதன்
இதழ்களிடை
எங்களூர்ப்
பாலகரின்
சிதறிய உடற்துண்டங்கள்!
தடாகம் முழுவதும்
இரத்த நெடி!!
சேற்றில் விழுந்து
முழுகி
விழி பிதுங்கித்
தவிக்கிறது
பௌத்தம்!!

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# சந்திரிகாவுக்கு நன்றி

சந்திரிகாவுக் கெந்தன் தலைசாய்த்தேன்.
கைகூப்பி
அந்தப் "பெருமாட்டி" அமரும் திசைநோக்கி
கும்பிட்டேன்;
"இரணமடுக்" குளத்தின் கரையமர்ந்து
எம் மூழுகை எடுத்துண்ணச் செய்தவளாம்
"அம்மா" இல்லையென்றால்...
அடியேனிவ் வழகை யெல்லாம்
உண்ணாமற்றானே உயிர்நீத்துப் போயிருப்பேன்.
கண்ணாலிவ் வெழிலையெல்லாம் காணாமல்;
செத்திருப்பேன்
"பரவிப்பாஞ்சா"னில் பாம்பாய் நெழிந்து,
நிலம்
உருகிவழிந்தோடும் ஊற்றுப் பெருவாய்க்கால்
அருகமர்ந்து;
மாலை அழகையெல்லாம் அள்ளுவதில்,
இரணமடுக் குளத்தின் இருகரையும் உயர்ந்திருக்கும்
அரணிருந்து;
காலை அழகைப் பருகுவதில்,
என்ன சுகம்.
அதற்கு ஈடுயிணை ஏதுமில்லை
கன்னியழகோடு கதிர்தள்ளும் "முரசுமோட்டை"
அன்னைவயலெழிலை அனுபவிக்காதிருப்பவனே
புண்ணியங்கள் செய்யாப் பெரும்பாவி
'விசுவமடு'க்
காடும், 'தருமபுரக்' கானிகளும்,
மயிலாடும்
புலவுகளும்; எனக்குப் புதுவாழ்வு தருகிறது.



கலவிமயக்கத்திற் கண்திறக்கும்;
புதுமணப்பெண்
போல... நடக்கின்ற பொன்னருவி,
மண் நனைத்துக்,
காலை நனைத்துக் கண்சிமிட்டிப் போகிறது.
கழுத்திற் கயிறுபடாக் கறவையினம்
மடிகனத்துப்;
பொழுதுபட வீட்டுக்குப் போய்ச் சுரந்துதள்ளிவிட்டு,
விழுதெறிந்த ஆலவிருட்சத்தின் கீழுறங்கும்.
வா மச்சான்;
வந்தென் வளைக்கரத்தைப் பிடித்துவிட்டுப்
போ மச்சான்; என்று புறாக்கள் அழைக்கிறது.
மரம்தாவி விளையாடும் மந்திக்குலம்;
எனக்குச்
சிரம் தாழ்த்தி ஏதோ சொல்லிவிட்டுச் சிரிக்கிறது.
பச்சை வயல் மீது பறந்து வந்து
வெண் கொக்கு
இச்சையுடன் ஏதோ இரைபொறுக்கும்.
நீண்டோடும்
ஒட்டுசுட்டான்வீதி ஓரழகு;
மல்லாவி,
வட்டக்கச்சி வேறோர் வடிவு;
மாங்குளமோ
இன்னோரழகு;
இங்கெல்லாம் அழகு மயம்.
பன்னீர் தெளிக்கிறது பனிக்காலம்;
வன்னியிலே....
பென்னம் பெரிய நுளம்பென்றும்; பேயென்றும்,
கண்திறக்கும் இடமெல்லாம் கரும்பாம்பு,
தேளென்றும்;
சொன்னவனைக் கூட்டிவந்து தூக்கில்லிட்டாற் கூட
எந்தன்
கோபமடங்காது; கிளிநொச்சி வாய்க்காலில்
தேகம் நனைப்பவனின் ஜென்மம் முழுமை பெறும்,
சந்திரிகாவுக் கெந்தன் தலைசாய்த்தேன்.
நல்லூரில்;
வந்திருந்த எந்தன் வாழ்வைப் பறித்து விட்டு
ஓடென்றாள்;
வன்னிக்கு ஓடிவந்தேன்;
இப்போது
பாடித்திரியும் பறவையைப் போல்...
நானிங்கு,
ஆடித்திரிகிறேனே; அப்போதும்! அப்போதும்!!

- புதுவை இரத்தினதுரை

www.tamilarangam.net

# நேர்காணல்:
# அருட்தந்தை அருள்ராஜ்

## நேர்முகம்: சுபா

**அருட்தந்தை சேவியர் அருள்ராஜ் அடிகளார் தமிழகத்தில் ஒரு மதகுருவாகவும், அதேநேரம் உழைக்கும் மக்கள் விடுதலை இயக்கத்தின் முக்கியஸ்தராகவும் இருந்துவருகிறார்.**

**அண்மையில் ஐரோப்பிய நாடுகளில் சுற்றுப்பயணம் மேற்கொண்டிருக்கும் இவர் எரிமலை இதழுக்கு வழங்கிய செவ்வி...**

❋ ***தமிழீழ மக்களின் விடுதலைப் போராட்டத்தை நசுக்கிவிட வேண்டும் என்று இந்திய ஆளும் வர்க்கம் செயற்படுவதாகத் தெரிகிறது. இது ஆழமான தீர்க்கதரிசனம் கொண்டதா?***


✸ இந்திய ஆளும்வர்க்கத்தின் இம் முயற்சி முட்டாள்தனமானது. நீண்டகாலப் பார்வையற்றது. எந்தவொரு தேசிய இனத்தின் விடுதலைப் போராட்டத்தையும் நசுக்கி விட முடியாது. நெடும்போக்கில் அது எதிர்மறை விளைவுகளையே ஏற்படுத்தும்.

❋ ***தமிழீழமக்களின் விடுதலைப் போரில் தமிழக மக்கள் துடிப்புடன் செயற்படத் தொடங்கியிருக்கிறார்கள். இச் செயற்பாடு பரந்துபட்டதாக, அரசியல் விழிப்புணர்வினடிப்படையில் நிகழ்கிறதா என்ற கேள்வி சில மேற்குலக ஆய்வாளர்களிடம் எழும்பக் காரணம் என்ன?***

✸ தென்னாசியப் பகுதியின் பிரச்சினைகளில், இந்தியாவின் நிலைப்பாட்டைப் பகைத்துக்கொள்ள, சில மேற்குலக அரசியல் ஆய்வாளர்கள் அஞ்சுகின்றனர். மற்றபடி, தமிழக மக்களின் அரசியல் விழிப்புணர்வு பற்றி அவர்களுக்குத் தெரிந்திருக்க நியாயமில்லை. இந்தியாவின் சந்தை வாய்ப்புக்கள், அரசியல் நியாயங்களை விட அவர்களுக்கு முக்கியமாய்ப் படுகிறது.

❋ ***தமிழர்கள் தன்னாட்சி உரிமையுடைய மக்கள் என்ற தேசிய உணர்வு தமிழகத்தில் எழாமைக்கு யார் காரணர்கள் எனக் கருதுகிறீர்கள்?***

✸ இந்திய ஆளும்வர்க்கத்தின் தரகர்களாய் நின்று, தமிழகத்தில் அரசியல் நடத்தும் அகில இந்தியக் கட்சிகளும் ஒரு காரணம். தவிர, தமிழ் - தமிழர் எனப்பேசி, அதிகாரத்தைப் பிடிப்பதற்கு மட்டும் அதைப் பயன்



படுத்தித் தமிழ் மக்களுக்குத் துரோகம் புரிந்த தமிழகத்தின் அரசியல் கட்சிகளும் மற்றொரு காரணம்.

❋ ***நீங்கள் தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் தீவிர அக்கறை கொண்டு நீண்டகாலமாகச் செயற்பட்டு வருகிறீர்கள். இத்தகைய செயற்பாட்டுக்கான உந்துதல்களாக இருந்தவை எவை?***

✸ தமிழின் மீதும், தமிழரின் வாழ்வியல் மீதும் கொண்ட பற்றும், மனிதத்தின் மீது உள்ள நம்பிக்கையும், சுதந்திரத்தின் பால் உள்ள வேட்கையும் தவிர வேறல்ல.

❋ ***தமிழக மக்கள் மத்தியில் ஆழமாகப் புரையோடிய "சினிமா" கனவுலகம் ஏற்படுத்தும் மாயையிலிருந்து மக்களை விடுவிப்பதற்கான சிந்தனைகள் தோற்றம் பெறுகின்றனவா? அவை எவ்வாறான வேலைத் திட்டங்களுக் கூடாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன?***

✸ திரை மாயையை உடைப்பதற்குச் சரியான சிந்தனையும், வேலைத் திட்டங்களும் தற்பொழுது இல்லை. இருப்பினும் சரியான அரசியல் அச்சும், தகுதியான தலைமையும் தமிழகத்தில் எழுகின்ற போது, திரை மாயை பெருந்தடையாய் அமைய முடியாது. அரசியல் வெற்றிடத்தை திரை மாயை நிரப்புகிறது.

❋ ***தமிழ்த் தேசிய உணர்வு இந்திய ஒருமைப்பாட்டுக்கு குந்தகமாக இருக்கும் என்ற அச்சம் நியாயமானதா?***

✸ தமிழ்த் தேசிய உணர்வு இந்திய ஒருமைப்பாட்டிற்கு எதிரானதல்ல. இவ்வச்சம் அடிப்படைகளற்றது. அதன் தேசிய இனங்களின் இயல்பான கூட்டமைப்பாய் இந்திய அரசு

**தமிழ்த் தேசிய உணர்வு இந்திய ஒருமைப்பாட்டிற்கு எதிரானதல்ல. இவ்வச்சம் அடிப்படைகளற்றது.**

தன்னைத் தகவமைத்துக் கொள்வதிலேயே இந்தியாவின் ஒருமைப்பாடு அடங்கியுள்ளது. இன்றைய இந்திய - ஒற்றை அரசமைப்பும், அதிகாரக் குவியலும் மட்டுமே இந்திய ஒருமைப்பாட்டிற்குக் குந்தகமாக அமையக்கூடும்.

❋ ***இந்தியாவில் ஹிந்தி படிப்போரின் வீதம் அதிகரித்து வருகிறதே. குறிப்பாக தமிழகத்திலும் ஆங்கிலம், ஹிந்தி படிப்போர் தொகை அதிகரித்து வருகிறது. இது பற்றிய தங்கள் கருத்து என்ன?***

✸ இவ்வெண்ணிக்கை அதிகரிப்பு இயல்பானதல்ல. ஒரு செயற்கை

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

வீக்கமே. 'இந்தி படித்தால் வேலை உண்டு' என்ற பொய்யான கருத்துப் பரப்பல் ஒரு காரணம். இந்தி பேசும் மாநிலங்களிலேயே பலருக்கு வேலையில்லை. ஆங்கிலம் படித்தால் வேலை கிடைக்கும் என்பதும் அபத்தமானது. இங்கிலாந்திலேயே பலருக்கு வேலை இல்லை. தமிழே எழுதப் படிக்கத் தெரியாமல் தமிழர்கள் பலர் வாழும் நிலையில், வேறுமொழி பற்றிப் பேசுவது சரியல்ல. தமிழ்நாட்டில் அனைவரும் தமிழை அறிய வேண்டும். மத்திய, மேல்தட்டு வர்க்கத்திடம் உள்ள இவ்வுணர்வு மேலோட்டமானது; வேர்களற்றது; பொதுவானதுமல்ல.

**❊ ஐரோப்பா பூராகவும் அகதிகளாய் பரந்து கிடக்கும் தமிழீழ மக்களைச் சந்தித்த நீங்கள் அவர்களிடம் கண்டு கொண்டவை என்னவென்று கூறுவீர்களா?**

✸ உறையும் பனியிலும் அவர்களின் சுதந்திர வேட்கை கொழுந்து விட்டெரிகிறது. தமிழீழம் அமைப்பது அவர்கள் தீர்மானம். அது விரைவில் அமையும் என்பது அவர்களின் நம்பிக்கை. அவர்கள் அதற்காக எத்தியாகத்தையும் மேற்கொள்ளத் தயாராயிருப்பது கண்கூடு. தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பை அவர்கள் ஒரு தேசிய அமைப்பாகப் பார்க்கின்றனர். தம்பி பிரபாகரனின் தலைமை மீது அளவில்லா மதிப்பும் நம்பிக்கையும் கொண்டுள்ளனர். தாயகம் திரும்பிட அனைவரும் துடிப்பாயுள்ளனர். அகதியாய் வாழும் அவலத்தை வெறுக்கின்றனர்.

**❊ அவர்களுக்கு விசேடமாக எரிமலை இதழுக்கூடாக நீங்கள் என்ன சொல்ல விரும்புகிறீர்கள்?**

✸ தமிழீழம் அமைப்பதற்கும், இப் பரந்த உலகில் தமிழர் ஒரு தாயகம் பெறுவதற்கும் உரிய காலம் கனிந்துள்ளது. தகுதி மிகுதி படைத்த தலைமையும் வாய்த்துள்ளது. இவ் வாய்ப்பினை அவர்கள் சரியாகப் பயன்படுத்திக் கொள்ளவேண்டும். தவறினால் என்றைக்கும் தமிழன் அடிமையாகவே இருக்க நேரிடும். எனவே போரின் கொடுமைகளுக்கிடையே மலரவுள்ள புதிய உலகை அவர்கள் தரிசனம் காணவேண்டும். இதுவே இலட்சியத்திற்கு நம்மைக் கொண்டு சேர்க்கும்.

★★★





# இலங்கைத் தமிழர்கள் துயர் தீர பால் அபிஷேக பிரார்த்தனை ஊர்வலம்!

இலங்கையில் துயருறும் தமிழர்கள் நலம்பெறவும், அங்கு அமைதி மலரவும் பால் அபிஷேக (1008 குடங்கள்) பிரார்த்தனை ஊர்வலம் ஒன்று மலேசியா தலைநகரான கோலாலம்பூரில் நடைபெற்றது.

ஜாலான் பண்டார் சிறீமகாமாரியம்மன் ஆலயத்தில் இருந்து புறப்பட்டு பிரிக்பீல்ட்ஸ், ஜாலான் ஸ்கோட் கந்தசுவாமி கோவிலை வந்தடைந்த இப் பால்குட ஊர்வலத்தில் சுமார் 700 பேர் பால் குடங்களை ஏந்தியவண்ணம் பங்கேற்றனர். மலேசிய நாதஸ்வர தவிலிசைக் கலைஞர்கள் சங்கம் பால் அபிஷேக பிரார்த்தனைக்கு ஏற்பாடு செய்திருந்தது.

காலை மணி 8,30-க்கு ஊர்வலம் புறப்பட்டு காலை மணி 10.30 அளவில் கந்தசாமி கோவிலை வந்தடைந்தது.

அதன் பின்னர் நண்பகல் 12.30 மணிக்கு விசேட பூசையும், பிற்பகலில் அன்னதானமும் நடைபெற்றது.

பால் அபிஷேக ஊர்வலம் குறித்து மலேசிய நாதஸ்வர தவிலிசை கலைஞர் சங்க பொதுச்செயலாளர் எம். ராமலிங்கம் கூறியதாவது:

இலங்கைத் தமிழர்களின் நலனுக்காக பல்வேறு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன. அவர்களது சமூக நலனுக்காக நிதி திரட்டியும் வழங்கப்பட்டு வருகிறது. எங்களது சங்கத்தின் சார்பாகவும் ஒரு நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்து, இலங்கைத் தமிழர் நிவாரண நிதிக்கு உதவியிருக்கிறோம். இருபத்தொரு வெள்ளி வழங்கி பால்குட ஊர்வலத்தில் பங்குபற்றலாம் எனக் கேட்டுக்கொண்டிருந்தோம். எதிர்பார்க்கப்பட்டதற்கும் மாறாக அநேகர் பால்குடம் ஏந்தி தமிழர்கள் நலம்பெற அமைதிப் பிரார்த்தனையில் கலந்துகொண்டது மகிழ்ச்சியைத் தருகிறது.

எங்களது சங்கத்தின் சார்பாக இலங்கைத் தமிழர் நிவாரண நிதிக்கு இன்னும் பல வகையிலும் உதவத் தயாராக இருக்கிறோம் என்று திரு. இராமலிங்கம் உறுதியுடன் கூறினார்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

# கரும்புலி லெப். கண்ணன் (சத்துருக்கன்)

www.tamilarangam.net



# கனவை நனவாக்கியவன்

**1991-ம்** ஆண்டு 9-ம் மாதம், மணலாற்றில் 'மின்னல்' இராணுவ நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டது. அப்போது அனைத்துப் போராளிகளும் சண்டைக்குத் தங்களைத் தயார்ப்படுத்திக்கொண்டு இருந்தார்கள். சத்துருக்கன் சின்னவன் என்ற காரணத்தால், பொறுப்பாளர் அவனைச் சண்டைக்கு அனுப்பவில்லை. உடனே அவரிடம் சென்று, "நீங்கள் ஏன் என்னைக் கழித்துவிட்டீர்கள்? ஏன் நான் சண்டை பிடிக்கமாட்டேனோ? இப்படித்தான் நீங்கள் என்னைப் பலமுறை ஏமாற்றி விட்டுச் சண்டைக்கு சென்றீர்கள். ஆனால் இந்த முறை என்னையும் கூட்டிக்கொண்டு போகவேணும்" என்று அடம் பிடித்து சண்டைக்குச் சென்றான்.



இவன் பிறந்த இடம் கடலும் கடல் சார்ந்த நிலமுமான ஒரு நெய்தல் கிராமமாகும். உடுத்துறைக் கடல் அலையின் நுரை சிதறிக் காய்ந்த பெரும் மணல் வெளியில், காலைக் கதிரவன் கண் விழிக்கும் வேளையில், நவரத்தினம் தம்பதிகளின் புதல்வனாய், 1975-ம் ஆண்டு ஆவணி மாதம் 24-ம் திகதி தமிழீழ மண்ணில் வந்துதித்தான். தாய் தந்தையர் இவனுக்கிட்ட பெயர் நேசகுலேந்திரன். வீட்டில் செல்லமாக வசந்தன் என அழைக்கப்படுவான். இவனது குடும்பமோ ஒரு வறிய குடும்பமாக இருந்தது.

1981-ம் ஆண்டு, உடுத்துறை மகாவித்தியாலயத்தில் தனது ஆரம்பக் கல்வியை ஆரம்பித்தான். இவன் படிப்பில் மிகவும் அக்கறையாகவும் விளையாட்டில் சுறுசுறுப்பாகவும் இருந்தான். சமூக வேலைகளிலும் முன்னின்று செயற்படுவான். பள்ளியில் படிக்கும்போது வீட்டு வறுமையின் காரணத்தால், தனது அண்ணனுடன் கடற்தொழிலுக்குப் போய் வருவான். ஆனாலும் இவன் தனது படிப்பைக் கைவிடவில்லை. வசந்தனின் அண்ணன் எமது இயக்கத்திற்குப் படகோட்டியாகச் செல்வார். ஒருநாள் ஓட்டியாகச் சென்றவர் திரும்பி வரவேயில்லை. என்ன நடந்தது என்று, இன்று வரையும் தெரியவில்லை. தாய், தனது மகனைக் கடற்கரையில் வழிமேல் விழிவைத்துப் பார்த்தவாறு சிலநாட்கள் காத்திருந்தாள்; ஆனால் இன்னமும் தான் வரவில்லை.

அதன் பின்னர் அவன் தனியாகவே கடற்தொழிலுக்குச் சென்று வருவான். ஒரு நாள் வசந்தன் கடற்தொழிலுக்குச் செல்லும்போது தாய் மறித்தார் - "நீ தனியாகக் கடலுக்குப் போகவேண்டாம்" என்றார். அப்போது அவன் அம்மாவுக்குச் சொன்னான், "நேவி வந்தால் நான் நீந்தி வந்துவிடுவன். நீங்கள் கொஞ்சம் பேசாமல் இருங்கோ." இவ்வாறு கூறி விட்டு அவன் வழமைபோல் கடலுக்குச் சென்று வருவான்.

அந்த வேளையில்தான் இந்திய ஆக்கிரமிப்புப் படை எமது மண்ணில் காலடிவைத்தது. இந்திய தமிழீழப் போர் ஆரம்பமாகியது. அவ்வேளையில் அவனது குடும்பத்தினர் எமது இயக்கத்திற்கு மிகவும் ஆதரவாக இருந்தார்கள். எமது இயக்கத்தின் வெடி மருந்துகளை வீட்டு வளவினுள் பதுக்கிவைத்துப் பாதுகாத்துக் கொடுப்பார்கள். ஒரு நாள் இந்திய இராணுவமும் தேசத் துரோகிகளும், உடுத்துறைக் கிராமத்தைச் சுற்றி வளைத்தனர். அன்று வசந்தனின் வீட்டிற்கு இராணுவம் வந்து, அவனது தகப்பனை, "எல்.ரி.ரி.ஈ. இங்கு வந்ததா?" எனக்கேட்கும் போது, அந்தக் கிராமத்தைச் சேர்ந்த ஒரு தேசத்துரோகி, "இவங்கள் இயக்கத்திற்கு ஆதரவு; இவங்களை விடாதையுங்கோ" என்று சொன்னான். ஆத்திரமடைந்த இந்திய இராணுவத்தான் ஒருவன் வசந்தனது தகப்பனுக்கு அடித்தான். உடனே வசந்தன், "அப்பாவுக்கு அடியாதையுங்கோ" என்று கத்தியபடி தகப்பனைக் கட்டிப்பிடித்தான். அதன் பின் இந்திய இராணுவம் அவனது வீட்டை விட்டு வெளியே சென்றது. அதன் பின்னும் அவனது குடும்பத்தினர் இயக்கத்திற்கு உதவிகள் பல செய்துவந்தனர்.

இப்படித்தான் ஒரு நாள் வசந்தன் ஆடு மேய்க்கச் செல்லும்போது, வசந்தனின் கிராமத்துக் கோயிலுக்கு அருகிலுள்ள பற்றை ஊடாக ஒரு போராளி ஓடி வந்தான். அப்போது வசந்தன் அந்தப்போராளியைப் பார்த்து, "என்ன அண்ணை ஓடி வாறியள்? என்ன நடந்தது?" எனக் கேட்டான்.

அதற்கு அந்தப் போராளி, "என்னை ஆமி கலைச்சுவாறான்" என்று கூறவே, உடனே வசந்தன் அந்தப் போராளியைத் தனது வீட்டுக்குக் கூட்டிச் சென்று, வீட்டின் மூலையில் இருக்க விட்டு, வலையினால் மூடிவிடுகிறான். அப்போது இந்திய இராணுவமும் தேசத்துரோ

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

கிகளும் காலடிகளைப் பார்த்து வசந்தனின் வீட்டிற்கு வந்தனர். வசந்தனின் வீட்டிற்கு இராணுவம் வந்ததும் வீட்டைச் சோதனையிட்டார்கள். அப்போது ஒரு தேசத் துரோகி வசந்தனைப் பிடித்து, "மூலையில் ஏனடா வலையைக் குவித்து வைத்திருக்கிறாய்? வலைக்குள் என்னடா இருக்குது?" என்று அதட்டிக் கேட்டான். அதற்கு வசந்தன் "வலைக்குள் ஒண்டும் இல்லை..... அப்படியெண்டால் நீங்கள் அதை எடுத்துப் பாருங்கோ" எனத் தளராது பதில் கூறினான்.

அதன் பின், தேசத்துரோகி வசந்தனின் தாயாரிடம், "இஞ்சை இயக்கம் வாறது என்று அறிஞ்சனாங்கள்; உங்களைக் கவனிக்கிறம்" என்று சொல்லிவிட்டுச் சென்றான். அதன் பின் 1990-ம் ஆண்டு முற்பகுதியில், இந்திய இராணுவம் எமது மண்ணை விட்டு வெளியேறியது.

எமது மக்கள் பட்ட இன்னல்களைக் கண்டு வசந்தனின் உள்ளம் குமுறியது. துள்ளி விளையாடும் பள்ளிப் பருவத்தினிலே தூய விடுதலைக்காய் துப்பாக்கியினைத் தோளில் ஏந்தத் துணிந்துவிட்டான். அந்த வகையில்தான் 1990-ம் ஆண்டு பங்குனி மாதம், எமது இயக்கத்தில் தன்னை முழுநேர உறுப்பினராக இணைத்துக்கொள்கிறான். சத்துருக்கன் எனப் பெயர் சூட்டப்பட்டு, பயிற்சி முகாமில் பயிற்சி எடுத்துக் கொண்டிருந்தான். அவன் பயிற்சிப் பாசறையில் சிறுவனாக இருந்தாலும், எந்தப் பயிற்சியினையும் ஓர்மத்துடனும் சலிப்பில்லாமலும் எடுத்து முடித்தான். பயிற்சி முகாமில் பயிற்சி முடிந்ததும், இவனும் இன்னும் சில போராளிகளும் ஒரு முகாமில் இருந்தார்கள். பின்னர் இவனுடைய திறமையைக் கண்ட பொறுப்பாளர், இவனைப் பலாலி காவலரணுக்கு அனுப்பி வைக்கிறார். அங்கே இவன் இருக்கும்போது, எமது கண்ணிவெடிப் பிரிவினர் கண்ணிவெடி வைக்கப் போகும்போது அவர்களுடன் சென்று கண்ணிவெடிகள் வைப்பான். கண்ணி வெடிகளைப் பற்றி அறியும் ஆர்வத்தில் மற்றைய போராளிகளிடம் கேட்டு அறிவான்.


1991-ம் ஆண்டு 12-ம் மாதம் பலாலி இராணுவம் வளலாய்ப் பகுதியை நோக்கிய ஒரு இராணுவ நடவடிக்கையை மேற்கொண்டது. அந்தச் சண்டையில் திறமையுடன் சண்டை செய்தான் சத்துருக்கன். அதன் பின் ஒரு காவலரணுக்குத் தலைமை தாங்கி, அங்கு ஒரு சில மாதங்கள் இருந்தான். அதன்பின்னர் வடமராட்சிக் கிழக்குப் பகுதி காவலரணுக்கு அழைத்துச் செல்லப்பட்டு, வெற்றிலைக்கேணி காவலரண் பகுதியில் இடம் தெரியாத போராளிகளுக்கு ஒரு வழிகாட்டியாக இருந்தான். அவன் எல்லாப் போராளிகளிடமும் அன்பாகப் பேசிப் பழகுவான். போராளிகளுடன் சேர்ந்து சிரிப்பூட்டும் பகிடிகளும் விடுவான். அங்கே போராளிகளுக்கு இடங்களைக் காட்டியபின், 1992-ம் ஆண்டு 7 ஆம் மாதமளவில், வடமராட்சிக் கோட்டப் பொறுப்பாளர் மேஜர் பிறேமநாத் அண்ணாவால் இவனும் இன்னும் சில போராளிகளும் தெரிவு செய்யப்பட்டு வேவுப் பயிற்சி அளிக்கப்பட்டு வளலாய்க் காவலரணுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

அப்போது அவன், தனக்குக் கொடுக்கப்பட்ட வேவுப்பணியில் மிகவும் திறமையுடன் செயற்பட்டான். இவன் வேவுக்குச் சென்று எதிரியின் காவலரணுக்கு முன்னுள்ள கம்பிவேலிக்கு உட்பகுதியில் எதிரி புதைத்து வைத்த மிதிவெடிகளை எடுத்து வருவான். வேவுக்குச் சென்று எதிரியின் நடமாட்டத்தை அவதானிக்கும்போது இராணுவம் சத்தம் போட்டுக் கதைத்தால், மற்றைய போராளிகளுக்குச் சொல்லுவான், "இப்ப கதைக்கிறார். இன்னும் கொஞ்ச நாளிலை தெரியும் எங்கட விளையாட்டு" என்று.

இவன் வேவுக்குச் செல்லும் போது பல நாட்கள் சாவின் விளிம்பில் ஏறி நடந்தான். ஊருறங்கும் நேரத்திலே எதிரியின் பாசறையில் தகவல் பெற்றிட, சிறந்த வேவு வீரனாக இவன் திகழ்ந்தான். வேவுக்குச் செல்லும் போது பல தடவைகள் மரணம் இவனோடு மல்லுக்கட்டியது: வெல்ல முடியவில்லையே என்று வேதனைப்பட்டது சத்துருக்கனின் ஆசை போல், பலாலி கிழக்கு - வளலாய்ப் பகுதியில், 150 காவலரண்கள் எம்மவர்களால் தாக்கி அழிக்கப்பட்டன.

அந்தச் சண்டை முடிந்தவுடன் தனது பொறுப்பாளரிடம் சென்று, "நான் கரும்புலிக்குப் போகப்போறன்" என்று கேட்டு, அவன் கரும்புலிக்குச் சென்றான். கரும்புலிகளுக்கான பயிற்சினை முடித்தவிட்டு கரும்புலி அணியின் ஒரு குழுத் தலைவனாக தொண்டமானாறுக்கு அனுப்பி வைக்கப்பட்டான். அவர்களது இலக்கு பலாலி விமான நிலையத்தை ஊடுருவித் தாக்கி அழிப்பதே! சத்துருக்கன் என்னை இறுதியாகத் தொண்டமானாற்றில் வைத்துச் சந்தித்தான். அப்போது என்னுடன் கதைக்கும்போது "இனி எங்கட மக்கள் சுதந்திரமாக வாழப் போகிறார்கள். தமிழன் தலைநிமிர்ந்து நடக்கப் போகிறான். அதற்கு நாங்கள்தான் வழிகாட்டியாக இருக்கப் போகிறோம்" என்று சொன்னான்.

அதன் பின் 12-11-93 அன்று மாலை. கடல் அலைகள் ஓய்வு எடுத்துக்கொண்டிருந்தன, ஆனால் கரும்புலிகள் ஓய்வெடுக்கவில்லை; தமது இலக்கை நோக்கிப் பயணத்தை மேற்கொண்டனர். என்




www.tamilarangam.net
தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

னவோ கடலன்னைக்குப் பொறுக்க வில்லைப் போலும். திடீரென நீரோட்டம் அதிகமாக இருந்தது. ஆனாலும் கரும்புலிகள் தமது முயற்சியைக் கைவிடவில்லை. விடியற் காலை 4.00 மணியிருக்கும். ஈ கூட நுழையமாட்டாது எனக் கூறிக் கொண்டிருந்த அந்தச் சிங்கத்தின் குகைக்குள், சிறுத்தைக் கூட்டம் நுழைந்து கொண்டிருந்தது. இவர்கள் தாக்குதலுக்குச் சென்ற நேரம் தவறி விட்டது. இவர்களின் தாக்குதல் திட்டமும் மாறிவிட்டது.

மறுநாள் 13-11-93 அன்று, காலை 9 மணி. இவர்கள், விமான நிலையத்தில் இருந்து சற்றுத் தொலைவில் எதிரியை அவதானித்தபடி இருந்தார்கள். அப்போது ஒரு நாய் அவர்களை நோக்கி வந்துகொண்டிருந்தது. அதன் பின்னால் ஒரு இராணுவச் சிப்பாயும் வந்துகொண்டிருந்தான். இவர்களைக் கண்டுகொண்டான். அவன் இவர்களைக் காணாதது மாதிரி பின்னுக்குச் சென்று பின்னர் பல இராணுவத்தினரைக் கூட்டிக் கொண்டு அந்த இடத்திற்கு வந்தான். தங்கள் கிளைகளோடு கிளம்பிய அவர்கள், ஆயிரம் ஆயிரம் கைகளில் ஆயுதங்களைப் பிடித்தபடி, ஆகாயத் 'தும்பிகளின்' துணையோடு அந்த இடத்திற்கு வந்தனர். அப்போதுதான் போர் மூண்டது. சத்துருக்கனின் அணியினர் தாக்குதலைத் தொடுத்தனர். அந்த இடத்திலேயே பல இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். அப்போது எதிரி தாக்கிய 40 எம். எம். பிஸ்டல் குண்டு ஒன்று சத்துருக்கனின் இரு கால்களையும் பதம் பார்த்தது. உடனே மற்றைய போராளிகளுக்குச் சத்துருக்கன் கட்டளையிட்டான். "எனது இரண்டு கால்களும் போய்விட்டன. நான் குப்பி கடிக்கப் போகிறேன். நீங்கள் மூவ் பண்ணுங்கோ."

சாவையே குப்பியில் அடைத்து - மரணத்தையே கழுத்தினில் மாலையாகச் சுமத்தி - சரித்திரம் படைத்துவிட்டான். சாவை முறியடிக்க சிலர் சாத்திரம் பார்க்கும் நேரம், சாவையே முதுகிலேந்தி பலாலி மண்ணில் சரித்திரம் படைத்துவிட்டான் லெப். சத்துருக்கன் (கண்ணன்). சாவு அவனைச் சந்தித்த போதும்கூட எமது தாய் நாட்டையும் தலைவனையும்தான் அவன் நினைத்திருப்பான்! ★★

## தேற்றம்


கங்குல் மடிந்து விழக் காலை இரவி
எழுந்து பொங்கிச் சுடர்கிறது.
செந்நெல் வயற் பரப்பெல்லாம்
கதிர்கள் தலைசாய
எங்கள் ஊர் இனிது
தங்கியிருந்த வாழுங்கள் தலைநகரம்
இதுவென அறையும் துங்கம் உயர் கல்வயல்.

'தஞ்சம் என வந்தடைந்தோம்.
தாயே!'

உன் மடியில் துஞ்சி மடிகின்றார்.
துயர் உறுகின்றார். ஏதுமற்ற ஏதிலியாய்
ஊர்மனை துறந்து வந்தடைந்தார்.
நீள வழி நடந்து
நெகிழ்ந்த பாதம் புண் கொள்ள கோல மங்கையரும்
கோலம் கலைந்து குலைவுற்றார்.
துள்ளி நடக்கும் குழவியார் கூட
தொலைதூரம்
உறக்கமும் இன்றி துயர் சுமந்தார்.
வான மழை உதிர்ந்து இரங்கிற்றோ?
அன்றி தானும் இடர் கூட்டி உரம் ஊட்டிற்றோ?

ஆற்றல் மிகுந்தவர் ஆயுதம் ஏந்திடில்
நாட்டு விடுதலை நாடி வரும்
பாட்டுக்கள் பாடிக் களித்திடலாம்
காற்றும் தாலாட்டி 'காசினியே எமது கலக்கமேன்?'
என்றே பாடிடலாம்.
தூற்றிய பதர் விலக்கி
மாற்றலரை மாய்த்து விடின் வாட்டம் பிறகேது?
வேற்றவர் போயொழியும் வேளை வந்துறும்.
வாட்டம் கொள்ளற்க!
கூற்றுவர் போய் மடிவார். குதூகலம் ஊற்றெடுக்கும்.
கரை உடைத்து சுதந்திரம் வந்ததென்று
முரசறையும் பார்த்திருப்பீர்
வாட்டம் கொள்ளற்க!

- பவித்திரன்




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# லெப். கேணல் பொன்னம்மான்

**தந்தை தாய் இருந்தால் நமக்கிந்த தாழ்வெல்லோம் வருமோ ஐயா...**

என்ற பாடல் முகாமுக்குள் ஒலித்துக் கொண்டிருந்த ஓரிரவில் தோழர்கள் காற்று வெளியில் நின்று கொண்டிருந்தார்கள். அருமையான அந்தப் பாடல் காற்றில் என்னமாய் வந்து அவர்களை உதைத்தது.

எமது இயக்கத்தில் புதிதாக இணைந்து பயிற்சி எடுப்பதற்காக பயிற்சி முகாமில் நின்று கொண்டிருந்த புதியவர்களுக்கு நெஞ்சில் மெல்லிய சோகத்தை அந்த வரிகள் எழுதியிருக்கக்கூடும்.

ஆனால் அந்த அத்தனை பேருக்கும் தாயாக, தந்தையாக, அண்ணனாக, அம்மானாக நின்ற பொன்னம்மானே அந்தப் பாடலைப் பாடிக் கொண்டிருந்தார். அம்மான் இருக்கும் இடத்தில் எப்போதுமே

## நீங்காத நினைவு

சந்தோஷம் குடிகொண்டிருக்கும். ஆனால் எப்போதும் தமிழர் துயர நிலை கண்டு அவர் உள்ளம் கொதித்துக் கொண்டிருந்தது. அவர் அந்தப் பாடலை அடிக்கடி பாடும் போது தமிழர் துயரநிலையை சூக்குமமாகப் பாடுவதாக தோழர்கள் நினைந்து கொள்வார்கள்.



எமது இயக்கத்தில் எமது தேசியத் தலைவர் பிரபாகரனுடன் அக்காலத்தில் தோளோடு தோளாய் நின்று இயக்கத்தைப் பலமாகக் கட்டியெழுப்புவதற்காக அயராது உழைத்தார் அம்மான்.

எழுபதுகளின் நடுப்பகுதியில் எமது தலைவருடன் இணைந்து கொண்டு செயற்படத் தொடங்கி உமையாள்புரம், திருநெல்வேலி தாக்குதல் உட்பட பல தாக்குதலில்களில் தனது துணிவையும் வீரத்தையும் வெளிப்படுத்தியிருந்தார்.

1983-ம் ஆண்டு திருநெல்வேலியில் 13 இராணுவத்தினர் கொல்லப்பட்ட நடவடிக்கைக்குப் பின்னர் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் மிகவும் வேகமாகவும் அதேவேளை நிதானத்துடன் வளரத் தொடங்கியது. போர்ப்பயிற்சிகள் இந்தியாவில் ஆரம்பமாகின. அங்கு நடந்த முதலாவது பாசறையின் பொறுப்பாளராக இருந்த பொன்னம்மான் பயிற்சியின் போதே சகவீரர்களை எமது இயக்கத்தின் விதிமுறைக்கேற்ப உருவாக்கிக் கொண்டிருந்தார். இந்தப் பாசறையில் தளபதிகளான கிட்டு, விக்டர், புலேந்திரன், சூசை, பொட்டு, கணேஸ், அருணா, ராதா, பரமதேவா, பதுமன், கேடில்ஸ் போன்றவர்கள் உட்பட சுமார் நூறு போராளிகள் இருந்தனர். பயிற்சியை முடித்துக்கொண்ட பொன்னம்மான் தமிழ்நாட்டில் பல இடங்களில் பயிற்சி முகாம்களை ஏற்படுத்தி புதிய வீரர்களை புரட்சியாளர்களாக்கினார். உலகமே வியக்கக் கூடிய வகையில் எமது போராட்டம் வளர்ச்சியடைவதற்குத் தேவையான, புதிய வீரர்களிற்குப் பயிற்சி அளித்தல், வேண்டிய ஆயுதங்களைச் செய்து கொள்ளல் போன்ற முக்கிய விடயங்களில் பொன்னம்மானின் முயற்சி கணிசமாக இருந்தது என்றே சொல்லாம்.

வெடிமருந்துகளைக் கையாள்வதில் பொன்னம்மான் மிகவும் வல்லுனராக இருந்தார். அதற்கேற்றவாறு மேலும் பல வீரர்களை, ஆயுதங்கள் செய்யும் பிரிவிற்குத் தகுதி

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

யுள்ளவர்களாகவும் ஆக்கியிருந்தார். போராட்டத்திற்கு கை எறிகுண்டு கணிசமான அளவு தேவையாக இருந்தது. அன்றைய கால கட்டத்தில் குண்டு தயாரிப்பு வேலைகள் சாத்தியமற்றதாக இருந்தது. பொன்னம்மானின் கடுமையான முயற்சியினால் 85, 86-ம் ஆண்டுகாலப் பகுதியில் மாதாமாதம் ஆயிரக்கணக்கில் கைக்குண்டுகள் தயாரிக்க வழி செய்தார். இந்தியாவில் 2000-ற்கும் அதிகமான வீரர்களைத் தோற்றுவித்தது மாத்திரமின்றி இராணுவத் தொழில் நுட்ப வளர்ச்சிக்கும் முக்கிய காரணியாக பொன்னம்மான் செயற்பட்டார். பெரும் எண்ணிக்கையிலான விடுதலை வீரர்களை உருவாக்கி இயக்க வரலாற்றில் பெரும் சாதனை படைத்தவர் பொன்னம்மான். பல சிறப்புக்களும், தகுதியும், ஆளுமையும் மிக்க பொன்னம்மானின் போராட்ட வாழ்வின் இறுதிக்கணங்கள் வீரம் செறிந்தவை. யாழ்ப்பாணத்தில் உள்ள நாவற்குளி எனும் இராணுவ முகாம் மீது தாக்குதலை நடத்த கிட்டண்ணாவும் தோழர்களும் திட்டமிட்டுக்கொண்டிருந்தார்கள். அத்தாக்குதலில் பொன்னம்மானும் முக்கிய பங்கேற்று செயற்பட்டுக் கொண்டிருந்தார். இராணுவ முகாம் மிகவும் பலம் பொருந்திய வெளி அமைப்பைக் கொண்டிருந்தது. இராணுவ முகாமின் ஒருபக்கத்தில் ஆறு ஓடிக் கொண்டிருந்தது. அது கடல் நீர் உள்வாங்கிய பகுதி. சுற்றி வர நூறு யாருக்கும் மேலாக ஒரே வெளிப் பிரதேசம். வெட்டை வெளி. சிறு நகர்வும் எதிரிக்குத் தெரிந்து விடக் கூடிய அபாயம் இருந்தது. இராணுவ முகாமைச் சுற்றி நான்கு பாதுகாப்பு அரண்கள் அமைக்கப் பட்டு மண்ணை சுவர்போல குவித்து வைத்திருந்தனர். அவர்களுடைய காவல் அரண்களை உடைத்துக்கொண்டு உட்புகுவது என்பது மிகவும் சிரமத்துக்குரியதும் எமது வீரர்கள் தரப்பில் அதிக சேதத்தை ஏற்படுத்தக் கூடியதுமான முயற்சி. எனவே அவர்களுக்கு அதிர்ச்சியூட்டி அந்த அதிர்ச்சியில் இருந்து மீண்டு அவர்கள் காவல் அரண்களை பலப்படுத்துவதற்கு முன்னர் நாம் தாக்கி உட்புகக் கூடியதாகத் திட்டம் தீட்டப்பட்டிருந்தது.

தினமும் அந்த இராணுவ முகாமுக்கு தண்ணீர் எடுத்துக் கொண்டு ஒரு பவுசர் செல்வது வழக்கம். அது வெளியாரின் வண்டி; சம்பளத்திற்கு அமர்த்தப்பட்டு இருந்தது. எனவே அதைப்போலவே ஒரு பவுசர் வண்டியைத் தயாரித்து, அதன் கீழ் அரைவாசிப்பகுதிக்கு தண்ணீரை விட்டு, திட்டமிட்ட நாளில் உள்ளே அனுப்பி வெடிக்க வைத்து முகாமை தாக்கியழிப்பதற்கான வேலைகள் நடக்கத்தொடங்கின.

பழைய வண்டியைப் போல் ஒரு புதிய வண்டியைத் தயாரிப்பது என்பது மிகவும் கஸ்டமான விடயமாக இருந்தது. அதிலும் அந்த பவுசர் எங்கோ தாக்குதலுக்குள்ளாகி ஒரு பக்கத்தில் நசுங்கியும் இருந்தது. அது மாத்திரமல்ல தோழர்கள் செய்யும் வண்டி வாயில் காவலர்களைத் தாண்டிச்செல்ல வேண்டியிருந்ததால் அதே போல் நசுக்கப்பட வேண்டியிருந்தது. இயற்கையாக விபத்துக்குள்ளான வண்டியைப் போல் வெடிமருந்தேற்றிச் செல்லும் வண்டியை மிகச் சிரமத்திற்குப் பின் உருவாக்கினார்கள். புதிதாக மை பூசிய பவுசரை பழைய பவுசரைப்போல் உருமாற்றம் செய்ய வேண்டியிருந்தது. ஏன் பழைய வண்டியில் ஏற்பட்டிருந்த துருப்பிடித்த பகுதி கூட தாக்குதலுக்கு தயாரான பவுசரில் இருந்தாக வேண்டும். அதைவிடவும் பவுசர் இரு பகுதியாகப் பிரிக்கப்பட்டு கீழ் பகுதி வெடிமருந்து நிரப்பிய பகுதியாகவும், மேல் பகுதியில் தண்ணீர் நிரம்பிய பகுதியாகவும் தயாரித்தோம். ஏனென்றால் முகாம் வாயிலில் உள்ள காவல் அரணில் இருப்பவர்கள் பவுசரின் மேல் ஏறி மூடியைத் திறந்து தண்ணீரைப் பார்த்தபின்தான் உள்ளே அனுமதிப்பார்கள்.



லெப். கேணல் பொன்னம்மான் (அற்புதன் - குகன்)

இத்தனை சிரமங்களின் மத்தியிலும் அந்த பவுசரை மிக நேர்த்தியாக வடிவமைத்தார்கள்.

பவுசருக்கு வெடிமருந்தை இணைக்கும் பணியை பொன்னம்மான் எடுத்துக்கொண்டார். இம் முயற்சிக்கு வழிகோலி, அயராது உழைத்து வந்தவன் கேடில்ஸ்தான். கேடில்ஸ் அப்போது சாவகச்சேரிப் பகுதிக்கு பொறுப்பாளராக விளங்கியவன். மிகத் துல்லியமாக முகாமை வேவு பார்த்து, இராணுவ முகாமினது ஒவ்வொரு நடவடிக்கையையும் அவதானித்து வைத்திருந்தான். கேடில்சும், வாசுவும் சேர்ந்துதான் இரவு பகலாக உழைத்து அந்த பவுசரை உருவாக்கினார்கள். அவர்களுக்கு துணையாக ரஞ்சன் எனும் பொறியிலாளர் ஒருவர் பணியாற்றினார். அவர் பொன்னம்மானின் உறவினருங்கூட. மிகுந்த மதி நுட்பம் வாய்ந்த ரஞ்சன், வாசுவோடு சேர்ந்து விமானமொன்றைத் தயாரிக்கும் பணியிலும் ஈடுபட்டு வந்தார். முழுவதுமாக தன்னை இயக்கத்துடனேயே இணைத்துக்கொண்டவர்.

14-2-87 அன்று தாக்குதல் நடத்துவதாக இருந்தது. கெரில்லா தாக்குதல்களை இரவு நடத்துவதுதான் தோழர்களுக்கு உசிதமாக இருந்தது. தாக்குதல் தொடங்கினால் இராணுவ ஹெலிகொப்ரர்களும், குண்டு வீச்சு விமானங்களும் தகவல் பெற்று எம்மைத் தாக்கத் தொடங்கலாம். பகல வேளையானால் மேலிருந்து கண்டு பிடித்து குண்டு வீசுவது அவர்களுக்கு மிகவும் சுலபமான விடயம். ஆனால் பி.ப. 6.30 மணிக்குப் பின் இராணுவ முகாமுக்கு தண்ணீர் கொண்டு செல்ல அனும

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

திக்கப்படுவதில்லை. எனவே கடைசி சந்தர்ப்பத்தை தோழர்கள் தாக்குதலுக்கான நேரமாக குறித்துக்கொண்டார்கள். 6.30 மணிக்கு சண்டை தொடங்குமானால் சுமார் ஒரு மணி நேரத்தில் இருட்டித்துவிடும். அதன்பின் தோழர்களுக்கு மிகவும் பாதுகாப்பாகவே இருக்கும்.

முதல் நாள் இரவிரவாக பொன்னம்மான், வாசு, ரஞ்சன் ஆகியோர் மருந்தடைத்தனர். வெடிமருந்தின் நச்சுத்தன்மை அவர்களைப் பாதித்தது. அதனால் மூவரும் மிகச் சோர்வாக வேறு இருந்தார்கள். அதிகாலை வெடிமருந்து இணைக்கப்பட்ட நிலையில் பவுசர் தயாராக நின்றது. அம்மான் அவ்விடத்திலேயே தூங்கியும் விட்டார். வாசுவும் கிட்டண்ணாவும் தாக்குதல் குழுக்களைப் பிரித்து அவரவர்களுக்குத் தேவையான வெடிபொருட்களை இணைத்து கொடுத்துக்கொண்டிருந்தார்கள். மூன்று பெரிய லொறிகள் தயார்ப்படுத்தப்பட்டன. முகாமுக்குள் சென்ற பவுசர் வெடித்ததும் ஜொனி, கேடில்ஸ், சூசை தலைமையிலான குழுக்கள் லொறிகளில் விரைந்து முகாமுக்குள் சுட்டுக்கொண்டே உட்புகுவதாகத் திட்டம். லொறியின் முன் புறமும், மேல்பக்கமும் மணல் மூட்டைகள் அடுக்கப்பட்டன. முதல் லொறியில் ரொக்கட் லோஞ்சருடன் நிற்பவன் உட்புகும் போது ரொக்கட்டால் வாயில் காவல் அரணை உடைத்தெறிவதாக திட்டம் தீட்டப்பட்டிருந்தது.

www.tamilarangam.net

நேரம் பிற்பகலை நெருங்கிக் கொண்டிருக்க தாக்குதல் குழுக்கள் தத்தமது நிலைகளுக்கு செல்லத் தொடங்கி விட்டனர். பவுசரை அனுப்பும் பொறுப்பு பொன்னம்மான், கேடில்ஸ், வாசு ஆகியோரிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. கிட்டண்ணா தாக்குதலை நடத்துவதற்காக, சகலருடனும் வாக்கிடோக்கியில் தொடர்பு ஏற்படுத்தக் கூடிய வகையில் இடம் தெரிந்தெடுக்கப்பட்டு அதற்குரிய வசதிகள் செய்திருந்தார்.

கிட்டண்ணா ஐந்து மணியளவில் எல்லாக் குழுக்களையும் சரி பார்த்து வந்து கொண்டிருந்தார். நேரம் நெருங்கிக்கொண்டிருக்கிறது. கிட்டண்ணா ஒரு குழுவினர் நின்ற வீட்டில் அவர்களை சரிபார்த்துக் கொண்டிருந்தார்.... மிகப்பெரிய சத்தத்தை தொடர்ந்து ஒரு முறை பூமி அதிர்ந்தது. அதிர்ச்சி, வியப்பு, சற்றும் புரியவில்லை. 5.30-க்கு வேறு இந்த வெடிச் சத்தம் கேட்டதால் தோழர்கள் மத்தியில் ஒரே குழப்பம். கிட்டண்ணா பொன்னம்மானை வாக்கியில் பல தடவை கூப்பிட்டார். கேடில்ஸ்சைக் கூப்பிட்டார். வாசுவைக் கூப்பிட்டார். பதில் இல்லை. பல தடவைகள் அழைத்தார். மீண்டும் பதில் இல்லை. ஜொனியை அழைத்தார்; பதில் வந்தது. ஜொனியை அழைத்து உடனடியாக சத்தம் கேட்ட இடத்திற்கு அனுப்பினார். ஜொனி அங்கு சென்ற போது எங்கும் தூசிமயம். பிரளயம் ஒன்று ஏற்பட்டதைப் போல இருந்தது. அவ்விடத்தில் பெரிய குழி, அதற்கருகில் கேடில்ஸ்சினுடைய கார் நொறுங்கிப்போய் கிடந்தது. இதற்கு 50 யார் தூரத்தில் லொறி நின்றது. லொறிக்குள் பார்த்தபோது தோழர்கள் ஐவர் அதற்குள் இறந்து கிடந்தார்கள். தண்ணீர் நிரப்பிக்கொண்டிருக்கையில் பவுசர் வெடித்து விட்டது. ஆனால் அந்த இடத்தில் நின்று சம்பவத்தைப் பார்த்த யாரும் உயிருடன் இல்லை. பொன்னம்மான், கேடில்ஸ், வாசு, ரஞ்சன் ஆகியோர் அந்த இடத்துக்கு வந்ததாக தோழர்கள் கூறினார்கள். பவுசரில் தண்ணீர் நிரப்பும்போது தண்ணீர் சிறிது ஒழுகியதாம். அதை பொன்னம்மான் கேடில்சுக்கும் வாசுவுக்கும் தெரிவித்து பொறியியலாளர் ரஞ்சனையும் அழைத்துக் கொண்டு பவுசர் நின்ற இடத்திற்கு சென்றார்கள். பொறியியல் நடவடிக்கையின்போது வெடிவிபத்து ஏற்பட்டுள்ளது. இதனை உறுதிப்படுத்த, அங்கு நின்றவர் எவருமே இல்லை. எல்லோரையும் தேடினார்கள். வாசுவின் பிஸ்டலும், அடையாள அட்டையும் கேடில்சின் காற்சட்டையின் ஒரு பகுதியும்தான் கிடைத்தது. பொன்னம்மானை அடையாளம் காணக் கூடிய வகையில் அவருடைய உடலோ, உடலின் பகுதியோ எந்தத் தடமும் கிடைக்கவில்லை. ஈழத்தில் வீசிக்கொண்டிருக்கும் காற்றோடு காற்றாய் அவர் மறைந்து விட்டார்.

முகாங்களில் கலைநிகழ்ச்சிகளை வைப்பித்தும், குறும்புகள் செய்தும், நடித்தும், சிரிக்க வைத்து, எந்த நேரமும் சந்தோசத்தைக் குடிகொள்ள வைத்திருக்கும் அந்த மனிதன் இன்று இல்லை. 'அம்மான் ஒரு பாட்டுப் பாடுங்கோ' என்று தோழர்கள் அடம் பிடிப்பதும் அவர் எப்போதும் தோழர்களுக்காய் பாடிக் காட்டும் அந்தப் பாட்டும் நினைவில் நனைய கண்கள் பனிக்கின்றன. ஈரமான இதயம் சுமந்த மனிதர்களின் நண்பனாய், தந்தையாய், தனையனாய், தாயாய், எல்லாமுமாய் நின்ற எங்கள் அம்மானிடம் வளர்ந்த எத்தனையோ தோழர்கள் இன்றும் அவரது கனவைச் சுமந்தபடி மண்ணில் நிற்கிறார்கள்.

★★★

## லெப். கேணல் பொன்னம்மானுடன் வீரச்சாவடைந்த போராளிகள்

**மேஜர் கேடில்ஸ் (திலீபன்)**

**கப்டன் வாசு (சுதாகர்)**

**லெப். சித்தாத்தர் (வசீகரன்)**

**2ம் லெப். பரன் (அர்ச்சுனன்)**

**வீரவேங்கை யோகேஸ் (பாலன்)**

**வீரவேங்கை கவர் (நகுலேஸ்வரன்)**

**வீரவேங்கை அக்பர் (லோகநாதன்)**

**வீரவேங்கை குமணன் (மோகனலிங்கம்)**

**வீரவேங்கை தேவன் (வசந்தகுமார்)**

### பொன்னம்மான்!

*யாகப் பயணத்தை*
*தொடங்கினாய்*
*கெஞ்சமாட்டோம் என*
*சூளுரைத்தாய்*
*நீதான்...*

*புதிய உலகுக்காய்*
*புறப்பாடு செய்து*
*புரட்சி மறவர்களுக்கு*
*பயிற்சிப் பாசறைகள்*
*நிர்மாணித்தாய்*

*நெருப்புப் பூக்களுக்கு*
*விதை போட்டவனே!*
*எங்கள் இரத்தத்தால்*
*உன் பயிரை*
*வளர்க்கிறோம்.....*

*பாலைவனப்*
*படுக்கைகளிலே*
*நீ எதிர்பார்த்த*
*அக்கினிப் புஷ்பங்கள்*
*நாளை மலரும்.*

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# மண்பற்று

**வா**ருங்கோ... வாருங்கோ... இப்படி இருங்கோ.

பிள்ளை... பிள்ளை.... மாமாக்கள் வந்திருக்கினம் களைச்சிருப்பினம். உடன கொண்டுவா ஒரு நல்ல கோப்பியாய்.

என்ன மச்சான் மௌனமாய் இருக்கிறியள்.

ஒண்டுமில்ல முருகேசர். யோசிக்க கவலையாய் இருக்குது.

அதைப்பற்றி கவலைப்பட்டு என்ன பிரயோசனம். எல்லாருக்கும் நடந்ததுதானே. கவலைதான் வரும்... கவலைப்படாதேங்கோ... இப்ப என்ன நாங்கள் உங்களை கைவிடப் போறமே.

அப்போதான் நடராசருக்கு விளங்கியது முருகேசர் இப்ப நடந்ததைக் கதைக்கிறார் எண்டு. ஆனால், நடராசருக்கு உள்ளூர ஒரு வேதனை. 'நான் செய்த பிழையாலதானே அந்தாள் என்னோட கதைக்கப் பேசாமல் விட்டது. நான் இந்த மனிசனே வேண்டாம் எண்டு நினைச்சனான். இப்பதான் விளங்குது எல்லாம்.

என்ன மச்சான் கடுமையான யோசனை.... என்று முருகேசர் சொல்லிக்கொண்டு

எழும்புங்கோ... போய் குளிச்சு தோச்சு வாருங்கோ சாப்பிடலாம். சாப்பிட்டுப்போட்டு யோசிக்கலாமிருந்து.

பிள்ளை உந்த சவக்காரத்தையும், துவாயையும் கொண்டுபோய் கொடன்.

'பவளம்... பவளம்..

என்ன கொண்ணையும் பிள்ளையளுமல்லே வந்திருக்கினம். அதுகள் களைச்சு வந்திருக்கிதுகள். உடனே சாப்பாட்டை செய்' என்றவர் பவளத்தின் முகத்தைப் பார்த்தார்.

கண்கலங்கிய நிலையில் வேதனையும் துயருடனும் இருக்கும் காட்சியைக் கண்டவர்,

உனக்குப் பழைய ஞாபகம் வந்திட்டுது போல. சும்மா எல்லாத்தையும் மறந்திட்டு நடக்க வேண்டியதைப் பார் என சற்று குரலை உயர்த்திக் கூறிய முருகேசர் மளமளவென தோட்டத்துக்கு நடந்தார்.

முருகேசருக்கு மூன்று பிள்ளைகள். இரண்டு பொடியளும் ஒரு பொம்பிளைப்பிள்ளையும். மூத்தது பொம்பிளைப்பிள்ளை. மற்றதில் பெரியவன் பூநகரி அடிபாட்டில் "வீரச்சாவு" இரண்டாவது இப்ப போராளியாய் இருக்கிறான்.

★★

தோட்டத்தால வந்த முருகேசருக்கு ஆச்சரியமாய் இருந்தது.

நடராசரும் பவளமும் சிரித்து கதைத்துக்கொண்டிருக்கினம். என்ன இருந்தாலும் தமயனல்லே.... ஆ...

என்று நினைத்துக்கொண்டு மாட்டுப்பட்டிப் பக்கம் போனார் முருகேசர்.

அங்க மச்சாளும் மச்சாளும் நிண்டு மாடு கட்டிக்கொண்டிருந்ததைக் கண்டார்.

மனதுக்குள்ள முருகேசருக்கு சிரிப்பும் வந்துவிட்டது.

சரி... சரி...

எல்லாம் நல்லது தானே. அதுகள் பாவங்கள். ஏதோ தெரியாமல் நடந்ததை தூக்கிப் பிடிக்க முடியுமே. இன்றுள்ள நிலையில் உதையெல்லாம் தூக்கி வீசவேணும் என்று நினைத்துக்கொண்டு முகம் கால் கழுவிக்கொண்டு சாமியறைக்குப் போனார். தனது மூத்த மகன் மாறனின் படத்தைப் பார்த்ததும்... திருப்திப்படுத்திக்கொண்டு வழிபாட்டை முடித்துக்கொண்டார். இருந்தாலும் மனது வேதனையில் கனன்றது. கண்ணைத் துடைத்துக் கொண்டார்.

இந்தப் பிள்ளைகள் தானே எங்களைக் காக்குதுகள்.

★★

நடராசர், மனைவி பிள்ளைகள் எல்லாரும் முற்றத்து நிலவிலிருந்து கதைத்துக்கொண்டிருந்தனர்.

முருகேசர் மத்தியானச் சாப்பாட்டையும் இரவுச் சாப்பாட்டையும் 7 மணிக்கு முடித்துக்கொண்டு ஒரு சுருட்டையும் வாயில் வைத்துக் கொண்டு வெளியே வந்தார்.

என்ன முருகேசர் காலையில் கண்டதற்கு இப்பத்தான்.... என இழுத்தார் நடராசர்.

இப்படித்தான் மச்சான் நாங்கள் தோட்டத்துக்கு போனால்தானே எங்கட வயித்தையும் நிரப்பலாம். என்ன செய்வது.... என்று கூறிக் கொண்டு மச்சானுக்குப் பக்கத்தை அமர்ந்தார். உங்களுக்கென்ன அவவும் உத்தியோகம். உங்களுக்கும் நல்ல சம்பளம்.

ஓம்... ஓம்...

நல்லா சொல்லுங்கோ உப்படி நினைச்சுத்தானே எங்கட பிழைப்பு இப்ப கெடுத்தது.

நாங்கள் வன்னியை மோசமாக நினைச்சம். ஆனால் இஞ்ச வந்த பின்புதானே எல்லாம் தெரிகிறது.


இஞ்ச என்னத்துக்கு குறை.

யாழ்ப்பாணத்திலிருந்து முழுச் சனமும் வந்தாலும் வன்னி தாங்கும்.... என்றார் நடராசர்.

முருகேசருக்கு ஒரு பெருமூச்சு மண்ணை முட்டியது....

மண்பற்றின் பெருமிதம் அதில் வெளியிட்டது.

**- த. சுமந்தன்**




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# விடியலுக்காக..

'சூரியக்கதிர் போர்க்களத்தில் பிரதீபனுக்கு காலில் காயம். மட்டு விலில் இருக்கிற மெடிக்ஸ் பேசில ஆள் நிற்கிறார.'

பொழுது சாய்ந்து இருள் கவிந்து விட்ட வேளையில் செய்தி வந்து கிடைத்தது.



அவனது முகத்தை ஒரு தடவை யாவது பார்த்துவிடவேணும் என்று ஐந்து மாதங்களாகத் தவங்கிடந்த தாயாருக்கு இந்தச் செய்தி கிடைத்த போது கால்களுக்குள் புதுவேகம் புகுந்தது. நாவற்குழிப் பாலத்தை சனநெரிசலுக்கும் மத்தியில் நடந்து கடந்த களைப்பு நொடிப்பொழுதுக் குள் மறைந்து போனது அவருக்கு. கச்சான் அல்வாப் பொதிகள் சில வற்றையும், எள்ளு உருண்டைகள் சிலவற்றையும் சேகரித்துக் கொண் டவள் பயணத்திற்குத் தயாராகிவிட் டாள். ஒரு சில நிமிடங்களுக்குள் அவளது செயல்களையும், செயற் படும் வேகத்தையும் அவதானித்த நான் மௌனமாகவே என்னைப் பயணத்திற்கு தயார்ப்படுத்திக் கொண்டேன்.

உடுப்பிட்டியிலிருந்து மட்டுவி லுக்குப் பயணம்.... மன வேகமோ, சைக்கிளின் வேகமோ கூட என் பதை மதிப்பிடுவதற்கு முன்பாக பாசறையின் வாசலுக்கு நாம் வந்து விட்டிருந்தோம்.

எனது சைக்கிளின் கரியரிலிருந்து - பிரதீபனின் தாயான எனது அக்கா இறங்கிக்கொள்வதற்கு இடையே பிரதீபனின் அக்காவான தர்மினி சைக்கிளைப் பூட்டித் திறப்பை எடுத்துக்கொண்டு வந்தாள்.

இருவருமாக பாசறைக்குள் புக வும், நான் சைக்கிளை ஓரமாக நிறுத்திப் பூட்டினேன்.

படர்ந்திருந்த வேப்பமரமொன் றின் கீழிருந்த வாங்கில் பிரதீபன் எங்களை உட்கார வைத்தான். தலையணைகளுக்கு மேலே சில்வர் சாப்பாட்டுக் கோப்பைகளை வைத்து மத்தளம் அடிப்பதிலும், தாயக மீட்புக்கான எழுச்சிப் பாடல்களை இசைப்பதிலும் போரா ளிகள் ஈடுபட்டிருந்தனர். அவர்க ளில் பலருக்கும் உடலின் ஏதோ ஒரு பாகத்தில் மருந்துகள் கட்டப் பட்டிருந்தது தெளிவாகவே தெரிந் தது. உடல் நோவுகளை மறைக்கத் தான் போராளிகள் குதூகலிக்கின் றனரோவென மனம் எண்ணிக் கொண்டது.

அமாவாசையின் இருட்டைப் போக்கும் முயற்சியில் சில விளக்கு கள் எரிந்துகொண்டிருந்தன. இந்தப் போராளிகளையும் சிறு விளக்குக ளையும் மனத் தராசு எடைபோட் டுக் கொண்டது.

"இந்த இருட்டுக்கை ஏன் அம்மா வந்தனியள்... காலமை வந்திருக்க லாமே" பிரதீபனின் குரலில் ஆதங் கம். அவள் அவனது முகத்தையே உற்றுப் பார்த்தாள். வார்த்தைகள் எதுவும் வெளிப்படாமல் மௌனம் கனத்தது.

"ஏனம்மா.... பேசாமல் இருக்கிறி யள்.... என்னில கோபமே" பிரதீப னின் சொற்களுக்குள் வேதனையின் கீற்றுக்கள். கஷ்டப்பட்டுப் படிக்க வைத்ததை குழப்பிவிட்டதாக நினைத்து அம்மா கோவப்படுகி

றாவோ.... அல்லது சந்திக்கேலாமல் தேடித் திரிஞ்சதை நினைச்சுக் கவலைப் படுகிறாவோ.... என்ற எண்ணத்தில் அலைகள் எழும்பியிருந்தன.

"கொண்ணன் கடிதம் போட்டிருக்கிறான். உன்னைப்பற்றித்தான் கவலையாய்க் கிடக்காம். வேலையை விட்டிட்டு கொழும்புக்கு வரப் போறானாம்... கொப்பருக்கு ஒரே முட்டு வருத்தம்.... நாங்கள் எல்லாம் சாகப் போறம்.... நீ கல்லுப்போல உங்கையே இரு.... ஐந்து மாதமாய் எங்களை மறந்தனி தானே..." மடை திறந்த வெள்ளம் போல அம்மாவின் உதடுகளிலிருந்து சொற்கள் உடைப்பு எடுத்தது.

"சொல்லிப்போட்டு வாவன்ரா எங்களோடை" முத்தாரமாக முத்தாய்ப்பு வைத்தாள் அவள்.

"ஒவ்வொரு கஷ்டம் வரேக்கையும் எனக்கு நீதானே ஆறுதல் சொல்லுறனி..... இட்டிலி.... தோசை... நூடில்ஸ்... எண்டு வகைவகையாக கேட்கக் கேட்க ஆசையோடு செய்து தந்தன். அந்தப் பாசத்தைக் கூட மறந்திட்டியேடா". அக்காவின் வார்த்தைகள் தொடர்ந்தன. "ஐந்து மாதத்தில் ஒரு கடிதமாவது போட்டியேடா" அம்மாவின் குற்றச்சாட்டு அடுத்துப் பிறந்தது.

"தலைவராணை.... இரண்டு கடிதம் அனுப்பினனான். நீங்கள் நெடுக இடம் மாறிக்கொண்டிருந்தபடியா உங்களுக்கு கிடைக்கேல்லைப் போல" அவன் பதில் கூறினான்.

"அப்பு.... எங்களுக்கெண்டு ஒரு உதவியும் இல்லை. அண்டைக்கு அவதிப்பட்டு வரேக்கையும் சன நெரிசலுக்கை மயங்கிப் போனன். கொப்பாவுக்கும் முட்டு.... இழுப்பு.... நீ.... சொல்லிப்போட்டு வாவன். கடைசியாகக் கேக்கிறன்..." அம்மாவின் வற்புறுத்தல் கெஞ்சலாகியது.

"நீங்கள் என்னம்மா மோட்டுக் கதை கதைக்கிறியள். இயக்கத்தில சேரப் பிந்திப் போச்செண்டு நாங்கள் கவலைப்படுறம்.

எத்தினியோ பேர் தாங்களாகவே பிள்ளையளைக் கூட்டிக் கொண்டு வந்து இயக்கத்திலை சேர்க்கினம். வயது, தொழில், பால் வேறுபாடில்லாமல் சனமெல்லாம் இயக்கத்தில சேருற நேரத்தில விட்டிட்டு வா எண்டு சொல்லுறியள். ஒரு கை இல்லாத பெடியள் கூட இப்ப அங்கை நிண்டு என்னமாதிரி சண்டை பிடிக்கிறான்கள். கையை.... காலை இழந்த போராளியள் கூட அடிபாட்டுக்குப் போக ஆசைப் படுறாங்கள். இந்த நிலைமையில நான் மட்டும் என்னண்டு வாறது" அவனது வார்த்தைகளில் ஆவேசம்.

www.tamilarangam.net

இவன் நல்லாய் ஊறிப்போட்டான். இவனை இனித் திசை திருப்பேலாது போல என அவள் தனக்குள் எண்ணிக்கொண்டாள் போலும்.

"சுகப்பட்டா திரும்பவும் அடிபாட்டுக்குப் போவியோ? தனது கவலைகளை வார்த்தைகளாக்கினாள்.

"ஓமோம்... எங்களை வரச்சொல்லி இப்ப வான் வந்தாலும் உடன ஏறிப்போடுவம்" அவனது பதிலில் எந்தவித தயக்கமும் இல்லை.

"உங்களுக்கு நான் மட்டுமே பிள்ளை... அண்ணன்.... அக்கா.... தம்பி... எல்லாம் இருக்கினம்தானே. ஒவ்வொரு போராளிக்கும் குடும்ப பாசம் இருக்கு... ஆனா நாட்டுப் பாசம் அதைவிட அதிகமாய் இருக்கு...." அவனது வார்த்தைகள் தொடர்ந்து கொண்டிருந்தது.

"சரி நேரமாகுது. இந்தக் கதையளை விட்டிட்டு சுக துக்கங்களை கதையுங்கோவன்." இடைமறித்து நான் ஆலோசனை கூறினேன்.

"குட்டிமாமா.... நீங்கள் போராட்டத்தின் வரலாறு, தேவை பற்றிப் பேப்பரிலை எழுதின கவிதையள் படிக்கிறனான். நீங்கள் இவைக்கும் புத்தி சொல்லுங்கோவன்" அவன் வேண்டுகோள் விடுத்தான்.

"ஓ.... ஓ... அவருக்கும் வளர்ந்த பிள்ளையள் இருந்து உப்பிடிப் போனாத்தான் தெரியும். தலையிடியும் காச்சலும் தனக்குத் தனக்கு வந்தால்தான் தெரியும்." அம்மா சீறினாள்.

"தீபன் உன்ரை இயக்கப் பெயர் என்னெண்டு சொல்லன்" அக்கா கேட்டாள்.

"எரியேந்தி"

"உதென்ன அரியண்டப் பெயர்" அவள் அபிப்பிராயம் தெரிவித்தாள்.

"அரியண்டப் பெயரோ.... தூய தமிழ்ப் பெயர்..... 'தீயை ஏந்திச் செல்பவன் என்னும் பொருளுடையது' அவன் விளக்கம் அளித்தான். பொறிகக்கும் விழியோடு ஒவ்வொருவரும் போர்க்களம் போகவேண்டிய நேரம் இது." அவன் மேலும் குறிப்பிட்டான்.

"நாங்கள் எல்லாம் வந்து என்னவாம் செய்யிறது?" அம்மா கேள்வி எழுப்பினாள்.

"காயப்பட்ட போராளிகளையும்... மற்றவையையும் பராமரிக்கலாம்.... அக்கா வாறியே மெடிக்சில சேர்த்து விடுறன்..."

எரியேந்தியின் பதிலுக்கு அவர்கள் மெளனமாயினர். இதே மெளனம் சம்மதத்தின் அறிகுறி என்பதை வார்த்தைகளை காவிச்சென்று பரிமாறிய காற்று உறுதிப்படுத்திக் கொண்டது.

**- சி. சிவகுமார்**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# பொருந்தாக் கல்வி

மனித குலத்தின் திரட்டப்பட்ட கடந்த கால அநுபவங்களை எதிர்காலத்தை நோக்கி நிகழ்காலத்தவர்களிடம் திட்டமிடப்பட்ட முறையில் கைமாற்றப்படும் ஓர் அறிவியல் முறையே கல்வி என்பதாகும்.

காலனித்துவ காலத்தில் ஆசிய ஆபிரிக்க மக்களுக்கு ஊட்டப்பட்ட கல்வியானது காலனித்துவத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு ஏற்ற வகையில் திட்டமிடப்பட்ட ஒன்றாய் அமைந்துள்ளது. ஒரு விடயத்தின் மதிப்பானது அது யாருக்குச் சேவை செய்கிறது என்பதிலேயே அடங்கியுள்ளது. அத்தகைய சேவையானது தெரிந்தும் நிகழலாம்; தெரியாமலும் நிகழலாம்.

மூன்றாம் உலக நாடுகளின் கல்வியானது தெரிந்தோ தெரியாமலோ மேற்குலகிற்குச் சேவை செய்யும் கல்வியாகவே உள்ளது. பொதுவாக மூன்றாம் உலகநாடுகளில் நடைமுறையில் உள்ள கல்வியைப் பொருந்தாக் கல்வி, அல்லது குறைவிருத்திக் கல்வி என்று அழைக்கலாம்.

குறைவிருத்தி பற்றிய விளக்கத்தினை உதாரணத்திற்கு ஊடாக நோக்குவோம்.

பெண்களை ஆண்களுக்குத் தாழ்வானவர்களாக வைத்திருப்பதற்காக பெண்பிள்ளைகளின் ஒரு காலில் இளம்பராயத்திலேயே இரும்புச் சப்பாத்து அணிந்து விடும் பழக்கம் சீனாவில் இருந்தது. பின்பு பெண்கள் ஒரு குறித்த பருவத்தை அடைந்ததும் அந்த சப்பாத்தைக் கழற்றி விடுவார்கள். இரும்புச் சப்பாத்து அணிந்த பகுதி வளர்ச்சியடையாது சூம்பி இருக்கும். அதாவது காலின் ஒரு பகுதி விருத்தியடைந்தும் இன்னொரு பகுதி விருத்தியடையாமலும் இருக்கும். இதுவே குறைவிருத்திக்குப் பொருத்தமான ஓர் உதாரணமாகும்.

ஒரு பகுதி வீங்கிப் பெருத்தும் இன்னொரு பகுதி சூம்பிச் சிறுத்தும் இருத்தல் குறைவிருத்தியாகும். அதாவது தலை மிகப் பெருத்தும், கழுத்து மிகச் சிறுத்தும் இருந்தால் அந்த உருவம் செயற்பட முடியாத தாய்ப் போய் விடுகிறது. உண்மையில் இது வளர்ச்சிக்கு மாறான ஓர் எதிர் விருத்தியே ஆகும். பொருந்தா விருத்தி, ஓர் அங்கத்திற்கு இன்னோரங்கம் இசைவற்ற விருத்தி, சமச்சீரற்ற விருத்தி, விரையம் நிறைந்த விருத்தி என்பன எல்லாம் மேற்படி வகையைச் சார்ந்தனவே. இறுதியாகக் கூறுவதானால் மூன்றாம் உலகத்தவரின் கல்வி என்பது சிறார்களின் மூளைகளில் பூட்டப்பட்ட இரும்புச் சப்பாத்து போன்றதே. இக்கல்வி மூளையைக் குறைவிருத்தி அல்லது எதிர்விருத்தி ஆக்கிவிடுகிறது.

"ஓர் அடிமையானவன் தான் அடிமையாய் இருக்கிறேன் என்பதை உணர்ந்து கொள்வானானால் அப்போதே அவன் அரைவாசிச் சுதந்திரம் அடைந்து விடுகிறான்" என்று ஒரு கூற்றுண்டு.


அந்நியரால் எமக்கூட்டப்பட்ட கல்வி மூளையிற் பூட்டப்பட்ட இரும்புச் சப்பாத்து என்பதை பொதுவில் நாம் உணர்வதில்லை. அறிந்தும், அறியாமலும் இதற்கு நாம் ஆட்பட்டிருக்கிறோம். அறியாமல் அல்லது உணராமல் நாம் ஆட்பட்டிருப்பதிலிருந்து நாம் எம்மை உணர்வு நிலைக்கு மீட்டுக் கொண்டுவர வேண்டும்.

இதற்கு கல்வி பற்றிய விளக்கமும், நோக்கமும் அவசியம். கல்வி என்றவுடன் எழுந்தமானத்தில் "பட்டமும்" அதனுடன் தொடர்பான "பதவியும் தான்" விளக்கமும் நோக்கமும் ஆகிவிடுகின்றன. இது அடிப்படையற்ற விளக்கமும், மோலோட்டமான பார்வையும், பண்பாட்டு விரோத எண்ணப் பாங்குமாகும்.

மேலே கூறியுள்ளது போல கல்வி என்பது மனித குலத்தின் கடந்த கால அநுபவத்தினை எதிர்கால நோக்குடன் நிகழ்காலத்தவர்களிடம் கொடுக்கும் ஒரு திட்டமிட்ட அறிவியல் முறைமையாகும்.

அனுபவம் எனும்போது இலட்சக்கணக்கான ஆண்டுகால மனிதனின் பட்டறிவு, மற்றும் ஆய்வறிவு என்பனவும் பழக்க வழக்கம், விருப்பு வெறுப்பு, பண்பாடு ஆகிய அனைத்தையும் உள்ளடக்கியதாகும். இவற்றைத் திட்டமிட்டுக் கைமாற்றுதல் என்னும்போது அந்தத் திட்டமிடலில் நோக்கம் அடங்கிவிடுகிறது.

வசதி நிறைந்த வாழ்வை ஈட்டுவதற்கேற்ற அறிவைப் பெறுதல் மற்றைய மனிதர்களின் இன்ப துன்பங்களிற் பங்கெடுத்தல், கூடியும் இணைந்தும் வாழ்ந்து கொள்ளுதல், ஒரு மனிதனின் வாழ்வென்பது கடந்த கால மனித குலத்திற்கும், நிகழ்காலச் சமூகத்திற்கும் கடமைப்பட்டது என்பதை உணர்ந்து கொள்




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ளுதல், பரஸ்பர வாழ்வின் முக்கியத்துவத்தை உணர்ந்து கொள்ளுதல், அடிமைத்தனத்தின் கொடுமையையும் சுதந்திரத்தின் மகத்துவத்தையும் உணர்ந்து கொள்ளுதல், வஞ்சனையையும் தீதையும் ஒதுக்குதல், நல்லதையும் கெட்டதையும் பகுத்து அறிந்து கொள்ளுதல், அனைத்து அறிவையும் நல்லதிற்காகவும் சுபீட்சத்திற்காவும் பயன்படுத்துதல் என்பனவே கல்வியின் அடிப்படை முதன்நிலை நோக்கமாய் அமைய வேண்டும். சுருங்கச் சொல்வதாயின் கல்வியானது ஒவ்வொரு மனிதனையும் தன்னுணர்வுள்ளவனாகவும், சமூக உணர்வுள்ளவனாகவும், பிறரை நேசிக்கும் தன்மை உள்ளவனாகவும் ஆக்குவதுடன் செயற்திறனுக்கான அறிவு வளர்ச்சி அடைந்தவனாகவும் ஆக்க வேண்டும். தன்னையும் பிறரையும் உணரவும், அனைவரையும் வளர்க்கவும் கல்வி அறிவு உதவ வேண்டும்.

ஆனால் நேரடியாகவும் மறைமுகமாகவும் மேற்குலக ஆதிக்கத்தினையும் நலனையும் பேணுவதற்கும், எமக்கு அத்தியாவசியமானதும் பொருத்தமானதுமான வளர்ச்சியைத் தடுப்பதற்கும், சமூக ஏற்றத் தாழ்வினைப் பேணவும் வளர்க்கவும், ஒரு சமூகத்தினை இன்னொரு சமூகத்தின் மீது ஆதிக்கம் புரிய வைப்பதற்கான மனப்பான்மையையும் அடிப்படைகளையும் தோற்றுவிப்பதாயும், இயந்திரமனப்பாங்கையும் இதயமற்ற சமூகத்தையும் தோற்றுவிப்பதாயும் எமது கல்வி உள்ளது. ஒவ்வொரு மனிதனையும் பரந்த பண்பாட்டின் ஓர் அங்கமாக வளர்ப்பதற்குப் பதிலாக மனிதனை வெறும் வர்த்தகப் பண்டமாக குறுக்கும் ஓர் இழிநிலை வாழ்வை இது புகட்டுகிறது. இந்தக் கல்வி ஒரு கட்டத்தில் வக்கிரத்தையும் விரகத்தையும் ஊட்டி வெறும் கற்பனையில் மனிதனை முதலில் சஞ்சரிக்க வைக்கின்றது; பின்பு அடுத்த கட்டத்தில் கற்பனை கலைய விரக்தியில் மூழ்கி சமூகசாரத்திற்கு பதிலாக சமூகச் சீரழிவில் மிதப்பனவாகின்றான். இந்தச் சீரழிவில் ஒரு குழாம் நலன் பெறுகிறது. இவை சமூகத்தின் ஆக்க சக்தியை சிதைத்து ஒரு பகுதி மனிதனைக் கீழ்மைப்பட்டவனாக்கி அந்தக் கீழ்மையின் மீது இன்னொரு பகுதியினரை சவாரி செய்ய வைத்து விடுகின்றது.

மேற்குலக மாதிரிப்படுத்தும் மனப்பாங்கு, அல்லது வெள்ளையரைப் பின்பற்றும் மனப்பாங்குதான் இந்தக் கல்வி முறையால் எமக்கு ஊட்டப்பட்டுள்ளது. இது விடயத்தில் மிக ஆழமான கலாச்சார ஆக்கிரமிப்பு ஏற்பட்டுள்ளது. வெள்ளையரை மேன்மையானவர்களாகவும் எம்மைத் தாழ்வானவர்களாகவும் நாம் எண்ணப் பழக்கப்பட்டுள்ளோம். இதனால் வாழ்விலும், மற்றும் செயல்களிலும் வெள்ளையரைப் பின்பற்றுவதை ஒரு கௌரவமாக கருத வைக்கப்பட்டுள்ளோம். எமக்கு இருப்பதைப் போலத்தான் மேற்குலத்தவர்களுக்கும் இரண்டு கால்களும் இரண்டு கைகளும் ஒரு தலையும் உண்டு. அவர்களால் செய்ய முடிந்ததெல்லாம் எம்மாலும் செய்ய முடியும். எனவே மாதிரிப்படுத்தலுக்கும் பின்பற்றுதலுக்கும் பதிலாக புதியதிற்கும் ஆக்கபூர்வத்திற்கும் ஒவ்வொரு சிறாரும் பயிற்றப்படவும் தூண்டப்படவும் வேண்டும். கல்வியில் உள்ள ஒவ்வொரு குறையினையும் சரிவர அடையாளம் கண்டு அவற்றைச் சத்திர சிகிச்சை மூலம் அகற்ற வேண்டும்.

படித்த கூட்டம் தம்மைச் சமூகத்தில் இருந்து வேறுபடுத்தி, தம்மைச் சமூகத்தின் உயர்ந்த ஸ்தானதிற்கு உரியவர்களாக கருதுகின்றனர். இந்த மனப்பாங்கு கல்வியின் சீரழிந்த பக்கமாகும். இத்தகைய மனப்பாங்கைத்தான் எமது கல்வி எமக்கூட்டியுள்ளது. இந்தப் படித்த வர்க்கத்தவர்களிடம் அந்நியரை நோக்கிய அடிமை மனப்பாங்கும், உள்ளூர் மக்களை நோக்கிய குறுநில மன்னர் மனப்பாங்கும் உள்ளது. உண்மையில் இந்தப் படித்த குழாத்தினர் நிர்வாக ரீதியாகவும், சேவைத்துறை ரீதியாகவும், மற்றும் அனைத்துக் சமூக கட்டுமான ரீதியாகவும் குறுநில மன்னர்களாகவே செயற்படுகின்றனர். பல கட்டங்களில் இந்தக் குறுநில மன்னர்கள் ஆட்சியாளர்களை விடவும் மேலான அதிகாரங்களை நடைமுறையில் கொண்டிருக்கின்றனர். எனவேதான் கல்வி அதிக பண்பாட்டுமயப்படுத்தலுக்கு உள்ளாக வேண்டி உள்ளது.

# இறந்துபோன கனவுகள்

நானும் கனவு கண்டேன்
என் மண் மீது
என் கால்களை மிதிப்பதாய்!

நானும் கனவு கண்டேன்
என் நதி மீது
என் உடல் விழுவதாய்!

ஒரு கறுப்பு இரவில்
கண்ட கனவுகள் யாவும்
வெடிப்பு வெளிச்சத்தில்
சிதைந்து போயின!

இன்று....
நானும் என் தமிழர்களுமாய்
கையில்.... இறந்த
கனவுகளோடு!

*- சீ. அருணாசலம்,*
*மலேசியா*

பாடசாலை பண்பாட்டுத் தொட்டிலாகவும், பண்பாட்டுப் பயிற்சிக் களமாகவும், பண்பாட்டைக் காவிச் செல்லும் வாகனமாகவும், அனைத்து வித்தைகளுக்குமான விளைநிலமாகவும் உள்ளன. ஆதலினால்தான் சமூக நிர்மாணிப்பு என்பது கல்விக் கொள்கையிலும் பாடசாலையிலும் இருந்து ஆரம்பமாகின்றது. சமூக நிர்மாணிப்பின் தொடக்கப்புள்ளி கல்வி என்பதில் மாறுபட்ட கருத்து யாரிடமும் இல்லை. எனவேதான் மூன்றாம் உலகத்தவரைச் சீரழிப்பதற்கு ஏற்ற முதல்தர ஆயுதமாய் கல்வியைப் பயன்படுத்தினர் வெள்ளையர்.

எமது வாழ்வைச் சீரழிப்பதற்கும், மேற்குலகத்தவருக்கு சேவை செய்வதற்கும் ஏற்றவகையில் திட்டமிட்டு உருவாக்கப்பட்ட கலாச்சாரச் சுரண்டலே எமது இன்றைய கல்வியாகும். மூளையிற் பூட்டப்பட்ட இந்த இரும்புச் சப்பாத்தி விருந்து எமது சிறார்களையும் சமூகத்தையும் விடுவிக்க வேண்டும்.

*- மு. திருநாவுக்கரசு*

## இலக்குத் தவறிய காகிதப் பாணம்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# உன்னுடைய மற்றும் என்னுடைய கிராமங்களின் மீதொரு பாடல்

- பா. அகிலன்

எனக்குத் தெரியாது.
ஒரு ஆர்ப்பரிக்கும் கடலோரமோ
அல்லது
வனத்தின் புறமொன்றிலோ
உன் கிராமம் இருந்திருக்கும்.
பெரிய கூழாமரங்கள் நிற்கிற
செம்மண் தெருக்களை
வசந்தத்தில் வந்தமர்ந்து பாடும்
உன் கிராமத்துக் குருவிகளை
எனக்குத் தெரியாது.



மாரிகளில்
தெருவோரம் கண்மலரும் சின்னஞ்சிறிய பூக்களை
நீள இரவுகளில்
உடுக்கொலித்து நீ பாடிய கதைகளை
நிலவு கண்ணயரும்
உன் வாவிகளை
நானறியேன்

காற்றும் துயர்ப்படுத்தும்
இவ்விரவில்
நானும், நீயும் ஒன்றறிவோம்.
ஒரு சிறிய
அல்லது பெரிய
சுடுகாட்டு மேடுபோலாயின
எமது கிராமங்கள்.
அலைபாடும் எங்கள் கடலெல்லாம்
குருதி படர்ந்து மூடியது.
விண்தொட மரமெழுந்த வனமெல்லாம்
மனிதக் குரல்கள் அலைவுற
சதைகள் தொங்கும் நிலையுமாயிற்று.
முற்றுகையிடப்பட்ட இரவுகளில்
தனித்துவிடப்பட்ட நாய்கள் ஊளையிட
'முந்தையர் ஆயிரம்' காலடி பாவிய
தெருவெல்லாம் புல்லெழுந்து மூடியது.
நானும், நீயும் இவையறிவோம்.
இறந்து போன பூக்களை
கைவிடப்பட்ட பாடலடிகளை
நினைவுகூரப்படாத கணங்களைக் கூட
அறிவோம்

ஆனால்
கருகிப்போன புற்களிற்கு
இன்னும் வேர்கள் இருப்பதை
கைவிடப்பட்ட பாடல்
சொற்களின் மூலத்துள் அமர்ந்திருப்பதை
நீ அறிவாயா?
குருதி படர்ந்து மூடிய
கடலின் ஆழத்துள்
இன்னும்
எங்கள் தொன்மைச் சுடர்கள் மோனத்திருப்பதை
அவர்களைப் போல
நீயும் அறியாது விடின்
இன்றறிக
'ஓராயிரம் ஆண்டுகள் ஓய்ந்து கிடந்த பின்'
ஓர்நாள் சூரியன் எழுந்து
புலர்ந்ததாம்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

# ஊருக்குப் போவோம்

நீ படுத்த நிலத்தில்
பகை படுக்க பாய்விரித்து விட்டு
இருக்க இடமில்லாமல்
பாடசாலைகளில்
பாவிகளாய்.....

உன்
நிழல் விழுந்த முற்றம்
பாதத்தின் அடியில் பார்
இன்னமும் அதே மண்முத்
தேரோடும்
தெருவும் பே(ர)ய்
விசாலமான
வீடும் பே(ர)ய்
விளையாடிய ஊஞ்சலோடு
உறவும் போய்....

கலைக் கூடங்கள்
குருவி கலைந்த கூடாய்
நிர்மூலமாய்
நிம்மதியிழந்து
நிலம் எரிகிறது.

சொல்லியும்,
சொல்லாமலும் பிரிந்த
சொந்தங்களும்,

கண்ணிமைக் காதலும்
கானலாய்ப்போக.....
கணமேனும்
மூச்சுவிட உன்னால்
முடிகிறதா.....?

எமனவள்
ஏவிய
அக்கினிப் பேய்களின்
ஆக்கிரமிப்பு
அன்னை மண்ணில்
உன்னுள் இன்னுமா!
உரிமை உரம் ஏறவில்லை...?

கையில் கருவி எடுப்போம்
எல்லோரும் ஒத்தபடி
போருக்குப் போவோம்.
கயவனின் கதை முடிப்போம்.

விடிவு - எம்
விரல் தேடிவரும்
உரிமை மீட்டு
ஊருக்குப் போவோம்.

- பிரியன்

www.tamilarangam.net

# சொல்

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரிக்கு நேராகத்தான் வீடு. "பாட்டி வீடு" என்றுதான் சொல்வார்கள். அங்கேதான் பாட்டியை காணலாம்! கையில் நற்சிந்தனைப் புத்தகத்துடன், 86 வயது. "பிரபாகரன் அட்டூழியத்தை எதிர்க்க உதித்த வீரபுருஷன்" என்பது பாட்டியின் கணிப்பு. தனது பேரனும் பேத்தியும் இயக்கத்தில் இருப்பது அவருக்குப் பெருமை. அடிக்கடி பெருமையாகச் சொல்லுவார். 1958ல் சிங்களக் காடையரோடு நேர்நின்று போராடி காடையரால் வெட்டப்பட்டு இறந்த தமையனார் விசுவலிங்கத்தையும் அடிக்கடி நினைவு கூர்வார். பாட்டி வீட்டார் பணக்காரக் குடும்பம். பாட்டியின் மகன் பாலசுப்பிரமணியம் இலங்கையின் கைகொமிஷனராக இருந்தவர். அவர் பிரிட்டனுக்கான இலங்கை உயர்ஸ்தானிகராக இருந்தபோது சிறீமாவோ பண்டாரநாயக்க தனது மகளான சந்திரிகாவை அவரது மேற்பார்வையிலேயே படிக்கவைத்தார்.

சந்திரிகா பதவிக்கு வந்தபோது "பெடிச்சி கெட்டிக்காரி ஏதும் செய்வாள்" என்ற எண்ணம் பாட்டியிடமும் இருந்தது. கொஞ்ச நாளிலேயே பாட்டி தனது எண்ணத்தை மாற்றிவிட்டார். சண்டை ஆரம்பித்ததிலிருந்து பாட்டி சொன்னார், "இந்தப் போராட்டம் வெல்ல வேணும். அதுவும் நான் கண்ணை மூடுறதுக்குள்ளை. அதைத்தான் நான் கடவுளிடம் வேண்டுறன்." பாட்டி தன்னைச் சந்திப்பவர்களிடம் போராட்டம் வெல்லுமா என்று கேட்பார். அவர்கள் அவநம்பிக்கை கொண்டால் பாட்டிக்கு கோபம் வரும்.

"வெல்லும் எண்டு சொல்லு. வெல்லும் எண்டு உறுதியாய் நம்பினால் வெண்டே தீரும். ஒரு பொல்லாப்பும் வராது."

"சன்சைன்" இராணுவ நடவடிக்கை பாட்டியையும் சாவகச்சேரிக்கு இடம்பெயரச் செய்துவிட்டது. பாட்டியின் பிள்ளைகளும் மருமக்களும் அவநம்பிகை அடைந்து, "இனியென்ன எல்லாம் போச்சுது" எனத் தமக்குள் பேசிக்கொள்கின்றனர்.



பாட்டி தளரவில்லை. அவர்களின் வன்செவிகள் உறைக்கச் சொல்லுகிறார், "போராட்டத்திலை பல சம்பவங்கள் இடம்பெறலாம். அதையிட்டுக் கவலைப்பட்டு என்ன பலன். எங்கடை பிள்ளைகளை ஊக்கப்படுத்த வேணும். அவர்களுக்கு வலு சேர்க்கோணும். நான் சாக முன்னுக்குத் தமிழீழம் காணுவன்"

"........... அதுவுமற்றவர் வாய்ச்சொல் அருள்வீர்" என்று பாரதி சொன்னது இதுதானே!

- இயல்வாணன்

**உண்மைக் கதை**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

# தமிழ் மக்கள் விழித்துக் கொண்டால் வெற்றி நிச்சயம்

www.tamilarangam.net

**தமிழர்கள் அனைவரும் தம்மை விடுதலைப் போராட்டத்தில் இணைத்து தம்மாலியன்ற வகையில் பங்களித்தால் தமிழீழம் கிடைக்கும் என்பதில் எனக்கு பூரண நம்பிக்கை உண்டு என்கிறார் மட்டக்களப்பு கல்லடியைச் சேர்ந்த முதியவரான சீனிவாசகம்.**

**1990-ல் மட்டக்களப்பிலிருந்து இராணுவ நடவடிக்கையின் போது பிள்ளைகளைப் பறிகொடுத்து உடுத்த உடையுடன் தப்பி வந்த இவரை இன்றைய சூழ்நிலை குறித்து வினவினோம்.**

**சசி**

கல்லடியில் பிறந்து வளர்ந்த நான் அங்கு நெல் வியாபாரம் செய்து வந்தேன். 15 வருடங்களின் முன் மனைவியைப் பறிகொடுத்து விட்டு இரு ஆண்பிள்ளைகளுடனும் வாழ்ந்து வந்தேன். 1990-ல் இரண்டாம் கட்ட ஈழப்போர் ஆரம்பமாகிய வேளை விமானத்தாக்குதல்களும், எறிகணைத்தாக்குதல்களும் என் கிராமத்தில் நடப்பதை அறிந்து கொழும்பிலிருந்து ஓடி வந்தேன்.

தமிழ்க்குழுக்களின் ஆட்பிடிப்பிற்கு அஞ்சி இரு பிள்ளைகளையும் வீட்டிற்குள்ளேயே வைத்து வளர்த்தேன். அதனால் அவர்களும் வீட்டுக்குள்ளேயே இருந்தார்கள். அப்போ வீட்டின் மீது விமானம் குண்டு வீசி என் இரு புதல்வர்களும் பலியானதுடன் வீடும் தரை மட்டமாகியது.

கொழும்பிலிருந்து வந்த நான் வீட்டை நெருங்கியதும் வீடு தரை மட்டமாகக் கிடந்ததைக் கண்டும் கதறினேன். வீட்டுக்குள் பிள்ளைகள் இறந்துவிட்டதாக கூறியவர்கள் என்னை நெருங்க விடாது தடுத்தனர். இராணுவம் நெருங்கி வருவதாக கூறி காடுகளை நோக்கி ஓடத் தொடங்கினர்.

பெற்ற பிள்ளைகளின் பிணத்தைக் கூட பார்க்க முடியாத துரதிஸ்டசாலியாக நானும் ஓடியவர்களுடன் சேர்ந்து காட்டுக்குள் ஓடினேன். மூதூரில் வள்ளம் ஏறி திருமலை சென்றேன். வள்ளத்தில் காசு கேட்டபோது கையிலிருந்த மோதிரத்தைக் கழற்றிக் கொடுத்தேன்.


திருமலையிலிருந்து கிண்ணியா ஊடாகப் புல்மோட்டை வந்து அங்கிருந்து முல்லைத்தீவுக் காட்டினூடாக நடந்தோம். திக்குத் திசை தெரியாத பயங்கரமான அந்த அடர்ந்த காட்டினூடாக ஊண் உறக்கம் இன்றி ஐந்து தினங்களாக நடந்து சோர்வடைந்தோம்.

ஆண்கள், பெண்கள், குழந்தைகள், சிறுவர்கள், வயோதிபர்கள் என பலதரப்பட்டோரும் பட்டினிச் சாவை எதிர்நோக்கியபடி அடியெடுத்து வைக்க முடியாது தவித்தோம். யானை உழக்கிய கிடங்கில் தேங்கிக்கிடந்த நீரை இலையால் அள்ளிப்பருகி உடலைத் தெம்பூட்டிய பின் மீண்டும் நடக்கத் தொடங்கினோம்.

பாதையை தவற விட்டு அடையாளம் வைத்து நீண்ட தூரம் நடந்தபின் மீண்டும் திரும்பி வந்து மற்றப்பாதையால் வந்தோம். இப்படியே பல தடவைகள் மாற்றுப் பாதைகளூடாக வழி தவறிச் சென்று திரும்பியிருக்கிறோம். இப்படியாக வார்த்தைகளால் வடிக்க முடியாத வேதனைகளை அனுபவித்துக் கொண்டு மெல்ல மெல்ல அடியெடுத்து வைத்து முத்தையன்கட்டு காட்டை அடைந்தபோது திடீரென வந்த விமானம் எம்மீது குண்டுகளை மள மளவெனப் போட்டது. இதனால் எம்மில் சுமார் நாற்பது பேர் வரையில் பலியாகினர்.

இறந்தவர்களையும் காயமடைந்தவர்களையும் விட்டு விட்டு எல்லோரும் தப்பித்து நாலாபுறமும் சிதறி ஓடிவிட்டனர்; நானும் ஒரு சிலருடன் கால் போன போக்கில் ஓடியபோது இயக்கப் பிள்ளைகள் எம்மைக் கண்டு கொண்டனர். எம்மை அழைத்து வந்து சற்றுத் தள்ளியிருந்த தமது சிறிய முகாம் ஒன்றில் உட்கார வைத்தனர். மானை வேட்டையாடி வந்து சமைத்து உணவு தந்தனர். பல நாட்கள் பட்டினி கிடந்த எமக்கு அது அமிர்தமாக இருந்தது. அங்கேயே படுத்து தூங்கி விட்டோம்.

மறுநாள் அவர்கள் எம்மை அழைத்து வந்து இராணுவ முகாமைத் தாண்டி மடு றோட்டில் ஏற்றி வழியனுப்பி வைத்தனர். நாம் வீதியால் நடந்து மடு முகாமை அடைந்தோம். பின் சில நாட்கள் கழித்து நான் யாழப்பாணம் வந்து கூலி வேலை செய்து பிழைத்தேன். எனக்கு தற்போது 74 வயதாகிறது. இந்தத் தள்ளாத வயதிலும் தோட்டம் செய்து வருகிறேன். இன்று யாழ்ப்பாணத்திலிருந்து இடம் பெயர்ந்து வந்தவர்கள் தாம் இரண்டு




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நாட்கள் ஊண் உறக்கமின்றி பெரும் சிரமப்பட்டு பத்து மைல்கள் நடந்து வந்ததாகக் கூறி வேதனைப்படுகிறார்கள். தள்ளாத வயதில் பயங்கர மிருகங்கள் வாழும் அடர்ந்த காடுகளினூடாக எத்தனை இரவு பகல்களாக குடிக்க தண்ணீர் கூட இல்லாமல் நடந்தோம். இவர்கள் வீதியால் சில மைல் தூரம் நடந்து விட்டே இவ்வாறு வேதனையுறுகிறார்கள்.

தற்போது இடம்பெயர்ந்தவர்கள் ஒரு சில பொருட்களையாவது தம்முடன் எடுத்து வந்தார்கள். இவர்களுக்கு தங்குவதற்கு பல முகாம்கள் அமைத்துக் கொடுக்கப்பட்டதுடன் சமைத்த உணவும் வழங்கி பராமரிக்கப்படுகிறது. ஆனால் நாங்கள் வந்த வேளை எம்மை எவரும் அரவணைக்கவில்லை. நாமாகவே தங்க இடம் தேடி உணவுக்கு வழியும் தேடி வாழ்க்கையை ஓட்டினோம்

மட்டக்களப்பில் ஐந்து ஆண்டுகளின் பின் தற்போதுதான் மக்கள் நிம்மதியாக வாழத் தொடங்கியதாக அறிகிறேன். அங்கு இராணுவம் ஆக்கிரமித்திருந்த காலத்தில் மக்கள் பட்ட துன்ப துயரங்களை வார்த்தையில் வடித்துவிட முடியாது. கணவனைக் கட்டி வைத்து விட்டு கண் முன்னே மனைவி மானபங்கப்படுத்தப்பட்டாள். கைக்குழந்தையைக் தூக்கி கீழே எறிந்து விட்டு வருங்காலப் புலி எனக்கூறி துப்பாக்கி அடிப்பாகத்தால் குத்திக் கொலை செய்தார்கள். இவை கூட சாதாரண விடயமாகும் அளவிற்கு அங்கு இராணுவத்தின் கொடுமைகள் தலைவிரித்தாடின.

இங்கு மக்கள் அப்படியான நிகழ்வுகளை இன்னும் சந்திக்கவில்லை. அதனால் தான் விடுதலையின் பெருமையை இன்னும் உணராதவர்களாக இடம்பெயர்ந்த வண்ணம் இருப்பதுடன் வளமான வாழ்வையும் எதிர்பார்க்கின்றனர்.

இன்று நான் மிகவும் வேதனையடைகிறேன். என் இருபிள்ளைகளையும் வீட்டில் பூட்டி வைக்காது விடுதலைப்புலிகளுடன் இணைந்து நாட்டுக்காகப் போராட விட்டிருந்தால் இன்று தலை நிமிர்ந்து வாழ்ந்திருப்பேன். அன்று நான் விட்ட தவறை எண்ணி இன்று மிகவும் வேதனையடைகின்றேன்.

யாழ்ப்பாணக் குடாநாட்டில் வாழும் மக்கள் அன்று நன்கு சிந்தித்து வீட்டுக்கொரு பிள்ளையையாவது நாட்டுக்காக அனுப்பியிருந்தால் இன்று இந்த நிலை வந்திருக்காது. இப்பவும் காலம் போகவில்லை. இங்குள்ள ஒவ்வொருவரும் தத்தமது இயல்புகளுக்கேற்ப விடுதலைக்காக தம்மாலியன்ற பங்களிப்புகளை வழங்கவேண்டும். அப்படி வழங்கினால் இழந்த பிரதேசம் விரைவில் விடுவிக்கப்படும். விடுதலைப்புலிகள் நிச்சயம் மீட்பார்கள் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு.

இப்பவேனும் மக்கள் சிந்தித்துச் செயலாற்றத் தவறினால் இப்போது அனுபவிப்பதை விட மிக மோசமான நிலைக்கு எல்லோரும் தள்ளப்படுவோம். எமது இனம் அழிவதைக் கூட தடுக்க முடியாது போகும். என்னைப்போல் தள்ளாத வயதில் இயலாமையை எண்ணி வேதனைப்படுவதில் பயனில்லை.

இன்று பட்ட துயரங்கள் விடுதலையை உணராது சுயநல நோக்கில் வாழ்ந்த மக்களுக்கு ஓர் விழிப்புணர்வை ஏற்படுத்தியுள்ளது. அவர்களை விழிப்படையச் செய்துள்ளது.. இந்த நிலையிலாவது எம் தமிழ் மக்கள விழித்துக் கொண்டால் வெற்றி நிச்சயம் எனக்கூறி முடித்தார் அந்த வயோதிபர். ★







தமிழீழ விடுதலைப் புலிகள் - ஜேர்மன் பணியக
கலைபண்பாட்டுக் கழகத்தினரால் தயாரித்து
வெளியிடப்பட்ட இசைத்தட்டுக்கள்


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net








ஜேர்மனி - 'கிறெஃபில்ட்' நகரத்தில், 25-11-95 அன்று மாவீரர்நாள் விழா 7000-ற்கும் மேற்பட்ட மக்களால் உணர்வுபூர்வமாகக் கொண்டாடப்பட்டது.




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




தமிழ் மக்களுக்கெதிரான சிறீலங்கா
அரசின் திட்டமிட்ட
இனப்படுகொலையைக் கண்டித்து
தென்னாபிரிக்கா வாழ் தமிழ் மக்கள்
நடத்திய கண்டன
ஒன்றுகூடலின்போது....










பிரான்ஸில் நடைபெற்ற 7வது மாவீரர்நாள் நிகழ்ச்சிகள்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# காற்று வேலி

"ஆ... என்ன வெயில்!"

ஏன் இந்த பஸ்சுக்குள்ள வேறு ஏறினோம். பஸ்சை விட்டு இறங்கிய போதும் அதே வெப்பம் அள்ளி வீசியது. அவரசமாகவே நடக்கி றோம். கொஞ்சத்தூரம் கூட நடந் திருக்கமுடியாது திடீரென வானம் கறுத்தது; இடி முழங்கியது; புயல் போன்ற காற்று வீசியது. கல்லு கொட்டுவது போன்ற மழைத்துளி கள். எதிர்பார்க்கவில்லை இப்படி வரும் என? அவசரம் அவசரமாக ஒதுங்குகின்றோம் கடையின் முன் பக்கம் ஓரமாக. வெள்ளத்தால் வீதி நிரம்புகிறது. மழைத்துளிகள் மீண் டும் மீண்டும் பெரிது பெரிதாகவே விழுகின்றன. நீர்க்குமிழிகள் பரந்து தோன்றுகின்றன. விழ விழ குமிழி கள் தோன்றிக் கொண்டே இருந் தன. திடீரென லைற் ஓப் பண்ணு வது போன்று மழை நிற்கிறது. சில நீர்க்குமிழிகள் வெள்ளத்தில் அசைந்து அவையும் அழிந்தன. இயற்கையின் மாயாஜாலத்தில் மனம் நிலைத்தது. இதுவா இயற்கை? மரம் இயற்கை, நீர் இயற்கை, வெய்யில் இயற்கை, காற்று இயற்கை, மனிதனும் இயற்கை, அவளும் சீற்றம் கொண்ட இயற்கை. மழை ஓய்ந்தது இயற்கைதான். அவள் மனதில் எந்த மழை பெய்தது? ஓ அவள் மனதில் கள்ளமாய் புகுந்து களங்கம் விளைவித்த அந்தக் கண் ணாளன் யார்? நினைவுகளும், கற்ப னைகளுமாக கரைந்துபோன இரண்டு வருடங்களை தன் எண் ணத் தரைக்கு மீண்டும் மீண்டும் இழுத்து வருவாள் ரம்மியா. அவள் - அவன் கண்கலந்தது அந்த பொங் கல் விழாவில். அமைதியும், பொலி வும், அலங்காரமுமாக காட்சியளித்த அந்த பொங்கல் விழாவின் மும்மு ரத்தைக் கூர்ந்து கவனித்துக் கொண்டே நடந்தாள். இந்த அன் னிய நாட்டில் பொங்கல் விழா என்றால் என்ன என்று புரியவைத் தது அந்த நாள். ஜேர்மனிக்கு ரம் மியா ஐந்து வயதில் அகதி என்ற முகவரியிட்டு தஞ்சம் புகுந்ததை அம்மா அடிக்கடி நினைவுகூருவாள். வாசலில் பூக்கோலமும், நிறைகுட மும் விளங்க குத்துவிளக்கை இரு கைகளாலும் ஏற்றியவாறு, முகத் திற்கு சிரிப்பினைக் கட்டாயமாக வரவழைத்துக் கொண்டு நின்ற அந்த உருவம் அவளின் மனதில் ஒரு கணம் உரைத்தது. மண்டபம் தமிழ் மொழியாகவே நிறைந்தது.

விழா மண்ணுக்காக உயிர்நீத்த மைந்தர்களின் நினைவூட்டலுடன் ஆரம்பமானது. ஒரு கையில் சில மஞ்சள் பத்திரிகைகளுடனும் ஒலி பெருக்கியுடனும் புன்னகை தவழ பொங்கல் வாழ்த்துக் கூறி தன் னைப் பிரசன்னா என அறிமுகம் செய்து கொண்டு மேடைக்கு வந் தான் அவன். உறைந்து இறுகியது போன்ற உணர்வை அவள் அடைந் தாள். "உழுதுண்டு வாழ்வோரே வாழ்வர் மற்றெல்லாம் தொழுதுண்டு பின் செல்பவர்" என்ற திருக்குறளை விளக்கிய விதம்; அவன் வாயில் நின்று உதிர்ந்த தமிழ்... அவன் சொன்னவை எல்லாம் அவளுக்குப் புரியவில்லை. தன் தாய்மொழி யையே விளங்காமல் போகும் போது அவள் வெட்கிக் குனிவாள். என்ன செய்வது காலம் செய்த கோலம்.

தமிழ் படிக்க அக்கறை கொண்ட அவள் இன்னும் உத்வேகத்துடன் இறங்கினாள். ஞாயிற்றுக்கிழமைக ளில் நடக்கும் தமிழ் மக்களுக்கான தமிழ் வகுப்பில் சேர்ந்து கொண் டாள். பாடசாலையின் நிர்வாக ஒழுங்குகளுக்கும், தாய் நாட்டின் விடுதலைக்கான செயற்பாட்டின் பலவற்றிற்கும் அவன் பொறுப்பாள ராக இருப்பதினை அவள் நண்பி கள் மூலம் அறிந்துகொண்டாள். அவள் பாடசாலையின் தமிழ் விழாக்களுக்குச் செல்வது அவனைக் காணும் எண்ணத்துடனாகவும் இருக்கத் தொடங்கியது.

மனம் இப்படி ஒரு சலனத்துக் குட்படுவதை நினைக்கும்போது, ஏன் என்ற கேள்வி அவளை உறுத் தும். இதுவா ஒருவர் மீது ஏற்படும் காதல் என்பது? கேள்வியானாள்? பதிலைத் தேடினாள் அவனில். தன்னையும் அவர்களின் நிர்வாக அமைப்பில் அங்கத்துவராக சேர்த் துக் கொண்டாள். பிரசன்னாவைச் சந்திக்கும் கதைக்கும் சந்தர்ப்பங்கள் அதிகரித்தன. அவனின் விடுதலை உணர்வுகளும் தன்னலமற்ற எளி மையான போக்கும் அவளைக் கவர்ந்தன.

ரம்மியா பெற்றோருக்கு ஒரே பிள்ளை என்ற காரணத்தினால் செல்லமும், கண்டிப்புடனும் வளர்ந் தவள். ஆவணி மாதக் கலைமாலை நிகழ்ச்சிக்கான ரிக்கற் விக்கும் பொறுப்பினை மாணவ மாணவிக ளுக்குக் கொடுப்பதற்கான கலந்து ரையாடலுக்கான கூட்டம் நடை பெற இருந்தது. ரம்மியா பெற்றோர் களிடத்தில் தான் கூட்டத்திற்கு போகும் விடயத்தினைக் கூறிய போது அம்மா தொடங்கிவிட்டாள் தன் பல்லவியை வாசிக்க. "இவ ஒருத்தி ஊருக்குத் தொண்டு செய்ய வெளிக்கிட்டு விட்டா. நீங்கள் இனி அடக்கமாக விட்டுக்குள்ள இருக்கப் பழகுங்கோ." அம்மாவுக்கு கொஞ்ச நாட்களாக அவள்மீது பயம், அவளுடைய பதினெட்டில் பயம். அவளின் விடலையில் பயம். தாய் அவள் மீது பிரயோகிக்கும் அடக்கு முறை பலமாகி வாக்குவாதப்பட்டு உள்வீட்டு வன்முறையாகி அப்பா வின் தலையீட்டுடன் அடங்கிப் போகிற நாட்கள் பல. ஒருவர் முகம் ஒருவர் பார்க்க மறுப்பர். அப்பா அந்த மௌனத்திரையைக் கிழிப் பார், ரம்மியா சாப்பிட வா, அம் மாவையும் கூட்டி வா என்று... நித்தி ரையுடன் அமைதி நிலவும்.

விடிந்தால் தனி உள்ளம். எல் லோருக்கும் தனி எண்ணம். அப்பா ஒருபுறம் வேலையாக, அம்மா இன் னொரு புறம் வேலைக்கு, அவள் பாடசாலையுமாக ஒவ்வொரு திசை யாக மாறிக் கொள்வார்கள். கூட் டத்தில் செஞ்சோலைப் பிள்ளைக ளுக்கான நிதி சேர்த்தல் பற்றி பிர சன்னா சொன்னான். எம் நாட்டின் எதிர்காலத்தைக் கட்டியெழுப்பும் சிறார்கள் இன்று தாய், தந்தை, சகோதரங்கள், உற்றார் உறவினரை இழந்து நிர்க்கதியாகி நிற்காமல் அவர்களை தலைவர் தன் அரவ

www.tamilarangam.net

னைப்புக்குள் அன்புடன் வைத்து வளர்க்கும் நிலையமே செஞ்சோலை, காந்தரூபன் அறிவுச்சோலையென விளக்க உரை நிகழத்தினான். எங்கள் செல்வங்களுக்கு இல்லை என்ற குறை இருக்கக்கூடாது. அவர்கள் எதிர்காலம் ஒளிமயமாக அமைவதே எல்லோரினதும் விருப்பமாக இருக்க வேண்டும் எனக்கூறிய வண்ணம் ரிக்கற்றுகளை விற்பனை செய்பவர்களிடத்து நேரிடையாகவே கொடுத்தான். ரம்யாவிடத்து சில ரிக்கற் புத்தகங்களை நீட்டியபோது அவள் பார்வை அவனில் நிலைத்தது. அவனும் அதை உணர்ந்தான். அவன் ஒருகணம் தடுமாறினான். அந்நிலையில் இருந்து அவன் தன்னைச் சுதாகரித்துக் கொள்வதை அவள் உணரத்தவறவில்லை.

சொல்ல நினைத்து சொல்லாமல் ஒரு வருடம் கழிந்தது. அவள் தன்னை விடுதலை உணர்வுகளுடன் சேர்த்துக் கொண்டாள். மாவீரர் தின விளையாட்டுப் போட்டியில் அவள் மும்முரமாகவே பங்களித்தாள். அவனும் பங்கு பற்றினான். விளையாட்டு மைதானம் தமிழ் மக்களால் நிறைந்திருந்தது. விளையாட்டு வீரர்களை உற்சாகப்படுத்தும் சத்தங்கள் வானைக் கிழித்தன. 100 மீற்றர் ஓட்டத்தில் முதல் இடத்தை பிடித்துக்கொண்டு ஓடியவள் திடீரென ஏன் விழுந்தாள் என அறியமுடியவில்லை.

முழங்காலில் பலத்த உரசல் காயத்துடன் இரத்தம், மதியநேரம் என்ற காரணத்தினாலோ அதிகம் கசிந்தது. அவளை விலத்தி சக மாணவிகள் முந்தி ஓடி விட்டார்கள்.

இருவர் தன் நோக்கியவண்ணம் ஓடிவருவதை அவதானித்தாள். தன்னை கைதாங்கலாய்த் தூக்கி முழங்காலில் தன் கை பதித்து இரத்த ஓட்டத்தை தடுத்தான் ஒருவன். அவள் ஒரு கணம் அதிர்ந்தாள். அது யாரும் இல்லை, அவனே. ஆபத்துக்கு பாவம் இல்லை என நினைத்தான் போலும். வலி தாங்க முடியாது, அவள் அவன் தோள்களை இயல்பாகவே இறுக்கிப் பிடித்த வண்ணம் "நோகிறது விடுங்கோ" என கத்தினாள். அவள் தான் தோல்வியுற்ற வெட்கம் ஒரு புறம், அவன் கை பட்ட ஸ்பரிசம் ஒரு புறமுமாக மகிழ்ச்சியுடன் நடந்தாள். பல முறை "நன்றி, நன்றி" கூறி நடந்தாள். அவன் பதிலுக்கு "இதுக்கா, இது ஆபத்து உதவி தானே, கவனம்" என்று கூறி விலகினான். அவள் தன்னை அவனுடன் இணைத்து கற்பனை உலகில் மிதந்தாள்.

இந்த நிகழ்வுக்கு பின் அவள் மனநிலை மிகப் பாதிக்கப்பட்டாள். தன் காதலை அவனுக்கு வெளிப்படுத்த துடித்தாள், துணிந்தாள். ரம்மியா தன் காதல் உணர்வுகளை ஆத்ம நண்பி மதிக்கு அடிக்கடி கூறுவாள். தன் காதலை தான் வெளிப்படுத்த இருப்பதைக் கூறிய போது மதியின் கருத்துக்கள் அவளுக்கு முரணாக வந்தன. "நீ வீட்டு நிலையினை மறந்து செயல்பட நினைக்கிறாய். அவர்கள் புரட்சிகர வாழ்க்கைக்கு உட்பட்டவர்கள். அதற்குத் தகுதி எனக் கருதுவோரையே வாழ்கைத் துணையாக ஏற்றுக்கொள்வர். நீ என்ன செய்வாய்? இதை எதிர் கொள்ளும் தைரியம் உனக்கு இருக்குமானால், உன் விருப்பம்" எனக் கூறி இடையில் தான் தடையாக நிற்காது விலகிக் கொண்டாள். துணிந்தாள், தன் நிலை வெளிப்படுத்த காலம் வந்தது.

அந்த நாள் அதுவும் மாவீரர் நாள். அவள் சந்தித்து வெளிப்படுத்த துணிந்த நாள். விழாவின் செயற்பாடுகளில் அவன் தன்னை முழுமையாக ஈடுபடுத்தி விழா முடியுந் தருணத்தில் ஓய்வுக்காக ஒதுங்கிய நேரம் ரம்மியா அவனுடன் பேச முனைந்தாள். தன் எண்ணக்கிடக்கையை அவனிடம் கூறிய போது அதை எதிர் பார்த்தவன் போல் அதிர்ச்சியே கொள்ளாது பதிலளித்தான். "ரம்மியா, நானும் ஓர் சராசரி மனிதனாகத்தான் இருந்தேன். உன் நிலை எனக்குப் புரிகிறது. ஆனால் அதைப் பெரிதாக நினைக்கும் அளவில் என் மனநிலை இல்லை. எல்லோருக்கும் ஒரு கதைப் பின்னணி இருக்கிறது. ரம்மியா அந்தப் பின்னணியினால் நான் பெரிதும் பாதிக்கப்பட்டவன். 87-ல் இந்திய ராணுவ வஞ்சக வலையில் எனது குடும்பம் அகப்பட்டது. என் கண்முன்னாலே என் தாய் தந்தையர் கொல்லப்பட்டனர். என் சகோதரி அவர்களினால் இழுத்துச் செல்லப்பட்டு மறு நாள் அவளும் பிணமானாள். நானும் அவர்களின் சிறையில் அகப்பட்டு வெளியே வந்தபோது, என் உறவினர்களினால் கட்டாயப் படுத்தப்பட்டு இங்கு அனுப்பப்பட்டவன். என் காயம் ஆறாத வடுவாகியது. என் மூச்சு இருக்கும்வரை என் தாய் நாட்டுக்காகவே வாழ்வது என முடிவாகியவன். உன்னால் என் பாதையில் நடந்துகொள்ள முடியாது." அவள் முடிவை மாற்றிக் கொள்ளும்படி கூறினான். அவள் "நான் காத்..." என்று கூறுமுன்னே கையால் சைகை செய்து நிறுத்தினான். "காலத்தால் நீ வெல்ல முடியும் என எதிர்பார்ப்பது முட்டாள் தனம். இதை விடு, என் விடுதலை உணர்வை நீ புரிந்தால் போதும், என் காதலுக்காக" என்று கூறி அவளிடத்திலிருந்து எந்தப் பதிலையும் எதிர்பாராது நடந்தான். அவன் நடந்த திசையைப் பார்த்த வண்ணம் அவள் நின்றாள்.

"தென்றல் வந்து என்னைத் தொட்டுக் கேலி செய்தது, நீ சென்ற இடம் சொன்னபின்பு வேலி போட்டது." என விழா இசை நிகழ்ச்சியில் பாடுவது அவள் காதில் விழுந்தது.

## புலியாய் மாறு

வெடியோசை கேட்டெங்கே
வீழ்ந்தெழுந்து ஓடுகிறாய்?
முடியாத தொன்றில்லை
மூச்சிருந்தால்!
விடிகாலை -
வெளியா யெறிக்குதுபார்
வெள்ளிதிசை காட்டுதுபார்
ஒளிவானேன்?
ஓடியிங்கே வா!

.......................................

குண்டெறிந்து உறவுகளை
குருத்துக்களைக் கனவுகளை
நின்றபடியே புதைத்துச்
சென்றவரின்
வண்டழிந்து
சண்டிலிப்பாய் குளத்துக்கும்
சாவடைந்து போனதுவாம்
முந்தியதைப் பார்
புலியாய் மாறு!

- நிம்மதி

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்




**இனவாத ஆட்சியில்...**
**மனம்நோகும் காட்சி!**

நோய் சுமந்து வந்தவரை
அணைத்துக் காத்து...
கண்ணீர் துடைத்து....
சிரிக்கவைத்து அனுப்புகின்ற தாய் உறவு.....
தனித்துக் கிடக்கிறது!

www.tamilarangam.net

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

Printed by Vasan Litho Printer (London) - 0181-6404366